இலக்கியச் சுவை

முதற் பாகம்—கம்பர்.

THE MADURA TAMIL SANGAM

ம. ரா. மாணிக்கம், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சர் தியாகராயர் கல்லூரி, சென்னை.

8, இரத்தினசபாபதி முதலியார் தெரு,
சென்னை-21.

உரிமை ஆசிரியர்க்கே

மே : 1956

THE MADURA TAMIL SANGAM

விலை ரூ 1—12—0

வெல்டன் பிரஸ், 146, திருவொற்றியூர் ஐரோட், மதராஸ்-21.

முன்னுரை

நூலாசிரியரின் குறிக்கோள் இன்னதெனவறிந்து அவரியற்றிய நூல்களைக் கற்றலே கற்கும் நெறிகளுள் தலையாய நெறியாம். அவ்வாறு கற்பின் பிறவற்றை நூலாசிரியர் மீது ஏற்றிச் சொல்வதற்கும், ஏற்றிச் சொல்கின்றார்களென்பதற்கஞ்சி அதனைத் தள்ளுங்கள்; இதனைமட்டுங் கொள்ளுங்கள் என்பதற்கும் வாய்ப்பிராது போகும்.

காப்பியங்களைக் காப்பியக் கதை யுணர்வோடுதான் கற்க வேண்டும். சீதை பேசுகின்றவிடத்தைச் சீதையின் நினைவை அறவே விடுத்தோ, யாரோ ஒரு பெண் பேசுகின்றாளெனக் கொண்டோ கற்பின் ஆசிரியரின் உள்ளுணர்வும், இலக்கியச் சுவையும் அறியப்படுமாவென்பது ஐயத்திற் குரியதே.

கம்பரின் நோக்கம்—ஆசை காசில் கொற்றத் திராமன் கதை மேலதே. அந் நோக்கங் கொண்டு கற்றாலன்றி அவர் நூற்சுவையை அநுபவிக்க வியலாது.

இலக்கியச் சுவையின் முதன் மலராக—கம்பரைப் பற்றியதாக, வரும் இச் சிறுநூல் இந் நோக்கத்துடனேயே யெழுதப்பட்டதென்பதனைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ம. ரா. மாணிக்கம்.

உள்ளுறை

		பக்கம்
1.	நூலின் நோக்கம்	1
2.	அறிமுகப்படுத்தும் நெறி	17
3.	தலைமை காத்தல்	27
4.	வளர்க்கும் வகை	38
5.	மாற்றுந் திறம்	57
6.	மாறு வேடம்	70
7.	தூது போதல்	82
8.	அறம் வளர்க்குந் திறம்	97

THE MADURA TAMIL SANGAM

1. நூலின் நோக்கம்.

கம்பர் கொண்ட கதையை விடுங்கள்; கவித்திறனை மட்டும் காணுங்கள் என்பாரும் கதைத் தலைவர்களைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்; அவர்களனைவரும் கம்பருடைய கற்பனையி லெழுந்த சித்திரங்களே என்பாருமாக மிகப்பலர் காட்சியளிக்கின்றனர் இன்றைய இலக்கியவுலகிலே. கதையை யறவே விட்டுக் கவித்திறனைக் காணவியலுமா வென்பதையும் கற்பனையி லெழுந்தவர்களைக் கொண்டு காப்பியம் இயற்றவியலுமா என்பதையும் இயலுமேனும் அது கற்பாரைக் களிக்கச்செய்யுமா வென்பதையும் அவர்கள் சிந்தித்துக் கூறுகின்றார்களென்று சொல்வதற்கில்லை. கம்பருடைய காதைக்குத் தாம் புது விளக்

கந் தருவதாகவும் இன்றைய சூழ்நிலையி லிருந்து கம்பர் தப்பிப்போகத் தாம் வழி வகுத்து விடுவதாக வும் கருதி அன்னோர் மகிழ்வர். அவர்கள் போன்று கம்பரும் அந்த அளவு கதையை யெளிதாகக் கருதி யிருப்பாராளுல் கதையை விட்டுக் கவித்திறனைமட்டும் காணுவதில் மற்றவர்க்குந் தடையேது மிராது. கம்பர் கதைமீது கொண்ட அளவற்ற அன்பினுலும் அனை வரும் அதனைக் கற்றுணர வேண்டுமென்னும் அவாவினுலுமே அவர்கள் இங்ஙனங் கூறுகின்ருர் கள் என்று கருதவேண்டி யிருக்கின்றது. அவ்வாருயின் கம்பர் நூலைக் கற்கும் நெறி யாது என்ற வினு எழலாம்.

நூலாசிரியர்களின் வாழ்க்கை வரலாற்றை யறிந்து அவர்கள் வாழ்ந்த காலத்திய அரசியல் நிலை, மக்கள் மனநிலை, சூழ்நிலை இன்னோ ரன்னவற்றைப் பின்னிறுத்தி அவர்களின் நூல்களைக் கற்பதே இலக் கியச் சுவையுணர்வு பெறுவதற்குரிய வழியாமென்பர் மேலைநாட்டு இலக்கிய வாசிரியர்கள். தமிழ்ப் புலவர் களின் வாழ்க்கை வரலாற்றைத் திட்ட வட்டமாக அறிந்திருக்கும் நிலையில் நாமில்லை. தமிழ் நாட்டின் வரலாறும் நமக்கு அன்னதே. எனவே இம்முறையிற் பயிலுதல் தமிழ் இலக்கியங்களைக் கற்க விரும்புவார்க் குப் பெரும்பாலும் இயலாது போகின்றது.

"அறிதோ றறியாமை கண்டற்ருல்" என்பது வள்ளுவர் வாய்மொழி. நூல்களைப் பலமுறை படிக்கும் பொழுது ஒவ்வொரு முறையும் முன்னர் நாம் கொண் டிருந்த பிழைபாடு தோன்றும் என்பது வள்ளுவர்

கருத்து. பிழை நீங்க அறிந்த பின்னர்ப், படிக்குந் தோறும் நூலின் சுவை ஒருகாலைக் கொருகால் மிகுந்து தோன்றும் என்னுங் கருத்தில் அவரே பின் னும் "நவில் தொறும் நூல் நயம் போலும்" என்பர். எனவே, ஒவ்வொரு நூலையும் பன்முறை படிக்க வேண்டுமென்பது வள்ளுவர் கற்கும்முறை குறித்து வகுத்த வழியாதல் அறியப்படும். நூலாசிரியர் ஒரு நூலை யாத்தற்கு மூல காரணம் என்னவென்பதை யறிந்து கற்றல் அந்நூலின் சுவையையுணர்வதற்குரிய காரணங்களுள் சிறந்த தொன்றாகும். தமிழ் நூல் களுள் சங்க மருவிய நூல்களைத் தவிர ஏனையவை பெரும்பாலன சமய நூல்கள். எனவே அவை சமய நோக்க முடையனவாதல் அறியப்படும். சமயங்களை வளர்த்தலின் மூலம் தமிழ் இலக்கியங்களையும் வளர்த் துச் சென்றார்கள் அப்புலவர் பெருமக்கள். ஆகவே, நூலின் நோக்கமறிந்து நூலைக் கற்கவேண்டுமென் பது தமிழிலக்கியங்கட்குப் பெரிதும் ஏற்புடைத்தாக விருக்கின்றது.

நூலாசிரியர் நோக்கம் இன்னதென்பதை யறிந்து கற்றால் அந்நோக்கம் நிறைவேற ஆசிரியர் மேற்கொள்ளும் முறைகளும், தள்ளுவனவும், கொள்ளு வனவும் அறியப்படும். ஆசிரியருடைய விருப்பு வெறுப்புக்களை யறிந்துகொள்வதற்கு அது தக்க சாதனமுமாகும். கதையில்வரும் பாத்திரங்களின் மூலம் ஆசிரியர் தம் கருத்தை எவ்வாறு நிறைவேற் றிக் கொள்கின்றார் என்பதனை நூல் நோக்கமறிந்து கற்றாலன்றி அறியவியலாது. தேவையற்றவை என்று சொல்லுமளவிற்கு அமைந்து கிடக்கும் சில பகுதி

களின் உள்நோக்கத்தை யறிந்துகொள்ளவு மியலாது. இவைமட்டுமல்ல; வேறுபல நோக்கங்கள் இதன்கண் இல்லையே யென்பதற்கும் வாய்ப்பிராது. நம் நோக் கங்களை ஆசிரியர்களின் மீது ஏற்றிச் சொல்வதற்கும் வழியே யிராதுபோகும். இதன் இன்றியமையாமை கருதியே பண்டைப் புலவர்கள் அவையடக்கத்தின் கண் தம் நோக்கம் இன்னதென்பதைத் தெளிவாகக் கூறிச் சென்றார்கள்.

ஒரு நூலாசிரியர் கொண்ட நோக்கத்தில் நாம் கருத்து வேறுபாடு மட்டு மன்று; வெறுப்புமுடையவர் களாக விருக்கலாம். ஆனால் அவர் வாழ்ந்த காலத் திருந்த புலவர்களின் நோக்கம் எவ்வாறிருந்தது என் பதனை யறிதல் பெரும் பயனுடைத்தாம். ஒருவரின் நோக்க மறிந்த பின்னர், அவர் வாழ்ந்த காலத்திய புலவர்களின் நோக்கமும் அதுவேயாதல் அறிந்த பின்னர் அவர் மீது குறை கூற ஏது வென்ன விருக் கின்றது? நோக்கத்தை மறைப்பதும் திரித்துக் கூற முயல்வதும் பெரும் பிழைகள் மட்டுமல்ல; இலக்கிய நெறியு மன்று. வேறு பல காரணங்களை முன்னிட்டு, இன்றைய சூழ்நிலையை உள்ளிட்டு, வேறு பல கூறுவது வேண்டாதன கூறுதலேயாம். மூல காரணத்தை யறிந்து அந்நோக்கத்தோடே நூலைக் கற்றறிந்து பெறும் இன்பமே இலக்கிய வின்பமாகும். இலக்கியங் களைக் கற்கும் நெறிகளுள் தலை சிறந்ததும் அதுவே யாகும். நூலாசிரியர்கள் நம்மிடமிருந்து எதிர்பார்ப் பதும் இஃது ஒன்றேதான். நோக்கத்தை மறைத்துக் கூறிக் காண்பதாகக் கூறப்படும் இலக்கியவின்பம் கானல் நீரைக் கையால் முகந்துண்டு பெறும் இன்

யத்தை யொக்கும். நோக்கத்தையுணர்ந்து படிக்கும் பொழுதுதான் விலை யிடற்கரிய, அரும்பெறன் மணிகள் வாருங்களென அழைப்பது போன்று ஆங்காங்கே மின்னொளிவிட்டு விளங்கும். இன்பவூற்றுக்கள், அன்புக் கனிகள் ஆங்காங்கே தோன்றி நம் அயர்வைப் போக்கும். நோக்கமறிந்து கல்லாதார் பலவற்றைப் பிறழவுணர்ந்தும் பலவற்றை வெற்றுரை யெனக் கூறியும் அமைவர்.

கம்பர் வாழ்ந்த காலத்தைச் சிறிது கண்முன் நிறுத்திப் பார்ப்போமாயின் அவர் கொண்ட நோக்கம் அவர்காலத்திய நோக்கமாக விருந்தமை அறியப்படும். திருவள்ளுவர் சமயப் பொதுநோக்கங் கொண்டு நூலியற்றியதற்குரிய காரணங்களுள் அவர் வாழ்ந்த காலமும் ஒன்று என்பதனையும் இங்கு நினைவு கூர்தல் வேண்டும். கம்பர் வாழ்ந்த காலம் சைவ வைணவங்களின் பொற்காலம் எனப்படுங் காலம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருட் பாசுரங்களை யியற்றிச் சமயங்களை வளர்த்த காலத்தை யடுத்து வாழ்ந்தவர் கம்பர். பிரபந்தங்களும் தேவார திருவாசகங்களும் பெருமை பெற்றிருந்தன அவர் காலத்தில். மக்கள் சைவர்களாகவோ அன்றி வைணவர்களாகவோ அன்று காட்சியளித்தனர். சிவன் கோவிலும் திருமால் கோவிலும் எண்ணற்று விளங்கின அன்று நாடு முழுவதும். கோவில்களில் திருமுறை யோத நிவந்தங்கள் தந்து போற்றினர்கள் வேந்தர்கள். அரசர்களின் ஆதரவு சமயங்களுக்கு நிரம்பவிருந்த காலம் அது. இச்சூழ்நிலையில் வாழ்ந்த கம்பர் சமயப் பற்றுடையவராக வன்றி மற்றெவ்வாறு இருந்திருக்கக்கூடும்?

வழிவழியாகத் திருமாலைப் போற்றும் குலத்தின் வழி வந்தவர் கம்பர். இராமனை அன்று நாட்டு மக்கள் மனிதனாக அன்று; அறத்தை நிலைநாட்ட அவதரித்த தேவனாகப் போற்றினார்கள். ஆகவே, கம்பர் இராமகாதையில் பற்றுக்கொண்டார். வான்மீகி தந்த வடமொழிக் கதையையும் அறிந்தார். வான்மீகிக் கதையைத் தம் கால நிலைக்கேற்ப, மக்கள் மனநிலைக் கேற்பப், பழக்க வழக்கங்கட் கேற்பப் பாடவேண்டு மென்று ஆசிரியர் கருதினார். இராமகாதையின் மீதுள்ள ஆவல் அவரைப் பின்னின்று உந்திற்று. ஆகவேதான் அவர் அவை யடக்கத்தில்

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ

எனத் தம் சிறுமையையும் நூலின் பெருமையையும் இரண்டிற்கும் இடையில் நிற்கும் தம் ஆசையின் அளவையும் வெளியிட்டுத் தொடங்கினார். தாம் இராமகாதையைப் பாடுவதற்குரிய முதல் காரணம் அதன் மீது கொண்டிருந்த ஆசையேயன்றி வேறின்று என்பதைத் தெளிவுபடுத்தி யிருக்கின்றார் ஆசிரியர். பாலிடத்துப் பூனை கொண்டிருக்கும் அன்பிற்கு அளவு ஏது? 'நிறைய பாலைக் குடியுங்கள்' என்னும் அறிவுரையைக் கேட்பதற்கு முன்னதாகவே பூனைகள் எல்லா உணவுகளிலும் பாலுணவே சிறந்ததெனவறிந்து, தாமாகத் தேடிக், கிடைத்த அளவு குடிக்கத் தொடங்கி விட்டன. கடலளவு பால் கிடைக்குமானால் அவை எவ்வாறேனும் குடித்து முடித்துவிடுவதென

ஆசைகொள்ளு மல்லவா! இராம காதையைப் பாற்கடலாகவும் தம்மைப் பூனையாகவும் அவையடக்கப் படுத்தித் தம் நோக்கம் இன்னதென்பதை வெளிப் படுத்திய திறம் இந்தப் பூனை பாற்கடலைக் குடித்தே தீருமென்னும் எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றதல்லவா!

இராம காதையின்மீது ஆசிரியர் மேற்கொண்டிருந்த ஆசையை நிறைவேறச் செய்தது அவர் பெற்றிருந்த கவியாற்றல். இதனையும் ஆசிரியர் தம் அவையடக்கச் செய்யுளில் குறித்தே சென்ருர்.

> பொய்யில் கேள்விப் புலமையி ஞேர்புகல்
> தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே

என்பதே அது. நிழலின் அருமையை வெய்யிலில் நிற்போர் அறிவர்; அதனைப் போன்றே சங்கம் மருவிய துங்கப் புலவர்களின் கவிப் பெருமையை என் புன் கவிகளைக் கற்போர் அறிவர்; பண்டைப் புலவர்களின் கவிமாட்சியை விளக்கவே யான் எழுதத் துணிந்தேன் இதனை யென்று ஆசிரியர் கூறியிருப்பதனை நாம் அறியவேண்டும். அவையடக்கமாக இங்ஙனந் தம்மைச் சிறுமைப்படுத்திப் பேசி யிருப்பினும் ஆசிரியர் பெற்றிருந்த கல்வி யறிவும், கவி பாடுந் திறனும் இராமகாதைக்கு உறு துணையா யிருந்தன வென்பதை நாம் இங்கு உய்த்துணர வேண்டும். அவற்றைத் தான் இங்குக் குறிக்கின்ருர் என்றுங் கொள்ள வேண்டும்.

இராம காதைமீது கொண்ட ஆசையுந்தக், கல்வி யறிவும் கவிபாடுந் திறனும் உறுதுணை செய்யக் கம்பர் இராமகதையைப் பாடி முடித்தாரென்பதே அவர்

அவை அடக்கச் செய்யுட்களினின்றும் நாம் அறிவது. அவர் வாழ்ந்த காலம் அவர் கவிகளில் நிழலிடுகின்றது. அவர் கொண்ட தமிழன்பும் தமிழ் நாட்டன்பும் நூன் முழுவதும் பரந்து பட்டுக் கிடக்கின்றன. தமிழர்களின் பண்பே பலவிடங்களில் பாத்திரங்களின் வாயிலாகப் பேசுகின்றது. தமிழர்களின் மனநிலை, பழக்க வழக்கங்கள் ஆகியவை கதையைச் சிறிது மாற்றவேண்டிய அளவிற்கும் அவரைத் தூண்டியிருக்கின்றன.

தம்முடைய நோக்கம் இதுவேயென்பதை ஆசிரியர் பாத்திரங்களின் மூலமாகவும் விளக்கி யிருக்கும் திறம் அறிந்து மகிழ்தற் குரியதாம். "எந்தை யெவ்வுலகுளான் எம்முன் யாண்டையான்" எனக் கோசலையின் அடிகளில் வீழ்ந்து புலம்பினான் பரதன். வீழ்ந்த மகனைத் தழுவியெடுத்துக் கைகேயி யிழைத்த கொடுமையை நீ யறியாய் போலும் என வினவினாள் கோசலை. இதனைச் செவியுற்ற பரதன் செய்வதறியாது திகைத்தான். ஆட்சியைப் பெறுவதற்குத் தானும் கைகேயிக்குத் துணையாக விருந்திருக்கக் கூடும் எனக் கோசலை கருதியதாகக் கண்டான். நீ அறிந்திருப்பா யென்று நினைத்தேன்; நீ அறியாய் போலும் எனக் கோசலை கேட்டது தன்னைப்பற்றிக் கோசலை கொண்டிருந்த ஐயத்தை வெளிப்படுத்தியதாக அவன் நினைத்தான். தனது தூய்மையை எவ்வாறு வெளிப்படுத்துவதென்று எண்ணி யேங்கினான். சூளுரைத்தலின் மூலம் தான் மனந்தூயன் என்பதையறிவிக்கச் சூளுரை சொல்லத் தொடங்கினான். சூளுரைப்போர் தமக்கு உயிரனைய செயிரறு பொருள்கள்

மீதே வைத்துச் சூளுரை சொல்வர். பரதன் சூளு ரைத்தான் தான் கொண்டிருந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு. கம்பர் தனது நோக் கத்தை—இராமனிடத்துள்ள தனது அன்பை—திரு மாலிடத்துத் தாம் கொண்டிருந்த பத்தியை வெளி யிட இடமொன்று கண்டார். பரதன் மூலம் கம்பர் தனது ஆழ்ந்த நம்பிக்கையை வெளியிட்டிருக்கும் திறம் போற்றுதற்குரியதாகும். கைகேயியின் செய லுக்கு யான் உற்ற துணையாக விருந்திருந்தால்

> தழைத்ததண் துளவினோன் தலைவ னல்லனென்று
> அழைத்தவன்

செல்லும் தீயெரி நரகத்துக் கடிது செல்வேனாக வென்று சூளுரைத்தான் பரதன். திருமாலைத் தலைவ னல்லன் என்று கூறுவோர் குறுகும் நரகை யான் அடைவேனாக என்பது இதன் பொருள். கம்பர் தனது ஆழ்ந்த நம்பிக்கையைப் பரதன் வாயிலாகச் சூளுரைத்துச் சொல்லி யிருக்கின்றார் என்பதைத் தவிர வேறென்ன இங்கு நாம் அறியக்கிடக்கின்றது.

இராமன் முதலியோர் தண்டக வனம் புகுந்த அளவில் சீதையை யெடுத்தோட விராதன் வந்து சேர்ந்தான். இராமனும் விராதனும் பெரும் போர் புரிந்தனர். இராமன் அம்பால் விராதன் உயிர் உடலை விட்டுப் பிரிந்து வானில் நின்று இராமனைத் துதிக்கத் தொடங்கிற்று. விராதன் துதிப்பதாக நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை; பத்தி வெள் ளம் பெருக்கெடுத் தோட நிற்கும் அடியவர் ஒருவர் துதிப்பதாகவே அறிய முடிகின்றது அப்பாடல் களைப் படிக்கும்பொழுது.

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்கள் தொறுமுறைந்தால் அவையுன்னைப்
பொறுக்குமோ.

இச்செய்யுளைப் பலமுறை படித்துப் பாருங்கள். சொல்லழகும் பொருளழகும் கம்பருடைய மனநிலையைப் புலப்படுத்துவதை யறியலாம். இஃது ஓரிடமன்று; பல விடங்களில் பகைவர்கள் வாயிலாகப் பத்திச்சுவை சொட்டச் சொட்டச் ஆசிரியர் பாடி பாடியிருப்பதை யறியலாம்.

தென்றிசை நோக்கிச் சென்ற இராமனும் இலக்குவனும் கவந்தனுடைய கைகளி லகப்பட்டார்கள். இருமருங்கும் நெருங்கும் கரங்களைக் கண்ட அளவில் அரக்கர் சேனைகளோ இவையென அயிர்த்தார்கள்; பெருநாகம் போலும் எனவும் மதி மருண்டார்கள். வாயை அரக்கர் ஊர்வாயி லெனக் கருதினார்கள். இறுதியில் பூதமேயென இருவரும் முடிவு செய்தனர். "எந்தை துஞ்சினன்; மனைவி மறைந்தாள்; இனி இருந்து என்ன பயன்" எனக்கூறி இராமன் பூதத்தின் வாயில் விழுந்து மடிய முற்பட்டு ஓடினான். இதனைக் கண்ட இலக்குவன் அவனுக்கு முன்பு ஓடிவிழுந்து இறந்து பட எண்ணினான். "யாவிர் நீவிர்" என வந்த ஓசைகேட்ட அளவில் அரக்கன் என முடிவுசெய்து இருவரும் கவந்தனுடைய தோள்களை வெட்டி வீழ்த்தினர். கவந்தன் மெய்யுணர்வு பெற்றவனாகி விண்ணில் நின்று இராமனைத் துதித்தான். அந்தத் துதிப் பாடல்களைப் படித்துப் பாருங்கள். ஆழ்வார்களின்

பாசுரங்களே இவை யென்றெண்ணுமாறு அவை அமைந்து கிடத்தலை யறிவீர்கள்.

மூவர் நீ முதல்வன் நீ முற்று நீ மற்று நீ
பாவம் நீ தருமம் நீ பகையும் நீ உறவும் நீ

இஃது ஆழ்வார் பாசுரமன்று; இறந்துபடும் நேரத்தில் மெய்யுணர்வு பெற்ற வாலி இராமனைப் புகழ்ந்து துதித்த பகுதியே. நூல் முழுவதும், வாய்ப்பு நேர்ந்த பொழுதும் நேரவில்லையானால் உண்டாக்கிக்கொண்டும் திருமாலை மனமாரக் கம்பர் துதித்திருக்கும் பகுதிகள் நிறைந்து கிடப்பதை யறியலாம். ஆகவே தான் கம்பர் தமது அவை யடக்கத்தில் "ஆசைபற்றி யறைய லுற்றேன்" என்று கூறினர்.

ஆசிரியரின் நோக்க மறிந்து கல்லாதார்க்கு நூலினுட் பல பகுதிகள் வெற்றுரையாகவே காணப்படும். இடத்திற்கும் பாத்திரத்திற்கும் ஏலாத வகையில் வேண்டாதன விளக்கப்பட்டிருக்கின்றன என்றே கருதுவர் நோக்கமறிந்து கல்லாதார். காட்டாக வொன்றைக் காண்போம். சுக்கிரீவன் ஆணையை முடிமேற் கொண்டு வானர வீரர்களோடு படைத் தலைவர்கள் அணி யணியாக வந்து நின்றார்கள். இராமனும் படைப் பெருமையைக் கண்டு சுக்கிரீவனைப் பாராட்டினன். படைத் தலைவர்க ளனைவருக்கும் செல்லவேண்டிய திசைகளையும் செல்லும் நெறியையும் சொல்லி யனுப்பினன் சுக்கிரீவன். அநுமன் தென்றிசைச் செல்லும் பணியை மேற்கொண்டான். செல்லும் நெறியைச் செம்மையாகக் கேட்டுக்கொண்டு தென்றிசை நோக்கிப் புறப்பட்டான் அநுமன்.

புறப்பட்ட அநுமனை இராமன் தனியே அழைத்தான். இருவரும் தனித்ததொரு விடத்திற்குச் சென்றனர். சீதையின் அங்க அடையாளங்களையும், சீதையிடத்துச் சொல்லவேண்டிய செய்தியையும் சொல்லி, வெற்றியுடன் வருமாறு அநுமனை வாழ்த்தியனுப்பினுன் இராமன். இவ்விடத்தில் சீதையின் அங்க அடையாளங்களை அடியிலிருந்து முடிவரை இராமன் கூறியதாகக் கம்பர் வருணித்துக் காட்டுகின்ருர். படிப்போர்க்கு இவ்வருணனைகள் இடம், காலம், கூறுவோர், கேட்போர் ஆகியோர்க்கு ஏலாதவகையில் அமைந்திருப்பதாகக் காணப்படும். சீதையிடத்துச் சொல்லவேண்டிய செய்தியைத் தனியாக அழைத்துக் கூறியவதனைப் பொருந்துவதென்றே கொள்ளலாம். ஆனல் சீதையின் அங்கவடையாளங்களை இராமன் மற்ருெரு ஆடவனிடத்திற் கூறியதாகச்சொல்வது கேட்பதற்கே அருவருப்புடையதாகத் தோன்றுகின்றது. நமக்கு மட்டுமன்று; கம்பருக்கும் அவ்வாறே தோன்றிற்று எனக் கருத இடமுண்டு. ஆகவேதான் கம்பர்

> காண்டியெனிற் குறிகேட்டி யெனவேறு
> கொண்டிருந்து கழறலுற்ருன்

என இராமன் தனியே யழைத்துக் கூறியதாக உரைத்தார். இன்றெனில் தனியே அழைத்துக் கூறினுன் இவற்றையென்று கூறவேண்டா மல்லவா? தனியே யழைத்தேனும் கூறத்தக்க செய்திதானு இதுவென்று வினவினல் அங்கும் அல்லவென்றுதான் விடை கூறவேண்டி யிருக்கின்றது. அவ்வாருயின் கம்பர் இதற்குத் தரும் விடை யாது என்பதனை

ஆராய வேண்டும். இதைப்போன்ற மற்றொரு விடத்தையும் பார்த்துப், பின்னர் அவர் கூறும் விடையைக் காண்போம்.

அசோக வனத்தில் அரக்கியர் சூழவிருந்த சீதையைக் கண்ணுற்றான் அநுமன். அவர்களனைவரையும் தனது மந்திர வலியால் உறக்கத்தி லாழ்த்திச் சீதையின்முன் தோன்றினான். அரக்கனேவென ஐயுற்றாள் முதலில் அவனது தோற்றத்தைக் கண்ட அளவில். அல்லனென அவனுரையால் தெளிவுற்ற சீதை இராமனுடைய நிலையைக் கேட்டறிந்து நெஞ்சம் நீராளாள். இராமனுடைய திருமேனி எவ்வாறிருக்கின்றது; அதனைக் கூறுவாயாகவென்று சீதை கேட்டுக்கொள்ள அடியிலிருந்து முடிவரை இராமனுடைய அங்க வடையாளங்களை அநுமன் விளக்கிக் கூறினான் என்று கம்பர் கூறுவர்.

இவ்விடத்திலும் அங்கவடையாள வருணனை பொருத்த முடையதாகத் தோன்றுவதில்லை படிப்போர்க்கு. தனது மந்திர வலியால் அரக்கியரை ஆழ்ந்த தூக்கத்துட் படுத்திச் சீதையைக் கண்ட அநுமன் இராமனைப் பாதாதி கேசமாக வருணித்தான் என்று கூறுவது காலப் பொருத்தமுடையதாகக் காணப்படவில்லை. அதுமட்டுமன்றிச் சீதை ஒரு ஆடவனைத் தனது கணவனுடைய அழகு எவ்வாறு இருக்கின்றதெனக் கேட்டதாகக் கூறுவதோ அநுமன் கூற அதனைக் கேட்டு மகிழ்ந்தாளெனக் கூறுவதோ பாத்திரப் பொருத்தமுடையதாகவும் தோன்றவில்லை.

எனவே சீதையின் அங்க வடையாளங்களை இராமன் கூறியதாகக் கூறுவதும், இராமனின் அங்கவடையாளங்களை அநுமன் கூறச் சீதை கேட்டாளெனக் கூறுவதும் பொருத்த மில்லாதன வல்லவா வென்று வினவக்கூடும். அங்குத்தான் அமைந்து கிடக்கின்றது நூலாசிரியர் நோக்கமறிந்து அவர் நூலைப்படிப்பதால் உண்டாகும் பயன். நோக்கமறிந்து கற்போர் கம்பரின் திறமையை யறிந்து போற்றுவர். மற்றையோர் இப்பகுதிகளை வெற்றுரையென்றே விளம்புவர்.

தேவர்களை வருணிக்க வேண்டுமானால் அடியிலிருந்து முடிவரை வருணிக்க வேண்டு மென்பர். இது பாதாதிகேச வருணனை யெனப்படும். மக்களை வருணிப்பதானால் முடியிலிருந்து அடிவரை வருணிக்க வேண்டு மென்பர். இது கேசாதிபாத வருணனை யெனப்படும். இராமனையும் சீதையையும் நூலுள் எங்காவது பாதாதிகேசமாக வருணித்துத் தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்றெண்ணினர் கம்பர். இராமன் கூறியதாகச் சீதையைப் பாதாதி கேசமாகவும் அநுமன் கூறியதாக இராமனைப் பாதாதி கேசமாகவும் வருணித்துத் தம் ஆசையை நிறைவு செய்துகொண்டார் கம்பர். அவர் ஆசை நிறைவேறிய விடங்களே இவை. எனவே ஆசிரியருடைய நோக்கமறிந்து கற்றாலன்றிப் பல பகுதிகளின் உட்பொருள் அறியப்படாது போகும் என்பது தெளிவாகின்றது.

இராமன் ஒரு ஆடவனிடத்தில் தனது மனைவியின் அங்க வடையாளங்களைக் கூறுதல் தகாது

என்று நாம் கருதுவது போன்றேதான் கம்பரும் கருதினர். ஆகவேதான் அநுமனைத் தனியே யழைத்துக் கூறச் செய்தார். இலக்குமியே சீதையாக வந்திருக்கின்றாள் என்னும் எண்ணமுடையவர் கம்பராதலால்கூறுபவன் இராமன் என்பதைவேண்டுமென்றே சிறிது மறந்து, தான் துதிப்பதாகவே கருதி, அடியிலிருந்து முடிவரை வருணித்து முடித்தார். இராமன் கூறியதாகக். கூறியிருந்தால் கேசாதிபாதமாக வன்றோ வருணித்திருப்பார்!

இதனைப் போன்றுதான் இராமன் வடிவினையும் பாதாதிகேசமாக வருணித்து முடித்தார். இதற்கொரு நல்லவிடத்தைத் தேடிக் கண்டார் கம்பர். இராமனுடைய திருமேனி எவ்வாறிருக்கின்றதெனச் சீதை கேட்டதாக ஒரு இடத்தை யுண்டாக்கிக் கொண்டார். கம்பர் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள உண்டாக்கிக்கொண்ட இடங்களே இவை. நோக்கமறிந்து பயில்வோர்க்கே இவை இனிக்கும்.

வைணவர்கள் திருமால் கோவிலுட் புகுந்தால் முதலில் தாயாரையும்—இலக்குமியையும் பின்னர்த் திருமாலையும் வணங்குவர். இஃது அவர்கள் கொண்டிருக்கும்வழிபாட்டுமுறை கம்பர் அம்முறையும்பொருந்த முதலில் தாயாரை—சீதையைப் பாதாதிகேசமாக வருணித்து வணங்கிப் பின்னர்த் திருமாலை—இராமனை வருணித்து வணங்கிய திறம் பெரிதும் பொருத்தமுடைத்தாய் இன்புறுத்துவதை யறியலாம்.

இவையும் இவைபோன்ற விடங்களும் கம்பரின் நோக்கமறிந்து கற்பார்க்கன்றி மற்றையோர்க்கு

வெற்றுரையாகவும் பொருந்தாதன வாகவுமே தோன்றக் கூடும்.

கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயரும் இராமாவதாரம் என்பதேயாகும். இதனை

நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை

என்பதனு லுணரலாம். திருமாலின் பத்து அவதாரங்களுள் இராமாவதாரமும் ஒன்று என்பர். பத்தினுள் ஒன்ருகிய இராமாவதாரத்தைப் பாடும் பேறு பேற்ரேமே யென்னும் பெருமையுடனேயே இங்ஙனம் தந் நூலுக்குப் பெயரிட்டிருக்கின்ருர் கம்பர் எனக் கருதவேண்டியிருக்கின்றது. "என்னைத் தன்னுக்கி என்னுல் தன்னையின்றமிழ் பாடிய ஈசனை" என ஆழ்வார் கருதியது போன்று கம்பரும் கருதினர். ஆகவே தான் இராமாவதாரம் எனத் தம் நூலுக்குப் பெயரமைத்தார்.

எனவே நூலின் நோக்கமறிந்து கற்றலே இலக்கியச் சுவையுணர்வு பெறுவதற்கு ஏற்ற வழியாமென்பதும் கம்பர் கதையின் நோக்கம் இதுவென்பதும் அதனை ஆசிரியர் உணர்த்தும் நெறிகள் இவையென்பதும் இதுகாறுங் கூறியவாற்ருற் பெறப்படுதலறிக.

2. அறிமுகப்படுத்தும் நெறி

பொதுவாகத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் முறை யொன்றுண்டு. அது மேலைநாட்டு இலக்கியவாசிரியர்கள் மேற்கொண்ட நெறிக்கு மாறுபட்டதாகவும் இருக்கும். மேலைநாட்டு இலக்கிய வாசிரியர்கள் காப்பியங்களிலோ நாடகங்களிலோ வரும் பாத்திரங்களின் நற்பண்பு தீப்பண்பு ஆகியவை குறித்துத் தங்கூற்ருக ஒன்றுங் கூறுதலிலர். பேசுவோரின் பேச்சைக்கொண்டும் அவரைப்பற்றி மற்றவர் தரும் கருத்தைக் கொண்டும் ஒருவருடைய நற்குண தீக்குணங்களைக் கற்போர் அறிந்துகொள்ள வேண்டியிருக்கும். கற்போர் பலதிறப்பட்டவ ராகையால் காப்பியத்தில் வரும் பாத்திரங்களைப் பற்றிப் பலர் பல வகைப்பட்ட கருத்துக்களைக் கொள்வர். அவ்வுரிமையை நூலாசிரியர்களே கற்போருக்கு விட்டு விடுவார்கள். நற்குண முடையவன் என்று ஒருவரால்

முடிவு செய்யப்பட்ட ஒருவனைத் தீய குணமுடையவ னென்று மற்றவர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு வர். அதே போன்ற தீய குணமுடையவனையும் காட்டு வர். மிகச்சிறந்த பேச்சாளன் எனப்பட்டான் ஒருவனை அவனல்லன் என மற்றவர் காட்டுவர். கருத்து வேறு பாட்டிற்கு நூலாசிரியர்களே இடமளிப்பார்கள். கருத்து வேறுபாட்டின் காரணமாகப் பல நூல்கள் எழுவதற்கு அவ்விலக்கிய நூல்கள் இடமளிக்கின்றன. அதுமட்டுமன்றி ஒருவரைப்பற்றி நல்லவர் என்றோ தீயவர் என்றோ அறிந்துகொள்ள நூல் முழுவதும் கற்கவேண்டுமாதலால் கற்போர் மேல்மேல் வரும் நிகழ்ச்சிகளைக் கற்க ஊக்கமுடையாராகும் நிலையை யும் அது உண்டாக்குகின்றது. எனவே இலக்கிய வளர்ச்சிக்கு இம்முறை ஒருவகையில் துணை செய்வ தாக அமைந்திருக்கின்றது.

தமிழ்ப் புலவர்கள் காப்பியத் தலைவர்களின் பண்புகளைக் கற்போர் உணருமாறு விடுதலிலர். நற் குணமுடைய வொருவனை நற்குண முடையனென்று தம் கூற்றாகவே கூறிவிடுவர். அதேபோன்று தீய வனைத் தீயவனென்றுங் கூறி விடுவர். தமக்கு மாறு பட்ட கருத்துக்களைக் கற்போர் கொள்ளுதற்குத் தம் நூலில் ஆசிரியர்கள் இடந்தரார். ஒருவனுடைய நற்குண தீக்குணங்களை யறிந்துகொள்ள நூல் முழுவ தும் கற்கவேண்டிய நிலைக்கும் நம்மை அவர்கள் விடுத லிலர். முன்னதாகவே ஒவ்வொருவரைப் பற்றியும் தம் கருத்தைக் கூறிச்செல்லும் நெறியுடையவர்கள் அவர்கள்.

காப்பியத்தில் பிற்பகுதியில் வரும் தலைவர்களைப் பற்றி முற்படக்கூற வாய்ப்புக் கிடைக்கப் பெறுரெனினும் உவமையின் வாயிலாகவேனும் கூறும் வாய்ப்பை யுண்டாக்கிக் கொள்வார்கள். எனவே கற்போர் காப்பியத்தில் வரும் தலைவர்களைப் பற்றி நூல் முழுவதும் கற்ற பின்னர்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதில்லை. அதற்கு மாருக ஒருவரைப்பற்றி முதலில் ஆசிரியர் கொண்ட ஒரு கருத்தை நாம் கொள்ள, அக்கருத்திற்குத் தரும் விளக்கங்களாக எஞ்சிய பகுதிகள் அமைந்திருக்கும். கதைத் தலைவர்களைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டு அல்லற்பட வேண்டியதுமில்லை கற்போர். இது தமிழ் இலக்கியங்களின்—காப்பியங்களின் முறையாகும்.

இம்முறையைத் தமிழ்ப் புலவர்கள் மேற்கொண்டதற்குக் காரணங்களுமுள. காப்பிய வரலாறுகளுள் பெரும்பாலன தொன்று தொட்டு வழங்கி வந்தவை. காப்பியத் தலைவர்களுடைய நற்குண தீக்குணங்களும் நன்ருக அறியப்பட்டவை. தம்மை யாதரித்த அரசர்களையும், இறைவனையும், இறைவனின் அவதாரங்களையும் காப்பியத் தலைவர்களாகப் புலவர்கள் கொண்டதனுல் மாறுபட்ட கருத்துக்கள் கற்போர் உள்ளத்தில் எழுமாறு புலவர்கள் நூல்கள் இயற்றினுரல்லர். வரலாறுகளும் வரலாற்றுத் தலைவர்களின் பண்புகளும் முன்னதாகவே அறியப்பட்டனவாதலால் இம்முறையைப் புலவர்கள் மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததாயிற்று.

ஆங்கிலம் வல்ல, இக்காலத்திய தமிழ்ப் புலவர்கள் சிலர் பாத்திரங்களைப் பற்றி மாறுபட்ட கருத்துக்

கொள்ளவும் இடமிருக்கின்றதென்று காட்ட முற்படு கின்றார்கள். ஆங்கில இலக்கியங்களின் முறையைத் தமிழிலக்கியங்களோடு இணைத்துப் பார்க்கின்றார்கள். அம்முறைக்கு இடமிருப்பதாக அங்குமிங்குமாகக் கிடைக்கின்ற சில ஆதாரங்களைத் தொகுத்துங் காட்டு கின்றனர். ஆசிரியர் கருத்து மிதுவேயெனத் தங் கருத்தை ஆசிரியர் மீது ஏற்றியும் கூறுகின்றனர்.

இலங்கை வேந்தனைச் சிறந்தவன் எனக் காட்டப் பலர் முற்படுகின்றார்கள். சுந்தர காண்டத்திலுள்ள ஊர்தேடு படலத்தில் காணப்பெறும் சில கவிகளை யும் நிந்தனைப் படலத்தில் கிடைக்கப்பெறும் சில பாடல்களையும் எடுத்துக்காட்டி வளர்த்துப் பேசுகின் றார்கள் அவர்கள். நூல் முழுவதையும் கற்போர் இராவணன் சிறந்தவனெனக் கம்பர் காட்டியிருக் கின்றாரென அறிய முடியாதவராகின்றனர். இலங்கை யின் செல்வ வளங்களைக் கூறியிருப்பதிலிருந்து இலங்கை யரசன் சிறந்தவனே யெனக் காட்ட இவர் களின் உள்ளம் விரும்புகின்றது. இலங்கையின் செல்வ நிலையை விளக்கிவந்த கம்பர் இறுதியாக "அறம்புகாது இந்த அணிநகர்க் கிடக்கை நின்று அகத்தின்" என்று கூறியதிலிருந்து இலங்கையின் செல்வ வளங்களைக் கூறியதன் கருத்து இன்னதென அறியக்கிடக்கின்றதல்லவா! 'அணையும் விளக்கு ஒளி விட்டெரியும்' என்பது ஒரு பழமொழி. இறந்துபட்ட தலைவர்களனைவரும், வீரர்களனைவரும் இறந்து படுவ தற்குமுன் சிறந்த முறையில் போர் புரிந்ததாகப் புலவர்கள் கூறுவார்கள். இலங்கை வேந்தனும் இறந்துபடவிருந்த அன்று விண்ணேரு மஞ்சப்

பெரும் போரியற்றினன் என்பர் கம்பர். பொருது இறந்துபடப் போர்க் களம் புகுந் தலைவனுடைய அழகினைப் பல படியாக வருணித்துச் சொல்வது புலவர் நெறி. வில்லிபாரதம் போன்ற நூல்களில் இம்முறை அழகாகக் கையாளப் பட்டிருக்கின்றது. போருக்குப் புறப்படுகின்ற வீரன் ஒருவன் அழகினை ஆசிரியர் புகழத் தொடங்கிவிட்டாரென்றால் அன்று அவன் இறந்துபடப் போகின்றான் என்பதைக் கற்போர் உறுதியாகத் தெரிந்துகொள்ளலாம். இக்கருத்தை வலியுறுத்தவே இங்கும் அங்குமாக இலங்கையின் செல்வமும் இலங்கை வேந்தன் பெற்ற வரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அவைஇராவணனின் கொடுமையை விளக்க ஆசிரியரால் விளக்கப்பட்டனவேயன்றி வேறில்லை. கம்பர் இராவணனைப்பற்றித் தாம் கொண்ட கருத்தினைப் பலவிடங்களிலும் தெளிவாகக் கூறிய பின்னர் மாறுபட்ட கருத்தினைக் கொள்ள இடம் எங்கிருக்கின்றது?

வானரத் தலைவன் வாலியும் அவன் இளவலும் போர்புரிந்த நேரத்தில் மறைந்து நின்று அம்பை யேவினன் இராமன். இராகவன் விட்ட அம்பு இஃது எனவறிந்த அளவில் நெஞ்சந் துணுக்குற்ற வாலி முன்னே தோன்றிய இராமனுடன் சொற்போர் தொடங்கினன். இவ்விடத்திலேனும் கருத்து வேறுபாட்டிற்கு இடமளித்திருக்கலாம் எனப் பலர் நினைப்பர். இடமிருக்குமெனக் கருதுமளவில் கம்பரும் சொற்போரை வளர்த்துக் காட்டுகின்றார். 'தேவியைப் பிரிந்த பின்னர் சிந்தனை திகைத்தாய் போலும்' என்று கேட்டான் வாலி. நினது உடன் பிறந்தான்

மனைவியை நீ விரும்பினையாதலின் உன் மீது அம்பினை யேவினேன் என்றான் இராமன். மண முறைகளும் ஒழுக்க நெறிகளும் மற்றவையும் மனுவின் வழிவந்த வர்க்கேயன்றி எம்போலும் வானரர்க்கு உரியனவாகா என வாதிட்டான் வாலி. அறிவின்வழி அமைவது ஒழுக்கமே யன்றிப் பிறப்பின்வழி யமைவதன்று என்பதனை நீ யறியாது பேசுகின்றாய்; ஆதிமூலமே யென வழைத்த அண்ணல் யானையும் இலங்கை வேந்தனால் இறந்துபட்ட சடாயுவும் எப்பிறப்பைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் உயர்ந்தவர்களானமை ஒழுக்கத்தினாலன்றோவென எடுத்துக் காட்டுகள் தந்தும் தான் செய்தது நேர்மையே யென நிலைநாட்டினான் இராமன். எனினும் வாலியின் உள்ளம் அமைதி பெற வில்லை. மறைந்து நின்று வேடர்கள் விலங்குகளின் மீது அம்புகளை யேவுவது போன்று யேவினையே; வீரத்திற்கு அழகா இது என்று இறுதியாக வாலி கேட்டுவிட்டான். மறைந்து நின்று எய்தது வீரத் திற்குக் குற்றமன்று என இராமன் விளக்குவானெனக் கற்போர் எதிர்பார்ப்பர். வான்மீகி அவ்வாறே காட்டியிருக்கின்றார். ஆனால் கம்பர் அருகிலிருந்த இலக்குவனைக்கொண்டு வாலிக்கு விடைதரச் செய்து வாதத்தை முடித்து விடுகின்றார். இலக்குவன் கூறிய விடையைக் கேட்ட அளவில் “அறத்திறனழியச் செய்யான் அண்ணல்” என்பதை யுன்னி உள்ளம் அமைதி பெற்றான் வாலி. மெய்யுணர்வும் பெற்றான் என்பர் கம்பர். இராமனுடைய பெருமையை வாயாரப் புகழ்ந்து துதித்தான். இங்ஙனம் இராமனைப் பகைவனும் புகழ்ந்து போற்றினனென ஆசிரியரே

முடிப்பதிலிருந்து மாறுபட்ட கருத்துக் கொள்ள இடம் இருக்கின்றதென்று எண்ணவும் முடிகின்றதா?

காப்பியத்தில் வரும் பாத்திரங்களை அவர்களின் நற்குண தீக்குணங்களை முன்னதாகவே கூறி அறிமுகப்படுத்துந் திறம் தமிழ்ப் புலவர்கட்குரியதென்பது முன்னர்க் கூறப்பட்டது. மந்தரை, இலங்கை வேந்தன், அநுமன் ஆகியோரைக் கம்பர் அறிமுகஞ் செய்துவைக்கு முறை அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இராமன் முடிசூட்டு விழாவிற்கு நகரை அணி செய்தார்கள் மாநகரார். பொன்னகர் இதுவென்னு மாறு பொலிவோடு விளங்கிற்று அயோத்தி. மந்தரை வினவி யறிந்தாள் மக்கள் இத்துணை மகிழ்ச்சியோடு மாநகரை அலங்காரப் படுத்தியதற்குரிய காரணத்தை. முன்னாளில் இராமனது வில் உண்டை தன் முதுகை யுண்டது அவள் நினைவிற்கு வந்தது. எனவே விரைந்து சென்று கைகேயியின்முன் நின்றாள் மந்தரை.

கைகேயியின் முன் வந்து தோன்றியவள் யார் என்ற வினாவிற்கு விடை தருகின்றார் கம்பர்.

துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்

என்பதே அவ்விடை. கூனியின் கொடிய மனத்தினால் விளைந்த செயல் பின்னர்தான் விளக்கப்படுகின்றது. கேகயன் மகளின் மனத்தை மாற்ற எவ்வெம் முறையில் பேசினாள் என்பதையும் அவள் செயலால் விளைந்த கொடுமைகளையும் பிற் பகுதியில்தான் நாமுணர வேண்டும். எனினும் கம்பர் கூனியை நமக்கு அறிமுகப்படுத்தும் பொழுதே "துன்னருங் கொடுமனக் கூனி" என அறிமுகப் படுத்துகின்றார்.

கூனி தோன்றியமையால் விளைய விருந்த செயலோ மிகப் பெரிது. இதனை நினைவு கூர்ந்த கம்பர் கூனியின் தோற்றத்திற்கு உவமை கூற நினைத்தார். இலங்கை வேந்தன் செய்த தீவினையைத் தவிர, கம்பருக்கு வேறென்றும் நினைவிற்கு வரவில்லை. ஆகவே கூனியின் தோற்றத்தைக் கூறும்பொழுது

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

என்று கூறுகின்றார். கொடிய மனமுடையவள்; இலங்கை வேந்தன் இயற்றிய தீவினையை யொத்தவள் என மந்தரையைக் கம்பர் நமக்கு அறிமுகப்படுத்து கின்றார். மந்தரையை மட்டுமன்று; காப்பியத்தின் பிற்பகுதிக் குரிய இலங்கை வேந்தனையும் நமக்கு அறி முகப்படுத்தி வைக்கின்றார். முக்கோடி வாணாளை முயன்று பெற்றவன் என்றோ கைலை மலையை நிலை குலையச் செய்தவன் என்றோ அன்று; தீமைகள் புரிபவன் என்றும் கொடுமை நிறைந்த கூனிக்கு உவமையாகத் தக்கவன் என்றுமே. இராவணன் யார்? அவன் எத்தகையவன் என்பதனைப் பின்னர் தான் நாமுணரவேண்டும். எனினும் கம்பர் இராவ ணனையும் மந்தரையையும் முதலிலேயே நமக்குக் கொடியவர்களென அறிமுகப் படுத்துகின்றார்.

இனி வரும் பிற்பகுதியைப் படிப்பவர்கள் இதே எண்ணத்தோடுதான் இருவரையும் காணவேண்டு மெனக் கம்பர் விதிக்கின்றார். கூனியின் கொடுமை யைக் கற்றவர்கள் மட்டுமன்று; கல்லாதவர்களும் சொல்லாமலே அறிவர். இராவணன் கொடுமையும் அனைவரும் அறிந்த தொன்றே. இக் கொடுமைகளை மறைத்தலிலோ பின்னர் உணருமாறு செய்தலிலோ

கருத்தொன்று மிருக்க முடியா தென்று கருதியே கம்பர் அவர்களை இவ்வாறு அறிமுகப் படுத்தியிருக்கின்றாரெனக் கருதவேண்டி யிருக்கின்றது.

அநுமனை அறிமுகப்படுத்தும் நெறியையும் காணுங்கள். இராம இலக்குவர்களின் வரவையறிந்து அஞ்சியோடிய சுக்கிரீவன் யாரென அறிந்து வருமாறு அநுமனை யனுப்பினான். அநுமனும் ஆணையை யேந்தி மாணவப் படிவத்தோடு இராம இலக்குவர்களை யடைந்து "கவ்வை யின்றாக நுங்கள் வரவு" என வரவேற்புரை கூறினான். நீ யார்? எங்கே போகின்றாய் என அவனைக் கேட்டான் இராமன். அநுமன் தான் காற்றின் மைந்தன் என்றும் அஞ்சனை வயிற்றில் வந்தோன் என்றும் பெயர் அநுமன் என்றும் இம்மலை யிருந்து வாழும் எரிகதிர்ச் செல்வன் மைந்தனுக்குத் தொண்டு செய்பவன் என்றும் கூறி, நும் வரவு கண்டு சுக்கிரீவன் அஞ்சினனாதலின் யாரென அறிந்து போக வந்தேனெனத் தான் வந்த காரணத்தையும் விளக்கினான்.

இந்த விடையைக் கேட்டவளவில் இராமன் மகிழ்ந்தான். மகிழ்ந்ததோடு மட்டுமன்றிப் புகழவும் செய்தான்.

> இல்லாத வுலகத் தெங்கு மிங்கிவ னிசைகள் கூறக்
> கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
> சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச்
> சொல்லின் செல்வன்?

எனப் புகழ்ந்ததாகக் கம்பர் கூறுகின்றார். இராமனுக்குத் தன்னை யாரெனவும் வந்த காரியம் இன்னதெனவும் கூறிய அநுமன் விடையிலிருந்து அவன் கல்லாத கலைகளே உலகத்தில்லை யென்றோ அதனை

அவன் சொல்லே உணர்த்துகின்றதென்றே நம்மால் உணரமுடியவில்லை. இராமனும் உணர்ந்திருக்க முடியாதெனத் திட்டமாகக் கூறலாம்.

அநுமன் சொல்லின் செல்வன் என்பதை யுணரப் பின்னர் பலவிடங்கள் காத்திருக்கின்றன. அசோக வனத்தில் அநுமன் சீதையுடன் உரையாடிய பகுதியும் இராமனை யடைந்து, தான் கண்டவிடத்தை விளக்கிக் கூறிய பகுதியும் அநுமன் சிறந்த சொல்லின் செல்வனென்பதை விளக்குகின்றன. அடைக்கலம் புகுந்த வீடணனை அஞ்சாது யேற்றருள்க வென அநுமன் இராமனை வேண்டிய பகுதி அநுமன் சொல்லின் செல்வன் என்பதை மட்டுமன்று; அறிவுத் திறமும் சூழ்ச்சி வளமும் உடையானென்பதையும் விளக்குகின்றது. ஆனால் இராமனுக்குத் தன்னை யாரென வுணர்த்திய விடத்திலேயே அநுமனை நாம் சொல்லின் செல்வன் என அறிய முடியவில்லை. ஆனால் முதலிலேயே நமக்குக் கம்பர் அநுமனைச் சொல்லின் செல்வன் என அறிமுகப்படுத்திப் பின்வரும் பகுதிகளில் அவ்வாறு தான் கூறியதற்குரிய காரணத்தை விளக்கிக் காட்டுவார் போன்று பலவிடங்களில் அநுமனைப் பேசச் செய்கின்றார். முன்னதாக ஒருவருடைய குண நலனைக் கூறிப் பின்வரும் பகுதியில் அதனை வலியுறுத்திக் கூறும் முறைக்கு இஃதோர் எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறு கம்பர் கதைத் தலைவர்களை அறிமுகப் படுத்தும் நெறி சாலச் சிறந்ததாக அமைந்து கிடக்கின்றது. இந்நெறி யறிந்து கம்பர் கதையைக் கற்போர் இலக்கியச் சுவையை யுணர்ந்தின்புறுவர்.

3. தலைமை காத்தல்

காப்பியத் தலைவர்களின் தகுதி குன்றாது இடத்திற்கேற்றவாறு காலத்திற்கேற்றவாறு அவர்களாக விருந்து பேசுவதில் கம்பர் ஒப்புயர்வற்ற கவிஞர். ஒருவரே பலராக விருந்து அவர்தம் இயல்பிற்கு ஏற்றவாறு பேசுதல் பெரிதும் அரிது. அத்தகைய அரிய செயலைத் திறம்படச் செய்து காட்டியிருக்கின்றார் கம்பர். இதற்கு உறுதுணையாக விருந்தது அவர் பெற்றிருந்த அநுபவம். கம்பர் அரசன் மனையிற் பிறந்தவரல்லர். ஆனால் அரசன் மனையிற் புகுந்தவர். அரசர்க் கரசராகவும் அவர் வாழ்ந்தார். மக்களுள் ஒருவராக வாழ்ந்தவர் அவர் என்பதையும் மறத்தலாகாது. அவர்கள் கருத்தையும் பேசும் முறையையும் பெரிது பயின்றார். செல்வராக அவர் வாழ்ந்தாரெனக் கூற இடமில்லை. மனை வாழ்க்கை மாட்சிமையுடையதாக அவருக் கிருந்தது என்று கருதவும் முடிய

வில்லை. அவருடைய வாழ்க்கை எவ்வாறிருந்ததோ? யார் அறிவார்கள்? ஆனால் அவருடைய வாழ்க்கையின் குறிப்புக்கள் அங்கு மிங்குமாக நூலுட் சிதறிக் கிடக்கின்றன. அவையனைத்தையும் தொகுத்தால் அவருடைய வாழ்க்கை இவ்வாறிருந்திருக்கக் கூடுமென்பதை யறியலாம். அவ்வரலாற்றிற்குக் காலம், இடம், பேசுவோர் கேட்போர் ஆகிய குறிப்புகள் இல்லாதிருக்கலாம். மன நிலையைக் கொண்டு விளக்கப் படும் வாழ்க்கைக் குறிப்பே உண்மையான வாழ்க்கைக் குறிப்பாக அமையும். நூலாசிரியரின் நூலுட் கிடைக்கும் குறிப்புகளைக் கொண்டு தொகுக்கும் குறிப்பு வழங்கப்படும் வரலாற்றினும் சிறந்ததாகவும் உண்மை யுடையதாகவும் இருக்கும். ஒன்று காட்டுவேன்.

தண்டக வனத்துறை தாபதர்கள் இராமன் வரவை யறிந்தார்கள். தாயெதிர் கண்ட சேயென உள்ளந் தழைப்புற்றார்கள்; போய் எதிர் கொண்டார்கள். தமது உறையுளிற்கு இராமனை அவர்கள் விரும்பி அழைத்துச் சென்றார்கள். இதனைக் கம்பர்

மனையுள் நீங்கிய மக்களை வைகலும்
நினையு நெஞ்சினர் கண்டிலர் தேடுவார்
அனையர் வந்துற வாண்டெதிர்ந் தார்களின்
இனிய மாதவப் பள்ளிகொண் டெய்தினார்

என்று கூறுவர். இப்பகுதியைக் கற்போர் மதியைக் கண்ட மலரென முனிவர்கள் மனம் மலர்ச்சியுற்றார்களென்றோ, செங்கதிரவனைக் கண்ட செந்தாமரையென் மகிழ்ச்சியுற்றார்களென்றோ, அன்றி அவருக்கே யுரித்தான உவமையாகிய தாயெதிர் கண்ட கன்றென

மனம் மகிழ்ந்தார்களென்றே கம்பர் கூறியிருப்ப ரென்று கருதுவார்கள். காப்பியங்களில் ஒருவரை ஒருவர் எதிர்கொள்ளுங்கால் இவ்வுவமைகளை யாள்வது புலவர்களின் வழக்கம். ஆனால் கம்பர் கூறும் உவமை நம்மைச் சிந்தனையுள் ஆழ்த்துகின்றது.

வீட்டை வெறுத்து ஒரு குழந்தை வெளியே ஓடி விட்டது. குழந்தைக்கு வீட்டிலிருக்கும் விருப்பு இல்லாதவகையில் வீட்டின் சூழ்நிலை இருந்தது போலும்! தாய் தந்தையர்களின் அன்பையும் தள்ளியோடும்நிலை அக்குழந்தைக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது. ஓடிய குழந்தையைத் தேடி இரவும் பகலும் நைந்தார்கள் பெற்றோர்கள். இருவரும் தேடியலைந்தும் குழந்தையைக் கண்டார்களிலர். இருவரும் எதிர்பாராத நிலையில் தேடிய குழந்தை தானே ஓடிவந்து வீட்டினுள்ளே புகுந்தது ஒரு நாள். பெற்றோர் அக்குழந்தையை எவ்வாறு அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றிருப்பார்களோ அவ்வாறு இராமனை வரவேற்றார்கள் முனிவர்கள் என்று கம்பர் கூறுகின்றார். இதனைச் சிந்தித்துப் பார்க்கும்பொழுதுதான் இத்தகைய உவமை இவர் நினைவிற்கு வந்தது எவ்வாறு என்ற வினா எழுகின்றது. அவர் வாழ்வின் நிழலோ இது எனக் கருதவும் வேண்டி யிருக்கின்றது. இவ்வரிய உவமையை அவர் வாழ்வின் நிழலெனக் கொள்ளின் அதினின்றும் பலவற்றை நாம் உய்த்துணரக் கூடும். உண்மை வரலாறாகவும் அது விளங்கும்.

இது நிற்க, பலரோடு பழகிப் பெற்ற பயிற்சி கம்பருக்கு நிரம்ப உதவி புரிந்திருக்கின்றது. கம்பர் அரசர்கள் போற்ற வாழ்ந்தவர்; அரசர்கள் இல்லில்

வளர்ந்தவர். ஆகவே அரசர்களின் பழக்க வழக்கங் களையும் பேசும் முறையையும் நன்றாக அறிந்திருந் தார். அப்பழக்கம் கம்பருக்குப் பெரிதும் உதவியது. சோழர்களின் அரண்மனைப் பழக்க வழக்கங்களை அயோத்தி யரண்மனைப் பழக்க வழக்கங்களாகக் காட்டியிருப்பதில் வியப்பில்லை யல்லவா! இராமன் காப்பிய முதற்றலைவன். ஏனைய தலைவர்களும் ஆங் காங்கே காப்பியத்தில் காட்சி யளிக்கின்றனர். அவர் களுடைய நிலைக்கேற்றவாறு தலைமை நிலையைக் கம்பர் பேணிப் போற்றியிருக்கும் திறம் பெரிதும் வியத் தற்குரியதாக விருக்கின்றது.

இராமன் முனிவர் தவச்சாலைக்கு வந்திருந்ததை யறிந்து வந்தடைந்தான் குகன். அவன் கூவா முன் னம் இளையோன் குறுகி நீ யாவன் என வினவினான். நின் முன்னவன் கழல் சேவிக்க வந்தேன் என்று செப்பினான் குகன். அண்ணலும் விரும்பு அவனை அண்ணனிடம் அழைத்துச் சென்றான். சென்ற குகன் கண்ணனைக் கண்ணின் நோக்கி மண்ணின் மீது விழுந்து வணங்கி யெழுந்தான். தான் கொண்டு வந்த தேனையும் மீனையும் அன்போடளித்து அருள் நோக்கி நின்றான் வேடர் தலைவன். இராமன் அவற்றை மனத்தால் ஏற்று இன்று போய் நாளைவா நின் தோணியுடன் என்று கூறினான். நீங்க விருப்ப மில்லாத தன் ஆசையையெடுத்துச் சொல்லி அன்றிரவு அவருடன் தங்க அநுமதி பெற்று மகிழ்ந் தான் அவனும். இராமனும் இலக்குவனும் ஓரிடத் திருந்த அமையத்து அருகில் சென்று வாய் புதைத்து நின்று சில வினவத் தொடங்கினான். முதலாவதாகக்

குகன் இராமனை நோக்கி அயோத்தியைவிட்டுத் தாங்கள் கானமடையக் காரண மென்னவென்று கேட்டான். அதற்கு அருகிலிருந்த இலக்குவன் விடை கூறினன். இவ்வாறு கம்பர் காட்டும் முறை சிறப்புடைத்தாக அமைந்து கிடக்கின்றது.

திருநகர் தீர்ந்தவண்ணம் மானவ! தெரித்தியென்னப்
பருவரல் தம்பி கூற

என்பது கம்பர் கவி. இராமனைக்கேட்ட வினாவிற்கு இலக்குவன் விடையளித்தான் என்று கம்பர் கூறுகின்றார். இராமன் காப்பியத் தலைவனுதலால், மன்னர் மன்னனுதலால், வேடர் தலைவன் வினாவிற்கு அவன் விடையிறுத்தல் பொருத்தமாகா தென்று கம்பர் கருதினார்போலும். தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணியை நீத்து வந்தேனென இராமனே தன் பெருமையைக் கூறுவதாகப் பாடுதல் சிறப்புடைத் தாகாதென்றும் ஆசிரியர் கருதியிருக்கலாம்.

ஆகவேதான் ஆசிரியர் இலக்குவனைக் கொண்டு விடை யிறுக்கின்றார் குகன் வினாவிற்கு. இஃதோரிடமன்று; பலவிடங்களில் ஆசிரியர் இம்முறையைக் கையாளுகின்றார். அவையனைத்தையும் ஒருங்கு தொகுத்துப் பார்க்கும் பொழுதுதான் ஆசிரியரின் அருமை பெருமைகள் புலனாகின்றன.

சுக்கிரீவனைக் காண விரும்பும் தன் விருப்பினை அநுமனிடம் தெரிவித்தான் இராமன். தானே சென்று அவனை அழைத்துவருவதாகக் கூறிப் புறப்பட்டான் அநுமன். புறப்பட்ட அநுமன் "யாரென

இயம்புகேன் யான் எங்குலத் தலைவற்கு உம்மை" என்ருெரு அழகான விஞவையும் இராமனை நோக்கி விடுத்தான். அருகிலிருந்த இலக்குவன் தம் குலப் பெருமையையும் தசரதன் சிறப்பையும், இராமன் வன நண்ண நேர்ந்த வரலாற்றையும் இராவணனல் நேர்ந்த இழப்பையும் எடுத்துக் கூறித் தன்னையும் யார் என்று அறிமுகஞ் செய்துகொண்டானென்று கம்பர் கூறுவர்.

> தன்னுடை யுரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவினல்கி
> நன்னெடுங் கானஞ் சேர்ந்தான் நாமமு மிராம
> னென்பான்
> இந்நெடுஞ் சிலைவலானுக் கேவல்செய் யடியன் யானே

என்பதே அது. குகன் விஞவிற்கே இராமனைக் கொண்டு விடையிறுக்க விரும்பாத கம்பர் ஈண்டு இராமனை விடையிறுக்க விடுவர்கொல்! சீதையை இராவணன் கொண்டு சென்ற வரலாற்றையும் கூற வேண்டியநிலைமை வேறு இங்கு மிகுதியாயிற்று. இராமனைச் சிறந்த வீரன் எனக் கருதியவர் கம்பர். வீரன் மனைவியை மற்ருெருவன் கவர்ந்து சென்று விட்டான் எனவும் அவனைத் தேடிவருகின்ருனென வும் கூற விரும்புவரோ? மக்களே இத்தகைய செய் தியை மற்றவர்களிடத்தில் கூற வொருப்படாரெனின் இராமன் கூறியதாகக் கம்பர் எவ்வாறு கூறுவார். ஆகவேதான் ஆசிரியர் இலக்குவனைக் கொண்டு விடை தருகின்ருர்.

மற்ருென்றையுங் காண்போம். மறைந்து நின்று அம்பேவிய இராமனைக் கண்ணெதிரே கண்ட அள வில் கனன் றெழுந்தான் வாலி. தனது செயல் ஏற்

றதே யெனக் காட்டத் தொடங்கினான் இராமன். சொற் போர் வளர்ந்தது. இறுதியாக மறைந்து நின்று அம்பை யெய்தது மறச்செயல்தானோ வென்று வாலி இராமனை வினவினான். இவ்வினாவிற்கு இராமன் விடையிறுத்தா னில்லை. இராமன் கூறுவதாக விருந்தால் அடைந்தோரை யாதரித்தல், வீரம், ஆகிய இரண்டனுள் அடைந்தோரை யாதரித்தலே தலை சிறந்த அறமாகும்; அதனை உலகில் நிலைநிறுத்தவே யான் பிறந்தேன்; நின்னுடன் பிறந்தானை அஞ்சலென்று ஏற்றுக் கொண்டேன்; ஆகவேதான் நின்னைக் கொன்றேன் என்று கூறவேண்டும். தன் பெருமையைத் தானே கூறவேண்டிய நிலையும் இங்கு ஏற்படும். அதனுடன் வீரத்தை இரண்டாவதாகவே யெண்ணுகின்றேன் என்று இராமன் கூறியதாகவும் கூறவேண்டும். காசில் கொற்றத் திராமனுக்கு மாசும் ஏற்படும். நெருக்கடியான இச்சூழ்நிலை யினின்றும் இராமனை நீக்க நினைத்தார் ஆசிரியர். இலக்குவனை யழைத்து விடைதரச் செய்தார். இவ் வினாவைக் கேள்வியுற்ற அளவில் அருகில் இருந்த இலக்குவன் நினது உடன் பிறந்தோன் எனது உடன்பிறந்தோனை முன்னதாகவே சரணடைந்தான்; நின்னைக் கொன்று அவனைக் காப்பதாக எனது முன்னோன் வாக்களித்திருக்கின்றான்; எனது தமையன் நேராக உனது முன்னே தோன்றினால் நீயும் அவனைச் சரணடைவாய்; நினதுடன் பிறந்தோனுக்குக் கொடுத்த வாக்கு நிறைவேறாது போகும் என்பது கருதியே இராமன் மறைந்து நின்று அம்பை யேவினான் என்று விடை தந்தான். இவ்வாறு காப்பியத் தலைவ

னுடைய தலைமையைக் கம்பன் காக்குந் திறம் கண்டு மகிழ்தற்குரிய தொன்றாகும். இவைபோலப் பல விடங்களில் ஆசிரியர் இம்முறையைக் கையாண்டிருக் கின்றார். அவையனைத்தையும் அறிந்து நாம் மகிழ் வதே கம்பன் நம்மிடத்திருந்து வேண்டும் கையுறை யாகும்.

இராமனுக்கு மட்டுமன்று; மற்றைய தலைவர் களுக்கும் ஆசிரியன் இம் முறையைக் கையாண்டு அவர்களின் தலைமையை நிலைநாட்டி யிருக்கின்றான். விடையிறுக்க முடியாத நிலை சுக்கிரீவனுக்கும் ஒரு முறை நேர்ந்ததுண்டு. சுக்கிரீவன் விருந்தினனாய் மலையிடைப்பட்டதொரு பாறையின் மீது வீற்றிருந் தான் இராமன். சுக்கிரீவன் அருகில் நின்று அரிதில் தேடிக் கொணர்ந்த காய் கனி கிழங்குகளை யெடுத் துக் கொடுத்துக் கொண்டிருந்தான். தனியே இருந்து விருந்தோம்பும் சுக்கிரீவனைப் பற்றிச் சிறிது சிந்தித் தான் இராமன். தனியே யிருந்து நீ விருந்தோம்புவ தேன் எனக் கேட்க நினைத்தான். அதனை எவ்வாறு கேட்பதென்று சற்றுத் திகைத்தான். தன்னையும் உட்படுத்தி என்னைப் போன்றுதான் நீயும் மனைவி யைப் பிரிந்து நிற்கின்றாயோ வெனக் கேட்டான்.

> பொருந்து நன்மனைக் குரிய பூவையைப்
> பிரிந்துளாய் கொலோ நீயும்

எனக் கேட்டதாகக் கம்பர் கூறுவர். இதற்குச் சுக்கி ரீவன் விடை தந்தானில்லை. எவ்வாறு விடை தர வியலும்? தன் மனைவியை மற்றொருவன் வலிய வவ்வி வாழ்கின்றானென்பதை எவ்வாறு கூறுவான்

சுக்கிரீவன்? அருகேயிருந்த அநுமனைத் தட்டியெழுப் பினார் கம்பர்.

> என்ற வேலையி னெழுந்து மாருதி
> குன்று போலநின் றிருகை கூப்பினான்

வணங்கி யெழுந்த அநுமன் வாலியின் வரலாற்றை யும் வாலிக்கும் இளவலுக்கும் பகைமை வந்த வரலாற் றையும் விளக்கி

> உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
> அருமருந் தையு மவன் விரும்பினான்
> இருமை யுந்துறந் திவனி ருந்தனன்

எனச் சுக்கிரீவன் நிலையையும் கூறி முடித்தான். இவ் வாறு கூறக்கூடிய செய்தி இது கூறக்கூடாத செய்தி இது யென்பதைப் பகுத்துணர்ந்து பாத்திரங்களின் நிலைக்கேற்பப் பேசும் ஆசிரியர் திறம் பெரிதும் போற்றுதற்குரிய தன்றோ!

இனி மற்றொன்றையுங் கண்டு தலைமை காத்தலி னின்றும் புறப்படுவோம். இலங்கை வேந்தனுக்கு அறிவுரைகள் பல கூறினான் விடணன். மற்றவர் தாரத்தை விரும்புவது கூற்றத்தை விரும்புவதே யாகும் என்றும் எடுத்துக் காட்டினான். இலங்கை வேந்தன் செவி சாய்த்தானில்லை. இறந்துபட முடிவு செய்தான் போன்று அவன் காணப்பட்டமையால் அவனிடத்திருந்து விலக வெண்ணினான் வீடணன். அனலன் முதலிய அமைச்சர் நால்வருடன் புறப்பட் டான் வட திசை நோக்கி வீடணன். இராமனுடைய படைகள் கூடியிருக்கும் தென்கரை மருங்கில் வந்து சேர்ந்தார்கள் நால்வரும். இவர்களை வானர வீரர்கள்

கண்ட அளவில் கொல்லுமின் ; பற்றுமின் என்னுஞ் சொல்லோடு வந்து குவிந்தார்கள். நீவீர் யார்? வந்தது எது கருதி? போர்புரியக் கருதிதானு? அன்றி வேறு எண்ணமுண்டா வென வினவினுர்கள் அனைவரும்.

வழக்கம் போன்றே இங்கும் வீடணனை விடை யிறுக்கக் கம்பர் விடவில்லை. தான் இலங்கை வேந் தனுக்கு அறிவுரைகள் பல கூறியதாகவும் அவற்றை அவன் கேளாததால் அவனை விட்டுத் தான் வந்த தாகவும் இராமனைச் சரண்புக வந்திருப்பதாகவும் வீடணன் கூறியாக வேண்டும். தான் அறிவுரை கூறியதாக இலங்கை வேந்தனிடமிருந்து வந்த வீட ணன் கூறினுல் மற்றவர்கள் நம்பமாட்டார்களென் பதுமட்டுமன்று; ஐயமும் கொள்வார்கள். அடைக் கலம் புகவே வந்திருக்கின்றேனென்று வீடணன் விளக்கினுலும் மற்றவர்கள் தெளிவு பெருர். அடைக் கலம் புக வந்திருக்கின்றேன் என்று வீடணனே கூறுவதும் சிறப்புடைத்தாக விராது. எனவே தான் அருகில் நின்று கொண்டிருந்த, அமைச்சர்களில் ஒரு வஞகிய அனலன் விடை கூறத் தொடங்கி வீடணன் பெருமையையும் அவன் பெற்ற வரங்களையும் விளக்கிக் கூறித், தமையனுக்கு அறிவுரைகள் பல கூறினுன்; அதோடுமட்டு மன்றி

சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி
இடுதியே சிறையிடை யிறைவன் தேவியை
விடுதியே லுய்குதி விடாது வேட்டியேல்
படுதி

யென முடிவையும் சுட்டிக் காட்டினுன்; எனினும் அவன் அவற்றைக் கேளாது போகவே இராமனைச்

சரணடையும் எண்ணத்துடன் வந்திருக்கின்றான்; வீடணன் என்பது அவன் பெயராகும் என்று கூறி முடித்தான்.

இவ்வாறு மிகச் சிறந்த முறையில் கம்பர் தலைவர்களின் தலைமையைக் காத்துப் பேசியிருக்கும் திறம் பெரிதும் போற்றுதற்குரியதாகும். இலக்கியச் சுவையைப் பெறவேண்டுமாயின் இங்ஙனங் கூர்ந்து நோக்கி ஆய்ந்து கற்கவேண்டுதல் இன்றியமையாததாகின்றது.

4. வளர்க்கும் வகை

பாத்திரங்களின் இயல்பறிந்து அவ்வியல்பிலே நின்று பேசுதல் பெரிதும் அரிய செயல். காப்பியம் வளர வளரப் பாத்திரங்களின் பண்புகளையும் வளர்த்துக் காட்டவேண்டும் ஆசிரியர்கள். காப்பியத் தலைவர்களின் கருத்தறிந்து அக்கருத்து நிறைவேற்றப் படும் வரை அதனைப் படிப்படியாக விறுவிறுப்புடன் உச்ச நிலையடையச் செய்யவேண்டியது நூலாசிரியர்களின் நீங்காக் கடனும். காப்பியங்களில் வரும் தலைவர்களனைவர்க்கும் இம் முறையை நூலாசிரியர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். இல்லையானால் ஒரு பகுதி உயர்ந்தும் மற்றொரு பகுதி தாழ்ந்தும் அமைந்திருப்பதாகக் கற்போர் உணர்வர். காப்பியத்தின் பகுதிகள் அனைத்தும் சுவை பெற்று விளங்கப் பண்டைய நூலாசிரியர்கள் இம்முறையை மேற்கொள்வாராயினர். எடுத்துக்காட்டாகச் சீதையைக் கம்பர் வளர்த்துக் காட்டும் முறையைக் கூறலாம்.

காப்பியம் வளர வளரச் சீதை வளர்ந்து வருவதைக் காண்கின்றோம். சீதையின் பண்புகளும் படிப்படியாக வளர்ச்சியுற்று உச்ச நிலையெய்தி நின்றதைக் கம்பர் திறம்படக் காட்டியிருக்கின்றார். அழலிடைப் பட்ட அம்பொன் மாசு நீங்கித் தேசு பெற்றொளிர்தல் போலச் சீதையின் பண்புகளும் பலவகைப்பட்ட சூழலிடைப் படப்படப் புத்தொளி பெற்றுத் திகழுந் திறம் செவ்வனே ஆசிரியரால் சொல்லப் பட்டிருக்கின்றது.

ஏதுமறியாத பேதையாகச் சீதையை முதலிற் கம்பர் காட்டுகின்றார். "எந்தையே யேவ நீரே யுரை செய யியைவதுண்டேல் உய்ந்தனன்" என்று கூறிக் கேகயன் மகளிடம் விடை பெற்றுக்கொண்டு தன திருப்பிடம் அடைந்தான் இராகவன். தாய் தந்தை ஆகிய இருவராணையையும் மேற்கொண்டு இன்று யான் கான்புக விருக்கின்றேன்; வருவேன் விரைவில்; வருந்தற்க நீ யென்று சீதையிடம் செப்பி நின்றான் இராமன். நாயகன் வனம் நண்ணலுற்றானென்பதனலோ, மண்ணாட்சியை அவன் இழந்தானென்பதனலோ சீதை வருந்தினளில்லை; வருந்தாதே; வருவேன் விரைவில் என்றதனை நினைத்து நினைத்துத் தேம்பினள். இக் காட்சியைக் கண்ட இராமன் நின்னை யழைத்துப் போக எனக்குத் தடையேதுமின்று; வெம்மை மிக்க காட்டிற் செல்ல நின் மென்மை மிக்க அடிகள் ஆற்றாவே யென்றுதான் மயங்குகின்றேன் என்று கூறினன். இதனைக் கேட்ட சீதை சீற்றமடைந்தாள். "நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங் காடு" என்று கேட்டுப் பெருமூச்சு விட்டாள்.

இராமன் மேலும் அறிவுரை கூறத் தொடங்கினன். அதனை அவள் நின்று கேட்டாளில்லை. விரைந்து உள்ளே சென்று மரவுரி தரித்து வந்து ஐயன் கையைப் பிடித்துக்கொண்டு நின்றாள் புறப்பட. இராமன் வேறு அறிவுரை ஒன்றுங் கூற அறியானாய் யான் கூறியதை நீ சிறிதும் சிந்தித்துப் பார்த்தலின் றிப்புறப்படுகின்றாய்; நீ எனக்கு எல்லையற்ற இடர் தருவாய் என்று கூறிச் சலிப்புற்றான். சீதையும் சிறிது பிணக்கத்துடன் யான் தங்களோடிருப்பது ஒன்றுதான் தங்கட்குத் துன்பம் தருவது; என்னை இங்கே விட்டுச் சென்றுவிட்டால் காட்டில் உங்களுக்கு இன்பமே உண்டாகும்போலும் என்று கூறி நடக்கத் தொடங்கினாள். இங்ஙனம் சிறுமியர்களின் உள்ளத்தியல்பு, சொல், செயல் ஆகியவற்றைச் சீதை பால் சார்த்திக் கம்பர் காட்டியிருக்குந் திறத்தை இங்குக் காண்கின்றோம்.

தேவியும் இளவலுந் தொடர இராமன் அயோத்தியின் நெடுந் தெருக்களைக் கடந்து கோட்டை மதிலின் வாயிலை வந்தடைந்தான். நெடுந் தொலைவு வந்துவிட்டதாகக் கருதினாள் சீதை. தாம் செல்ல வேண்டிய காடும் அணித்தே யிருக்குமென்று அவள் கருதினாள். ஆகவேதான் அவள் ஐயனை நோக்கி நாம் போகவேண்டிய கானகம் எங்குள்ளதென்று வினவினாள். ஐயனும் சிறியதோர் முறுவல் பூத்து ஒன்றும் சொல்ல வல்லனல்லனாயினன். மன்னர் மன்னன் மாளிகையை யன்றி மற்றொன்றையும் அறியாதவள் சீதை யென்பதை இங்கு ஆசிரியர் சொல்லாமல் சொல்கின்றாரல்லவா!

தேர்மீது கொண்டுய்த்துத் திரும்பும் சுமந்திரன் "யாவது கூறுவேன் இரும்பின் நெஞ்சினேன்" என்று கேட்டு நின்ருனுக, அவனுக்கு விடையிறுக்கு மிடத்தில் அடுத்துச் சீதையைக் காண்கின்றோம். கான மடைந்ததற்கு கவலைப்பட்டவளாக அவளை அறிய முடியவில்லை. இந்நிலைக்குக் காரணமாக விருந்த கைகேயியையோ மந்தரையையோ மனத் தாலும் நினைத்தாளில்லை. காட்டில் வாட்டவிருக்கும் துன்பங்கள் அவள் எண்ணத்தில் எழுந்தது மில்லை. ஊர்மிளை முதலிய தங்கைமார்க்குச் செய்தி சொல்லி யனுப்புகின்ருள் பொன்னிறப் பூவையையும் கிளியை யும் போற்றவேண்டு மென்று.

அன்னவள் கூறுவா ளரசர்க் கத்தையர்க்கு
என்னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையும் கிளியும் போற்றுகென்று
உன்னுமென் தங்கையர்க் குணர்த்து வாயென்ருள்

யென்பர் கம்பர். இவ்வாறு இதுவரை ஏதுமறியாத வளாகச் சீதையை வளர்த்து வந்த கம்பர் இனி அறி வுடைமகளாக வளர்க்கத் தொடங்கி விடுகின்ருர்.

நால்வகைப் படைகளும் நகர மாந்தருஞ் சூழ நம்பியை நாட்டிற்கழைத்துச் செல்ல விரைந்து வந்த பரதன் இராமனைக் கண்டான். அறத்தை அழித் தாய்; அருளை நீத்தாய்; முறைமையைத் துறந்தாய் என்று சொல்லியவண்ணம் இராமன் அடிகளில் வந்து வீழ்ந்தான் பரதன். பரதனை இருகைகளாலும் எடுத்து மார்புறத் தழுவி அருகிலிருத்தி நலம் விசா ரிக்கத் தொடங்கினுன் இராமன். மன்னர் மன்னன் வலியனோ வென வினவினுன் முதலில். நினது பிரி

வெனும் பிணியினால் உழன்ற மன்னவன் என்னை யீன்ற கூற்றத்தால் உயிர் கவரப்பட்டான் என்று கூறினன் பரதன். இதனைக்கேட்ட இராமன் உள்ளம் நைந்து அழுதரற்றினான். அருகிலிருந்தவர்கள் தேற்ற ஒருவாறு தேறுதலுற்றுச் சீதையை யடைந்து எனது பிரிவினால் தந்தை இறந்துவிட்டார் எனக் கூறினன். துன்ப மென்பதைத் துயிலிலுங் காணாத சீதை இச்செய்தியைக் கேட்ட அளவில் செய்வதறியாது திகைத்தாள். கண்களினின்றும் நீர் பெருக மண்ணில் வீழ்ந்து அரற்றத் தொடங்கினாள். இராமனுடன் இருந்தமையால் சீதைக்குத் துன்பத்திற் கிருப்பிடமான காடும் இன்பத்தைத் தரும் நாடாக விருந்தது. ஆனால் மன்னர் மன்னன் துஞ்சினான் என்னுஞ் சொல்லாலுளதாகிய துன்பம் இராமன் அருகிலிருப்பினும் அவளால் பொறுக்க முடியாத அளவு பொங்கி வழிந்தது. இப்புதுமையைக் கம்பர்

அன்னமுந் துயர்க்கட லடிவைத் தாளரோ

வென்று கூறுவர். முதல் முதலாகத் துன்பத்துள் அடிவைத்தாள் சீதை யெனத் துன்பமும் இன்னதெனவறிந்தாள் சீதையெனக் கம்பர் காட்டுகின்றார். துன்பத்தினும் ஏற்ற துணைவன் இல்லை யல்லவா! சுடச் சுடப் பொன் ஒளிவிட்டு விளங்குவது போன்று துன்பங்கள் ஒன்றன் பின் ஒன்று வந்து தொல்லை தரத்தரச் சீதையின் பண்புகள் ஒளிவிட்டுக் காட்சி யளிக்கின்றன. அக்காட்சிக்குக் கம்பர் இங்கே விதை யிட்டிருக்கின்றார். துன்பத்தின் அடிப்படையில் பண்புகளனைத்தும் படிப்படியாக வளர்கின்றன.

அடுத்துக் கோதாவிரிக் கரைக்கு வருவோம். மானைப் பிடித்துவரச் சென்றான் இராமன். அடுத்து இளவலும் புறப்பட்டான் மாய மானின் ஓசையால். சீதை தமியளானாள். காலமறிந்து வந்தடைந்தான் இலங்கை வேந்தன் மாறுவேடம் பூண்டு. வேடத்தை மெய்யடியார் வேடமெனவே கருதினாள் சீதை. ஆசனந்தந்து அமரச் செய்த சீதை அவனுடைய வரலாறு கேட்டறிந்தாள். அரக்கர்களை யழிக்கவே ஐயன் ஈண்டெய்தினன் என்பதையும் மறைத்தலின்றி வெளிப்படுத்தினாள். இதனைக்கேட்ட அளவில் துறவியும் எழுந்த சினத்தால் உருவந் துறந்தான். நிலத்தொடு வெடுத்து நெடுந்தேரில் வைத்துக்கொண்டு புறப்பட்டான்.

சீதை எதிர்பாரா நிலையில் நிகழ்ச்சி நடக்கத் தொடங்கிற்று. ஊன்றுகோல் போன்று உதவுமல்லவா உள்ளுறையும் பண்புகள். காலம் நோக்கிக் கரந்து நின்ற மறம் கனன்றெழுந்து காட்சியளிக்கின்றது. அரக்கனின் வஞ்சமும் நெஞ்சுர மின்மையும் அவள் கண்ணெதிரே தோன்றின. விரைந்தெடுத்துப் பறந்து போகும் அரக்கனை நோக்கி நிறுத்து நின் தேரை யென்றாள். புன் முறுவலோடு நன்னுதலியைப் பார்த்தான் அரக்கனும். வஞ்சத்தைத் தஞ்சம் புகுந்த நெஞ்சனே! மாய மான் ஒன்று ஆக்கினாய்; அதன் பின்னை உனது கூற்றைப் போக்கினாய்; கூற்றிற்கிளைய குமரனும் தொடர்ந்து செல்ல வழி நோக்கினாய்; பின்னைக் கொண்டு போகின்றாய்; அவனோடு போர்புரிய நினக்கு ஆற்றலிருக்குமாயின் அதனைக் காட்டிப் போ. நிறுத்து

நின் தேரை; யென்று அறை கூவினளாக் கம்பர் காட்டுவார். அந்த அளவு மனமும் அறிவும் உரிய காலம் வந்த அளவில் வளர்ந்து காட்சியளிக்கின்றன. துன்ப மின்ன தென்பதை முன்னர் அறிந்த சீதை வஞ்சம் இன்ன தென்பதையும் ஈண்டறிந்தாள். மறக் குலத்திற் பிறந்த மகளாகச் சீதையை இங்குக் கம்பர் காட்டியிருக்கின்றார்.

'கல் மருங்கெழுந்து என்று மோர் துளி வரக் காணு நன் மருந்துபோல் நலனுற உணங்கிய' நங்கையை யடுத்து அசோக வனத்தில் காண்கின்றோம். பல சொல்லி யனுப்புகின்றாள் சீதை அநுமன் வாயிலாக. குறித்த ஆண்டுகளைக் கழித்து இராமன் அயோத்தி சேர்கையில் என்னை அவன் மறப்பினும் நீ மறவாது எனது மாமியர்களிடத்து இலங்கையில் சீதை இறந்துபடும் நேரத்தில் தங்களைத் தொழுதாள் யென்று கூறுவாயாக வென்றும் எனது தந்தை, தாய்,உறவினர் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவிப்பாயாக வென்றும் சீதை செய்தி சொல்லி யனுப்புகின்றாள். தனது பிரிவால் வருந்தும் மக்களின் துன்பத்தைப் போக்குவதற்கும் அன்னையின் அல்லலை யகற்றுவதற்கும் பரதனின் பாரத்தைப் போக்குவதற்கும் இராமன் அங்குப் போவானே யன்றி எனது துன்பத்தைப் போக்க எங்ஙனம் இங்கு வருவான் என்றெண்ணியு மேங்குகின்றாள். இராமனது நிலை குறித்து வருந்தியவள் காட்டில் இராமனுக்குக் காய், கனி, கிழங்கு ஆகியவற்றை யார் எடுத்துப் படைப்பார்கள் என்றும் விருந்தினர் வரக் கண்டால் அவரைப் பேண முடியாத தன் நிலை குறித்துப்

பெரிதும் வருந்துவான் என்றும் எண்ணி யேங்கு கின்ருள். பெற்ற தாய்மார்களும் தம்பிமார்களும் மீண்டும் வந்து அழைத்தார்களாளுலும் குறித்த காலத்தைக் கழித்தாலன்றி அயோத்தி செல்லான் இராமன் எனச் சொல் தவரு மெய்த் திறத்தை எண் ணிப் பார்த்தாள். கரனும், விராதனும் கவந்தனும் பட நின்ற வீரத்தையும் நினைத்து அஃது எற்குப் பயன் படுமாவென ஏங்கினுள். கணவனைப் பிரிந்து கள்வர் ஊரில் பல திங்கள் இருந்து திரும்பிய காரிகைஇவளே யென மகளிர் பழித்துரைப்பரே; இதனை எங்ஙனம் ஆற்றுவேன் என்றும் நினைத்து வருந்திஞள்.

இங்ஙனம் தன்னைக் காத்தல், உற்ருர் பெற்ரு ரிடத்து அன்பு, குடும்ப நிலையுணர்வு, கடமையுணர்ச்சி, விருந்தோம்பல், கணவனின் ஆற்றலறிந்து வாழ்தல், பழியஞ்சுதல் ஆகியவனைத்தும் நிரம்பிய, மனை மாட்சி நிரம்பிய மடந்தையாகக் கம்பர் காட்டியிருக்கும் திறம் போற்றுதற்குரியதாகும். எல்லாத் திறங்களினும் வளர்ச்சி பெற்று வாழ்பவளாகச் சீதை இங்குக் காணப்படுகின்ருள். இங்ஙனம் சீதையை வளர்த்து வந்த கம்பர் அவளுடைய நோக்கத்தை வெளியிடும் வாயிலாகக் கற்பின் சிகரம் இவளே யெனக் காட்டத் தொடங்குகின்ருர்.

இவளை இங்கு விட்டுப் போதல் தனது ஆற்ற லுக்கு ஏற்றதன்றெனக் கருதிய அநுமன் இராமன் பால் அவளைக் கொண்டுசெல்ல விரும்பும் தனது எண்ணத்தைச் சீதைபால் வெளியிட்டான். தன்னு டைய ஆற்ருத் தன்மையை அநுமன் குறிக்கின்ரு னெனச் சீதை நினைத்தாள் போலும்! அடங்கிக்

கிடந்த ஆற்றல் அனற் பிழப்பாகப் புறப்படுகின்றது. மறக் கற்பின் திறம் வெம்மையை வாரி வீசுகின்றது. எனது எண்ணம் இதுவேயென அறுதியிட்டுரைத்துக் குவலயம் அறியக் குன்றின் மீதிட்ட விளக்காகக் காட்சியளிக் கின்றாள் சீதை.

அநுமனை நோக்கி அவள் பின்வருமாறு கூறு கின்றாள்; நினது ஆற்றலுக்கு என்னை யெடுத்துச் செல்லுதல் அரியதன்று; ஆனால் அது என்னை வஞ் சித்துக் கொண்டு வந்த அரக்கனின் செயலினின்றும் வேறுபட்டதாகாது; இவ் விலங்கையில் விலங்கனைய அரக்கர்களின் எலும்பு மலை மலையாகக் காட்சியளிக்க வேண்டும்; இதனை யான் செய்யவில்லையானால் இற் பிறப்பு, ஒழுக்கம், கற்பு, ஆகியவற்றில் யான் குறை வற்றேன் என்பதை மற்றவர்க்கு எவ்வாறு காட்டு வேன்; எனது ஆற்றலை யான் அறியாதவளல்ல; சொல் ஒன்றினாலேயே இவ் விலங்கையை மட்டுமன்று எண்ணற்றிலங்கும் உலகங்களனைத்தையும் நீறாக்கு வேன்; அது செய்ய என்னால் இயலும்; தூயவ னுடைய வில்லினாற்றற்கு அது மாசு தருமென்று கருதியே அது செய்யாது நின்றேன்.

அல்லன் மக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்

எனக் கம்பர் அனற் பிழம்பு வீசிய கனலை நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார்.

உலகங்களனைத்தையும் அன்றே எரித்து யானும் இறந்துபட்டிருப்பேன்; அது செய்யாது நின்றேன்;

அறம் தவறுதென்பதை அறிவிக்கும் பொருட்டும் நாயகன் வலிமையை நாட்டும் பொருட்டும், எனது தூய்மையைக் காட்டும் பொருட்டுமே இருந்தேன்; இருந்தேன் என்று சீதை தான் கொண்ட நோக்கங்களை அநுமனிடத்து எடுத்துரைப்பதாகக் கம்பர் காட்டித் தான்வளர்த்த சீதையின் வரலாற்றை முடிக்கின்றார்.

அறம் வழுவாதென்றும்
நாயகன்வலி யெண்ணியும் நானுடைத்
தூய்மை காட்டவு மித்துணை தாங்கினேன்

என்பதே கம்பர் குன்றின் மீது கொழுந்துவிட்டெரிய ஏற்றிவைத்த விளக்கு. இங்ஙனம் பேதைப் பருவத்தளாய நங்கையைப் பேரறிவுடையளாகப் படிப் படியாக வளர்த்து வந்த கம்பர் பெருமை போற்றுதற் குரியதன்றோ!

அடுத்துப் பிறன் மனைவியை விரும்பிய பேதையின் அவல நிலையையும் அங்ஙனமே வளர்த்துச் சென்ற ஆசிரியர் இறுதியாக ஆசைக்கு அவனைப் பலியிடும் வரலாற்றையும் காண்போம். முன்னர்க் காப்பியம் வளர வளரச் சீதையின் பண்புகள் வளர்ந்தோங்கிய வகையைக் கண்டோம். ஈண்டுக் காப்பியம் வளர வளர இலங்கை வேந்தனின் பண்புகள் ஒன்றன் பின் ஒன்றாகக் குறைந்துகொண்டே வருவதைக் காண்போம். சீதையின் பண்புகள் வளர வளர அவளின் பெருமையும் வளரலாயிற்று. ஈண்டு இராவணனின் பண்புகள் குறையக் குறைய அவனுடைய சிறுமையும் அவலமும் வளர்ந்தோங்குகின்றன. வளர்ச்சியை யடிப்படையாகக் கொண்டு பெருமையை

நாட்டிய கம்பர் ஈண்டுத் தளர்ச்சியை யடிப்படையா கக் கொண்டு சிறுமையைக் காட்டுகின்றார்.

> செல்வமோ அது அவர் தீமையோ இது
> அல்லினும் பகலினுமமர ராட் செய்வர்

என இலங்கை மாநகரைக் கண்ணுற்ற அநுமனே இங்ஙனம் இராவணனின் சிறப்பைப் பாட்டுகின்றான். முக்கோடி வாணுளைத் தான் முயன்ற பெருந் தவத் தால் பெற்றவன் இலங்கை மன்னன். உருப்பசி உடைவா ளேந்த, மேனகை வெள்ளிலையுதவ, செருப் பினைத் தாங்கித் திலோத்தமை நடக்கப் புறப்பட்டான் எனக் கம்பரே கூறுவராயின் அவனுடைய சிறப் பிற்கு வேறு எடுத்துக்காட்டு கூறுவானேன். தேவர் களனைருவம் அவன் ஏவிய தொண்டுகளைச் செய்யக் காத்து நின்றார்கள். கைலை மலையையும் நிலைகுலையச் செய்தான் என்பதொன்றே அவன் வீரத்தை விளக் கப் போதுமல்லவா! செல்வம், வீரம் ஆகியவற்றில் மட்டுமன்று அறிவிலுஞ் சிறந்தவனுகவே அவனைக் கம்பர் காட்டுகின்றார். சூர்ப்பநகை விரைந்தோடி வந்து தான் பட்ட பரிபவத்தை இலங்கை மன்னனுக் குக் கூறினாள். மன்னன் சினங் கொண்டான்; ஆனால் பொறுமையை யிழந்தானில்லை. ஆராய்ந்தே எதனையும் செய்ய வேண்டுமெனக் கருதி நினக்கு இது செய்தார் யாவர் என வினவினான். சூர்ப்பநகை மானிடர் தடிந்தனர் எனக் கூற, நடந்ததை விளக்க மாகக் கூறுக எனவும் வேண்டினான். சூர்ப்பநகை நடந்ததைக் கூறவே கரன் முதலியோர்களுக்கு இச் செய்தி தெரியாதோ வெனவும் கேட்டான். அவர்கள் போரிட்டு இறந்த செய்தியையும் அவள் சொல்லவே,

நிலைமை இந்த அளவு முற்றும் வகையில் நீ அவர்களுக்குச் செய்த தீமை யாது என்றும் கேட்டான். இப்பகுதியை இலங்கை மன்னன் அறிவுத் திறமுடையானென்பதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இவ்வாறாக எதனையும் ஆராய்ந்தறியும் அறிவு வாய்ந்தவனாகவே இருந்தான் இராவணன் எனக் கம்பர் முதலிற் காட்டுகின்றார். பின்னர்தான் அவனழிந்த திறம் படிப்படியாக விளக்கப்படுகின்றது.

திருமகளை யொத்த உருவமுடைய அவளை நின் பொருட்டு எடுக்கப் புகுந்தேன்; அப்பொழுதுதான் எனக்கு இந்நிலை யேற்பட்டதெனச் சூர்ப்பநகை கூறவே அவள் யாரென இலங்கை மன்னன் வினவினான். அவள் பெயர் சீதை யென்பர்; இராகவன் மனைவி யாவாள் அவள் என்று கூறியதோடு அவள் நிறுத்தவில்லை. சீதையின் அழகைப் பலவாறு புகழ்ந்து கூறினாள். இதனைக் கேட்ட மன்னன் உள்ளத்தில் ஆசைத் தீ கொழுந்துவிட்டெரியத் தொடங்கிற்று. சீதை இராகவன் மனைவியென்ற வெண்ணமே அவன் உள்ளத்தி லெழுந்ததாகத் தோன்றவில்லை. ஆகவேதான் பிறன் மனைவியை விரும்புவது பேதைமை யல்லவா வென்ற ஆராய்ச்சியும் அவன் உள்ளத்தில் தோன்றவில்லை. அறிவு இருக்குமிடத்தி லன்றோ ஆராய்ச்சிக்கு இடமுண்டு. சூர்ப்பநகையின் வருணனையைக் கேட்ட அளவிலேயே அறிவு அவனிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டது. தான் செய்தது பிழை யென்பதை அவன் எக்காலத்திலும் உணர்ந்ததுமில்லை; ஆகவே வருந்தியதுமில்லை. இறந்துபட்டவர்களைக் குறித்து

அவன் வருந்தியதுண்டு; ஆனால் தான் செய்தது பிழையெனக் கருதி அதன் பொருட்டு அவன் வருந்தியதில்லை. அறிவும் ஆராய்ச்சி யுணர்வும் உடையவனாகக் காணப்பட்ட மன்னன் அவற்றை யறவே அற்றவனாகக் காட்சி யளிக்கின்றான் சீதையின் வருணனையைக் கேட்ட அளவில். அறிவு அறை போயிற்று. அதன் அடிப்படையில் ஐம்புலன்களும் மனமும் மானமும் போகவே சிறுமைச் செயல் செய்யவும் புறப்படுகின்றான் இராவணன். இறுதியாக அனைவரும் அந்தோ வென்றிரங்கும் வகையில் அவனுயிர் பிரிகின்றது.

அறிவு போகவே ஐம்புலன்களும் ஒன்றின் பின் ஒன்றாக அவனை விட்டகல்கின்றன. சூர்ப்பநகை வருணித்த உருவத்தைத் தன்னுள்ளத்தில் எழுதிக் கொண்டான். அவ் வுருவத்தையே யெண்ணி, அவ்வுருவின் பெயரையே சொல்லி அவ்வுருவைக் கண்ணிலும் காணத் தொடங்கினான். கண்ட உருவனைத்தையும் சூர்ப்பநகை விண்ட உருவமாகவே கருதினான். உள்ளதை யுள்ளவாறு காணும் உணர்வற்றான். உருவெளித் தோற்றத்தில் சீதையைக் கண்டான். அவளே யென ஐயந் தீர்தற் பொருட்டுச் சூர்ப்பநகையையும் அழைத்து நீ கூறிய உருவம் இதுதானா எனவும் கேட்டான். எனவே பிறன் மனை விரும்பிய பேதை முதலிற் காணும் கண்ணை யிழந்தான்; கட்புலன் இழந்த குருடனானான்.

மற்றொருவன் மனைவியை விரும்பிய பேதை மற்றொன்றையும் அடுத்து இழக்கின்றான். ஆசை உண்ணின்று அனற்றுதலால் அனைத்தும் அவனுக்கு

TAMIL SANGAM

வெம்மை தருவதாகக் காட்சி யளிக்கின்றன். வசந்த காலமும் அவனுக்கு வெம்மையைத் தருகின்றது. மழைக் காலம் அவனுக்கு வேனிற் காலமாகவே விளங்குகின்றது. எனவே கட்டளை யிடுகின்றான் எக் காலத்தையும் இங்குக் கொண்டுவராதீர்களென்று. இதுமட்டுமன்று; வெம்மையைத் தணிக்கச் சந்திரனைக் கொணர்க வென்றான். சந்திரனை ஏவலாளர்கள் கொண்டு வந்த அளவிலே சூரியனை ஏன் கொண்டு வந்தீர் எனவும் சினந்து கொள்கின்றான். இவ்வாறு ஒன்றையொன்றாக உணருமளவு மெய்யுணர்வு மற்றனாகக் காட்சி யளிக்கின்றான்.

வீடணன் கூறிய மெய்யுரையை அறியாதார் யார்? உள்ளம் கொள்ளும்வகை ஆன்ற ஏதுக்களோடு அறிவு கொளுத்த முயன்றான் வீடணன். திருமாலே இராமனாகவும் திருமகளே சீதையாகவும் வந்திருக்கின்றார்களெனவும் விளக்கினான். திருமாலின் ஆற்றலை அவனறிய இரணியன் பட்ட பாட்டையும் எடுத்தியம்பினான். ஆயினும் விளைந்த தென்ன? சானகி துயர் இன்னம் தவிர்ந்ததில்லையோ வெனக் கூறியவண்ணம் துயிலெழுந்த கும்பகருணன் கூறிய அறிவுரை இராவணனை என் செய்தது? கொண்டது விடாத பேதையாகவும் அவனிருந்தா னென்பதற்கில்லை. அவர்களின் அறிவுரையை அவன் செவிகள் ஏற்றதே யில்லை. ஏற்றிருந்தாலன்றோ அவன் அதனைச் சிந்தித்திருப்பான். உடன் பிறந்தார்களின் உறுதி மொழியையும் கேளாத வகையில் அவன் செவி ஊறுபட்டு விட்டது. காதிருந்தும் கேளாத, செவிப் புலனற்றவனாக அடுத்துக் காட்சி யளிக்கின்றான்.

6186

ஏதோ தன் கருத்திற்கு மாறுபடப் பேசுகின்றார்கள் அவர்கள் என்பதை யுணர்கின்றானே யன்றி என்ன சொல்கின்றார்களென்பதை அவன் உணரவில்லை. ஆகையால்தான் அறிவுரை கூறிய அவர்களை நாவினால் சொல்லத் தகாதன சொல்லி யிகழ்கின்றான். உடன் பிறந்தானைக் கொன்றானென்னும் பழி வருமே யென்பது கருதியே உன்னைக் கொல்லாது விடுகின்றேன்; என் முன் நிற்காதே; விரைந்து ஓடு; நின்றால் நின் உயிரை யிழப்பாய் என்று இகழ்ந்து அச்சுறுத்துகின்றான் அறிவுரை கூறிய வீடணனை. இதே போன்றுதான் கும்பகருணனையும் உள்ளம் உளையுமாறு இகழ்கின்றான். இன்றுவரை யான் தரத் தசையையும் நறவையும் பெற்று உண்டாய்; போரென்று இன்று கூறிய அளவில் பொறுமையை மேற்கொள்கின்றாய்; போய் நன்றாக உறங்கு இரவும் பகலும் என்று கும்பகருணன் உள்ளம் நையுமாறு பேசுகின்றான். சீதைபால் தான் கொண்ட ஆசையால் பேசத் தக்கது இது, தகாதது இதுவென அறிந்து பேசும் திற மற்றவனாகக் காட்சியளிக்கின்றான். நாவாற்றலும் அவனை விட்டு நகர்ந்ததெனக் கொள்ளலா மல்லவா!

முன்னரேயே மூக்கறுபட்டாள் சூர்ப்பநகை இராவணன் சார்பில். எனவே அறிவு மட்டுமன்று ஐம்புலனுணர்வும் அற்றவனாக இராவணனைக் கம்பர் காட்டுந் திறம் ஆராய்ந்து மகிழ்தற்குரிய தொன்றாகும். ஆசைமட்டும் ஊசலாட அதனை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் சிறு செயல்களும் செய்யத் தொடங்குகின்றான் இராவணன்.

முதனாட் போரிலேயே இராமனுடைய ஆற்றலைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இராவணனுக்குக் கிடைத்தது. இராமன் விட்ட அம்பொன்றால் மணி மகுடம் கடலில் கொண்டு வீழ்த்தப்படவே இராவணன் நாண முடையவனாய் 'நிறங்கரிந்திட நிலம் விரல் கிளைத்திட நின்றான்.' இராவணன் முடியை மட்டுமன்றிப் படைக் கலங்களையு மிழந்து நின்றானாக அவன் நிலை கண்ட இராமன் 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' வெனக் கூறினான். வீரமும் களத்தே விட்டு வெறுங் கையோடு இலங்கை புகுந்த மன்னவன் தனக்கு நேர்ந்த நிலையைச் சிறிது எண்ணினான். மணிமுடி யிழந்ததையும், மற்றதனையும் பகைவர் அறிந்தால் எள்ளி நகையாடுவரே என்பதற்கு அவன் நாணங் கொண்டானில்லை. சீதை இவற்றை யறியின் எள்ளி நகைப்பாளே என்பதொன்று கருதியே நாண முற்றவனாய் வருந்தினான் எனக் கம்பர் கூறுவர். அந்த அளவு அவன் மனம் அழிந்துபட்டுக் கிடப்பதை அறியலாம்.

ஆசையின் பிடிப் பிலகப்பட்ட மன்னன் சிறு செயலும் செய்யத் தொடங்கினான். கும்பகருணனைப் பலவாறு சினந்து கூறிப் போருக் கனுப்பினான்.

> அற்றதால் முகத்தினில் விழித்த லாரிய
> பெற்றனன் விடை

யெனக் கூறிப் போருக்குப் புறப்பட்டான் கும்ப கருணனும். இவ்வாறு கூறிப் போருக்குப் புறப் பட்ட கும்பகருணன் நிலை என்னவாயிற் றென்ப தையோ அன்றைய போரின் முடிவைப் பற்றியோ அறிந்துகொள்ளும் ஆவலுடையவனாக இல்லை.

மோதரன் என்னும் அரக்கன் ஒருவனுடைய அறி வுரைப்படி மாயாசனகனைப் படைத்துக் கொண்டு சீதையிடம் சென்று தன் குறை யிரந்து நிற்கின்றான். கும்ப கருணன் இறந்துபட்டதையும் அவன் அறிந்தா னில்லை. மாயாசனகனைச் சீதையின் முன் கொண்டு வந்து நிறுத்தித் தனக்குச் சார்பாக அவனையும் பேசச் செய்து தன் குறை முடிக்க அவன் பட்ட பாட்டை யென்னென்று கூறுவது. எவ்வாறேனும் தன் ஆசை நிறை வேண்டுமென்னும் எண்ணமே அவன் உள்ளத்தில் குடி கொண்டிருந்தது.

இஃதொன்றோ அவன் சிறு செயலை விளக்கு வது? இந்திரசித்தன் விட்ட பிரமனருளிய அம்பால் அனைவரும் களத்தில் இறந்துபட்டனர். இதனைக் கேள்வியுற்ற இராமன் போர்க்களம் புகுந்து அழுது அரற்றினன். இந்நிலையைச் சீதை காண்பாளாயின் தனது வீரத்தை யறிந்து தனது விருப்பிற்கிணங்கக் கூடுமென்று நினைத்தான் இராவணன். சீதையை விமான மொன்றில் ஏற்றிக்கொண்டு சென்று அனை வரும் இறந்துகிடந்த போர்க்களத்தைக் காட்டுமாறு அரக்கியர்க்குக் கட்டளையிட்டான். அரக்கியர்களும் அவ்வாறே செய்தார்கள். இறந்தவர்களைக் கண்டு சீதை அழுது புலம்பினள். ஆனால் அவன் எண்ணம் நிறைவேறிற்றா? எத்தகைய செயலைச் செய்தாயினும் சீதையைத் தன் வயப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்தினின்றும் இராவணன் விடுபட்டவனாக இல்லை.

நிகும்பலை யாகத்தையும் நிறைவேற்ற வியலாது போரிடை மடிந்தான் அருமை மைந்தன் இந்திர

சித்தன். தலையையும் உடலையும் தனித்தனியே கண்ட தந்தை தாங்காது ஓவென் றலறினன். பல வகையிற் பன்னிப் பன்னி அழுதான். யார் இறந்ததைப் பற்றியும் கவலைப்படாதிருந்த அவன் கவலைக்கே இருப்பிடமானன். வாழ்வு முடிந்ததென்னும் முடிவுக்கே வந்துவிட்டான். இந்திரசித்தன் முடிவே இதுவானல் தன்முடிவும் நாளைக்கு இதுவே யாகுமன்ருே என நினைத்தான்.

அஞ்சினே னஞ்சினேன்இச் சீதையென் றமிழ்தாற் செய்த
நஞ்சின லிலங்கை வேந்தன் நாளையித் தகையனன்ருே

என முதல் முதலாகச் சீதையை நஞ்சாக எண்ணத் தொடங்கினன். அப்பொழுதும் அனைவரும் இறந்துபட்டதற்கு இவள் காரணமாக விருந்தாளே யெனச் சீதை மீது சினம் வந்ததே யன்றித் தான் செய்த பிழை அவன் நெஞ்சில் எழுந்ததில்லை. இறந்துபட்டவர்களை நினைக்க நினைக்க எல்லையற்று அவன் சினம் பெருகிற்று. வாளால் சீதையை வெட்டி வீழ்த்துகின்றேன் என்றும் விரைந்து ஓடினன் சீதையிருக்குமிடத்திற்கு இலங்கை மன்னன். சீதையின் மீது சினம் எழுந்ததே யன்றித் தான் செய்தது தீமையென்ற வெண்ணம் அவன் உள்ளத்தில் இந்த நேரத்திலும் எழுந்ததில்லை.

இறுதிப் புறப்பாடாகத் தேர் மீதேறிப் போர்க்களம் புகுந்தான் எஞ்சிய படைகளைக் கொண்டு. இரண்டில் ஒன்றை இன்று காண்கின்றேன் என்று வஞ்சினமும் கூறினன். இராமன் இறந்துபடப் பொருதல், இன்றெனில் தான் இறந்துபடுதல் என்ற

இரண்டில் ஒன்றை இன்று செய்துமுடித்து விடுகின்றேன் என வெழுந்தான். அனைத்தும் அழிந்துபட இரண்டில் ஒன்று என்னும் நிலைக்கு வந்துவிட்டான் இலங்கை வேந்தன்.

மன்றலங்குழற் சனகிதன் மலர்க்கையால் வயிறு
கொன்றலந்தலைக் கொடுநெடுந் துயரிடை குளித்தல்
அன்றி தென்றிடின் மயன்மக ளத்தொழி லுறுதல்
என்றிரண்டினொன் றாக்குவன் தலைப்படி னென்றான்

என்று வஞ்சினங் கூறிப் புறப்பட்டானெனக் கம்பர் கூறுவர். அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக அழிய உயிரொன்றுமே எஞ்சி நின்றது. இரண்டில் ஒன்று என்று கூறிப்பட்ட இலங்கை வேந்தன் இறுதியில், பொன்றாது நிற்கும் ஒன்றாகிய இராமன் அம்பைத் தன் உரத்திற் கண்டான்.

இங்ஙனம் இலங்கை வேந்தனின் அவல நிலையை அவனுடைய பண்புக் கேடுகளின் மூலமாக வளர்த்து உச்ச நிலையையடையச் செய்கின்றார் ஆசிரியர். ஏனையவர்க்கும் இம் முறையையே ஆசிரியர் மேற்கொள்கின்றார். அதனை யாராய்ந் துணர்தல் நங்கடனாம்.

5. மாற்றுந் திறம்.

இராம காதையின் முற் பகுதியை மந்தரையும் பிற் பகுதியைச் சூர்ப்ப நகையும் நடத்தித் தருகின்றார் கள். பிற்பகுதி சூழ்ச்சிக்கும் மாயச் செயல்களுக்கும் நிலைக்களனு யிருக்கின்றது. முற்பகுதியும் அவ்வகை யில் குறைந்ததன்று என்பதை மந்தரையும், கைகேயி யும் இருந்து நிறைவு செய்திருக்கின்றார்கள். மந்தரை யும் கைகேயியும் கதையை ஆரணிய காண்டம் வரை நடத்திச் செல்கின்றார்கள். பிறகு சூர்ப்பநகை வந்து கை கொடுத்துக் காப்பியம் இறுதிவரை நிறைவேற விதையிடுகின்றாள். இராம காதைக்கு மூவரும் பெருந் துணையா யிருக்கின்றனர். கைகேயியின் மனத்தை மந்தரை மாற்றிய திறமும் தசரதனைத் தன் வயப் படுத்தக் கைகேயி முயன்ற திறமும் இராவணன் மனத்திற்குச் சூர்ப்பநகை நஞ்சூட்டிய திறமுமே கம்பர் காதைக்குக் காரணமாக விருந்தவை.

ஒருவர் ஒருவரைத் தம் வயப்படுத்தும்பொழுது ஒருவரின் மனவலி யின்மையைத் துணையாகக் கொள்வார் மற்றொருவர். ஒருவரின் உள்ளத் துறுதியைச் சார்பாகக்கொண்டு அவரைத் தம் வயப் படுத்துவாருமுளர். உள்ளத் துறுதியுடைமை, இன்மை ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு அவற்றிற்கேற்றவாறு பேசியாகவேண்டும் தம் வயப்படுத்த விரும்புவோர். மாற்ற நினைப்போர் வினை நலமும் சொல்லாற்றலுமுடையவராதல் வேண்டும். கைகேயியுடன் பலவாண்டுகள் பழகி அவள் உள்ளத்தை யறிந்தவள் மந்தரை. ஆகவேதான் அவள் உள்ளத் துறுதியின்மையைபுணர்ந்து அதற்கேற்றவாறு பேசி மனத்தை மாற்றினுள் கூனி. தசரதனுடைய உள்ளத்தை நன்ருக அறிந்தவள் கைகேயி. தசரதனுடைய உறுதியைச் சார்பாகக் கொண்டு கொண்டதை நிறைவேற்றினுள். ஆனல் அவனுடைய உள்ளத்தைத் தன் வயப்படுத்த அவளால் முடியவில்லை. இராவணனின் உடன் பிறந்தவள் சூர்ப்பநகை யாதலால் அவன் மனவலியின்மைக் கேற்றவாறு பேசித் தன் வஞ்சந் தீர்த்துக் கொண்டாள். பெண் பெண்ணின் மனத்தை மாற்றும்பொழுதும் பெண் ஆடவனின் மனத்தை மாற்றும்பொழுதும் பேசுவோரின் இயல்பில் வழுவது நின்று பேசியிருக்கும் கம்பரின் திறம் பெரிதும் போற்றுதற் குரியதாம்.

பெண்களின் இயல்பு, கைகேயி பரதன் ஆகியோரின் எதிர்காலம், கேகயனின் வருங்கால வாழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் திறமையாகப் பேசிக் கைகேயியின் மனத்தை மாற்றியிருக்கின்ருள் மந்தரை.

கைகேயியின் மாளிகையை வந்தடைந்த மந்தரை கைகேயி உறக்கத்தி லிருக்கக் கண்டாள். நினைத்து வந்த காரியம் நிறைவேருதோ வெனவும் கருதினுள். நினைத்துவந்த காரியத்தைச் சிறிது பொறுத்திருந் தேனும் நிறைவேற்றுவதென முடிவு செய்தாள். அரசியைத் தட்டியெழுப்ப வியலாதல்லவா! உறக்கத் தினின்றெழு மளவும் அவள் பொறுத்திருக்கவும் விரும்பவில்லை. மதிநுட்ப முடையவ ளல்லவா மந்தரை!

உறங்கிக் கிடந்த அவளின் அடிகளை வருடுவது போன்று கைகளால் மெல்லப் பிடித்தாள். கைகேயி மெல்ல உறக்கத்தினின் றெழுந்தாள். நினக்குப் பெருந் துன்பம் வரக் காத்துக்கிடக்கின்றது; அதனை யறியவுமில்லை; அதன் பொருட்டு வருந்தவுமில்லை; அதற்கு மாருகக் கவலையின்றி நன்ருக உறங்குகின் ருயே யெனக்கேட்டாள். நன் மக்களைப் பெற்றவர்கள் துன்பம் தொடலின்றி இன்ப வாழ்வெய்துவார்கள் எனப் பெரியோர்கள் கூறுவார்கள். வேதமேயன்ன இராமனைப் பெற்ற வெனக்கு எங்கிருந்து துன்பங்கள் வருமென விடையிறுத்தாள் கைகேயி.

மாற்ருள் வாழ்கின்ருளென்பதைக் கேட்கப் பொருத உள்ளம் மகளிர்க்குண்டு என்பதை மனத் திற் கொண்ட மந்தரை அதனைச் சார்பாகக்கொண்டு பேசத் தொடங்கினுள்.

கைகேயியை நோக்கி அந்தோ நினக்குரிய நன் மைகள் அனைத்தும் அழிந் தொழிந்தன; நினது செல் வம் கொள்ளை போயிற்று; கோசலை கூர்த்த மதியுடை

மையால் நன்மை செல்வம் ஆகிய வனைத்தும் பெற்று வாழ்ந்தாள்; அஃது நினக்கு இன்மையால் அழிந் தாய் எனக் கூறி வருந்தினுள் மந்தரை. இதனைக் கேட்ட கேகயன் மகள் மன்னவர் மன்னனே அவள் கணவனும்; மைந்தனும் பன்னரும் பெரும் புகழ்ப் பரதனே; இவர்களைவிட அவள் பெற்ற செல்வம் வேறென்ன விருக்கின்றதென்று கேட்டாள். அறியாது பேசுகின்ருய்; உண்மைச் செல்வத்தை அவள் நாளையே பெறப்போகின்ருள்; கோடியவரி சிலை யிராமன் நாளை கோமுடி சூடப் போகின்ருன்; அதுவே அவள் பெறப்போகின்ற பெருஞ் செல்வ மெனக் கூறினுள் கூனி. இதனைக் கேட்டவளவில் உள்ளத்தில் அன்பெனும் வெள்ளம் ஆர்த்தெழ இத னைக் கூறிய கூனிக்கு மணிமாலை யொன்றைப் பரி சாக வீந்தாள் அரசி.

முடிவு எதிர்பாராத வகையில் வடிவு பெறுவதை மந்தரை யுணர்ந்தாள். மேலும் முயன்று பார்க்கலா மென நினைத்தாள்.

மந்தரை பித்துற்ருள் போன்று பேரிசைச்சலிட் டாள்; கண்களை உருட்டிப் பார்த்து அதட்டினுள்; பெருமூச்சு விட்டாள்; புலம்பினுள்; அரசியளித்த மணி மாலையையும் நிலத்திலடித்துச் சிதைத்தாள். நீ வேறு அவள் வேறு யென்னு முணர்வின்றி நீ அவ திப்படுகின்ருய். நீயும் நின் மகனும் கோசலை காலா லிட்ட வேலையைக் கையால் செய்து காலத்தைக் கழி யுங்கள்; நான் கோசலையின் தாதியர்க்கு ஏவல் செய்ய ஒருப்படேன் எனக் கைகேயியின் எதிர் காலத்தைப்பற்றி நினைவூட்டினுள். சீதையும் செம்ம

லும் நிவந்த ஆசனத்திருக்க நின் மகன் வெறு நிலத்திருக்கும் வேதனையைக் காண விரும்பினையே; ஈதென்ன அறிவுடைமை யென்றும் நீ பெற்றதனால் பிறந்தும் பிறந்ததனாலாய பயனைப் பெறாது போனான் பரதன் என்றும் அவனும் இளவலும் ஈண்டிருத்தலை விடக் காட்டிற்குச் சென்று கடுந் தவம் புரிதலே நன்றென்றும் அரசர்கள் வரிசையில் வைத்து எண்ண அந்தோ அவன் பிறந்திலனே யென்றும் பரதனுடைய கல்வியும் இளமையும் கணக்கற்ற ஆற்றலும் கமரிடையுகுத்த அமுதாகுமே யென்றும் கூறிப் பரதனுக்காகப் பரிந்து கண்ணீ ருகுத்தாள் மந்தரை.

இவற்றைக் கேள்வியுற்ற கைகேயி சினந்து அறிவில்லாதவளே! மனுவின் வழிவந்த குலம் எமது குலம் என்பதை மறந்து பேசுகின்றாய். முறைமை யென்பதொன்றுண்டு; அஃது இக்குலத்தவர்க்கு உரிமைப் பொருள்; அம்முறை கெடப் பொறி கலங்கி அறிவுரை கூறுகின்றாயே; நீ என்னுடன் நெடுங்காலம் பழகியவள் என்பதனால் நினது நாக்கைத் துண்டித்திலின்றி விடுத்தேன்; என் கண்ணெதிரே நில்லாதே; போ வெனக் கூறினாள்.

கைகேயி உறங்கிக் கொண்டிருந்த பொழுதே நினைத்தேன்; நாம் நினைத்து வந்த காரியமும் உறங்கிவிடுமோ வென்று; அவ்வாறுதான் ஆகும் போல் தோன்றுகின்றது; எனினும் இறுதியாக இன்னும் ஒருமுறை முயன்று பார்ப்போம் எனத் தன்னுள் எண்ணினாள் மந்தரை. பிறந்த வீட்டைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்ளாத மகளிர் உலகில் இல்லை. அவர்களின் வாழ்விற்கு மகிழ்ந்தும்

தாழ்விற்கு வருந்தியும் மகளிர் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வர். பிறந்தகத்தார் தாழ்ந்து போதலை அவர்கள் விரும்புதலிலர். தம்மாலான உதவியை அவர்கள் என்றும் செய்து வருவார்கள். இதனைப் பயன் படுத்திக் கொள்ளலாமெனக் கருதினாள் மந்தரை.

சினந்து நின்ற கைகேயியின் அடிகளில் விழுந்தாள் மந்தரை. அவளே எழுந்து நின்று• யான் கூறுவதனைச் சிறிது சிந்தித்துப்பார்; உனது தந்தையும், தாயும், உறவினரும் இனிச் சில நாட்களில் வறுமையுற்று உன்னைக்கொண்டு அதனைத் தீர்க்கலாமெனக் கருதி உன்னை வந்தடைவார்களானால் உன்னால் அவர்களுக்கு என்ன உதவி செய்ய வியலும். இருக்கும் செல்வமனைத்தும் நினது மாற்றாள் செல்வமாக வன்றோ அன்று இருக்கும். இதுமட்டுமன்று; போரெனில் நினது கணவன் வந்துதவுவான் என்றஞ்சியே சீதையின் தந்தை நினது தந்தையுடன் போர்புரிய நேர்ந்திலன்; இராமன் முடிசூடிக் கொள்வானானால் அவன் உதவி சனகனுக்கன்றி நின் தந்தைக்கு எவ்வாறு கிடைக்கும்? நினது தந்தைக்குப் பகைவர்கள் நிரம்ப விருக்கின்றார்க ளென்பனை நீயறிவாய். போர் நேருந்தோறும் நமது படை சென்றுதவி வருகின்றது. ஆகவேதான் நினது தந்தையால் வெற்றி பெற்று வாழ முடிகின்றது. இராமன் முடிசூடுவதானால் நமது படை எங்ஙனம் சென்று உதவி புரியும். நீ யழிவதோடு மட்டுமன்றி நீ பிறந்த குலத்தையு மழிக்க முற்படுகின்றாயே; ஈதென்ன அறிவு என்று கூறிமுடித்துக் கைகேயியின் முகத்தை உற்றுப் பார்த்தாள் மந்தரை.

தனது உள்ளந் திரிந்தது என்பதற்கு அறிகுறியாக அவளையே நோக்கி இவை நிகழாதிருக்கச் செய்ய வேண்டுவதென்ன வென்றும் கேட்டுக் கொண்டாள் கைகேயி.

இவ்வாறு கைகேயியின் மனத்தை மந்தரை மாற்றிய விதத்தைத் திறப்படக் கம்பர் காட்டியிருப்பது அறிந்து மகிழ்தற்குரிய தொன்றும். அடுத்துக் கைகேயியின் செயலைக் காண்போம். மந்தரையால் கைகேயியின் மனத்தை மாற்றவும் முடிந்தது; கொண்டதை நிறைவேற்றவும் முடிந்தது. ஆனல் கைகேயியினல் தான் கொண்டதை நிறைவேற்ற முடிந்ததே தவிரத் தசரதனுடைய மனத்தை மாற்ற முடியவில்லை.

தசரதன் தன்னிடத்துக் கொண்டிருந்த அன்பையும் வாய்மையினின்றும் வழுவாத அவன் மனவுறுதியையும் சார்பாகக்கொண்டு அவனை மாற்ற முயன்றாள் கைகேயி. தன்னிடத்து மிக்க அன்புடையவன் தசரதன் என்பதனைக் கைகேயி நன்றாக அறிந்தவளாதலின் அவன் வரும் நேரமறிந்து முதலில் தன்னை யலங்கோலப் படுத்திக் கொண்டாள். கூந்தலிற் செருகியிருந்த மாலையை எறிந்தாள்; மேகலை, வளை முதலியவற்றைத் துறந்தாள்; நெற்றியில் விளங்கிய திலகத்தையும் தேய்த்தாள். இவ்வாறு தன்னை யலங்கோலப் படுத்திக்கொண்டு தரையிற் கிடந்தாள் தையல். இக் கோலத்தைக் கண்ணுற்ற தசரதன் கலக்கமுற்றான். உனக்கு இடரிழைத் தோரியாவர்? அவரை யின்னே வாளுள வழி வகுக்கின்றேன் என்று கூறினன் மன்னர் மன்னனும். எண்ணம் நிறை

வேறக் கால்கோள் விழா இனிது நிறைவேறியது கண்டு மகிழ்ந்தாள் மடந்தையும். பண்டு தருவதாகக் கூறிய வரங்கள் இரண்டையும் இன்று தரவேண்டு மெனக் கேட்டு நின்றாள். வரங்கொள்ள இத்துணை வருத்த மெய்துவது ஏன்; இராமன் மீது ஆணை யிட்டுச் சொல்கின்றேன்; வேண்டிய வரங்களைக் கேள் என்றான் அரசனும்.

என் சேய் நாடாளவும் சீதை கொண்கன் காடா ளவும் வேண்டும். இவ்விரு வரங்களையும் இன்றெனக்கு ஈந்தருள் என்று வேண்டி நின்றாள். இதனைக் கேட்ட மன்னன் விட முண்டவன் போன்று தன்னை மறந் தான்; செய்வதறியாது ஊதுலைக் குருகின் உயிர்த் தான். பாவியைப் பற்றி யெற்றுவதே செய்யத் தக்க தென்றெழுந்தான். பெண்ணென உற்ற பெரும் பழிக்கு நாணி அது செய்யாது நிறுத்திக் கைகேயி நோக்கி நீ மயங்கிப் பேசுகின்றாயா? அன்றி யாரே னும் உனக்கு இதனைக் கற்பிக்கக் கற்றுப் பேசுகின் றாயா என்று தசரதன் கேட்டான். நான் மயங்கவும் இல்லை; என்னை யாரும் மயக்கவு மில்லை; பண்டே தருவதாகச் சொன்ன வரங்களை இன்று தா; இன் றேல் உயிர் விடுவேன் என்றாள் அவளும்.

இச்சொல் வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போன்று அரசனை வெதுப்பிற்று. நாரிய ரில்லை இந் ஞாலத்தில் என்று சொல்லுமாறு அனைவரையும் கொன்று குவிக்கின்றேன் என்றெழுந்தான். இவளை ஒறுப்பினும் பொறுப்பினும் வருவது குற்றமேயன்றி வேறின்மையால் இவளை யிரந்தேனும் பார்க்கலா மென்று கருதினன் தசரதன்.

மண்ணை மட்டும் கொள்; மற்றைய தொன்றை மறந்து விடு வென விழுந்து வேண்டினன் மன்னவன்.

இதனைக் கேள்வியுற்ற கைகேயி சினமுற்றாள். வாய்மையைத் தூய துணையாகக் கொண்டு கொண்டதை நிறைவேற்ற நினைத்தாள் கைகேயி. அரசே! உன்னைப் போன்றவர்களே தந்த வரத்தைத் தவிர்க வென்றால் வாய்மைக்கு எடுத்துக்காட்டாக வையகத்தில் வாழ்வார் யாருளர்? தந்த வரத்தைத் தவிர்க வென்றல் உரத்தின் செயலேயன்றி யறச் செயலன்று என்பதை யான் எடுத்துக் கூற வேண்டுவதின்று. நின் முன்னோரில் ஒருவன் வாய்மையை வளர்ப்பான் வேண்டித் தன் உடம்பையும் அரிந்து ஈந்தான்; அவன் மரபில் வந்த நீ வாய்மையை மறக்கலாமோ வென அறிவுரை கூறுவாள் போன்று உரை தந்தாள் கைகேயி.

இதனைக் கேள்வியுற்ற தசரதன் இவளோடு இனிப் பேசிப் பயனின்று என்று கருதி, ஈந்தேன்; ஈந்தேன் இவ்வரம்; மாய்ந்தே நான் போய் வானுலகாள்வேன் என்று கூறித் தன்னை மறந்து நிலத்தின் மேல் விழுந்தான்.

கைகேயியால் தசரதனுடைய மனத்தை மாற்ற முடியவில்லை. ஆனால் வலிந்து தான் நினைத்ததை நிறைவேற்றிக் கொண்டாள். தசரதன் இறந்துபடுவான் என்பதனை அவள் எதிர்பார்த்தாளில்லை. எனினும் தசரதனைப் பலி கொண்டது நினைத்ததை நிறைவேற்றும் உறுதி. தசரதன் மனத்தை மாற்றிக் கொண்டதையும் நிறைவேற்றவே எண்ணினள்

கைகேயி. எனினும் ஒன்றில் வெற்றியும் ஒன்றில் தோல்வியுமே அவளுக்குக் கிட்டின.

அரக்கர் குலத்தை யடியோடு அழிக்க வந்த பாவை அரக்கர் கோமானின் நெஞ்சிற்கு நஞ்சூட்டும் விதத்தை யடுத்துக் காண்போம். இராகவனைக் கண்ட அளவிலேயே சூர்ப்பநகை அவன் மீது ஆசை கொண்டாள். மஞ்ஞை யெனவும் அன்னமெனவும் கூறுமாறு அழகிய உருவம் பெற்று வஞ்சி இராமனை வந்தடைந்தாள். தான் வந்த நோக்கத்தை இராமனுக் கெடுத்துரைத்தாள். மண்ணாட்சியை மட்டுமன்றி விண்ணாட்சியையும் நினக்கு உரிமையாக்குவேன் என ஆசையும் காட்டினாள் அரக்கி. தன் நோக்கம் நிறைவேறாதிருப்பதற்குக் காரணமா யிருப்பவள் அருகிலிருக்கும் சீதையே யெனக் கருதினாள். அவளை எங்ஙனமேனும் இராமனை விட்டு அப்புறப்படுத்தி விடுவதெனநினைத்து அவளை யெடுக்கப் புகுந்தாள். அவளைக் கண்ட இலக்குவன் விரைந்து வந்து அவளுடைய அங்கங்களைப் பங்கப் படுத்தினன்.

ஆசை நிறைவேறாதது மன்றி அங்கமும் பங்க முற்றதே யெனக் கதறி அழுதாள். கரனைக் கொண்டு வந்து உமது உரனை யொழிக்கின்றேன் என்று கூறிப் புறப்பட்டாள் நங்கை. கரனிடத்தில் தான் பட்ட பாட்டைக் கூற அவன் படைகளுடன் வந்து இராமனுடன் கடும் போர் புரிந்தான். ஆனால் கடிகை மூன்றிற்குள் இராமனுடைய வில்லாற்றற்கு நில்லாதவனாய் அவன் மடிந்தான். இதனைக் கண்ட சூர்ப்பநகை சொல்லொணாத் துன்பமடைந்தாள். எனினும் இராமன் மீது கொண்ட ஆசை அவள் உள்ளத்தைவிட்

டகல வில்லை. கரன் முதலியோர் இறந்தமை அவள் உள்ளத்தில் நிலைத்து நின்று வருத்தியது. எங்ஙன மேனும் சீதையை அப்புறப் படுத்துவதெனை முடிவு செய்தாள். யாராலும் வெலப்படாய் எனும் வரம் பெற்ற இராவணனைக் கொண்டே இது செய்வதெனை முடிவு செய்துகொண்டு இலங்கை நோக்கி விரைந்து சென்றாள் சூர்ப்பநகை.

அரக்கர்களும் மற்றவர்களும் அஞ்ச விரைந்து சென்று இராவணனுடைய அடிகளில் விழுந்து கதறினாள். அவள் நிலையைக் கண்ட அரக்கர் கோமான் இது யாவர் செயல் என்று வினவினான். சூர்ப்பநகை காட்டின்கண் வாழும் மானுடர் வாள் கொண்டு இக் கொடுமை செய்தார்கள் என்று கூறினாள். விளக்க மாகக் கூறுகவென வேண்டினன் இராவணன். அழ கிலும் ஆண்மையிலும் சிறந்தவராகக் காட்சியளித் தார்கள் அவர்கள். வற்கலையை யுடை யாரேனும் விற் கலையில் சிறந்தவர்களாகவே விளங்குகின்றார்கள். அரக்கர் குலத்தை அடியோடறுக்கவே அவர்கள் கானகம் வந்திருக்கின்றார்களாம். தசரதனுடைய புதல்வர்கள் அவர்கள். இராமன், இலக்குவன் என் பன அவர்களுடைய பெயர்களாம் எனச் சூர்ப்பநகை கூறவே, நினக்கு இக் கொடுமை செய்ய அவர்க்கு நீ இழைத்த தென்ன வென்று வினவினான்.

யாரும் எதிர்பாராத வகையில் விடை தயாரித் தாள் நங்கை. சீதையை அப்புறப் படுத்தும் தனது எண்ணத்தை நிறைவேற்ற நினைத்தாள். யாது கூறி னால் தமையன் தனது எண்ணத்திற்கு உறு துணை யாவான் என நினைந்தாள். பலவாண்டுகள் இலங்கை

மன்னனுடன் பழகி அவனுடைய உள்ளத்தை நன்கறிந்தவளல்லவா சூர்ப்பநகை. அவனுடைய மன வலியின்மையைப் பயன்படுத்திக் கொண்டு சீதையை இராமனைவிட்டு நீக்கலாமெனக் கருதினாள். ஆகவேதான் அவள் இராவணனுக்கு விடை கூறும் பொழுது நின் பொருட்டு உருவில் திருமகளை யொத்த அப் பெண்ணை யெடுக்கப் புகுந்தேன்; அப்பொழுது தான் இது செய்யப்பட்டேன் என மாற்றிக் கூறினாள். இராவணனும் யார் அவள் எனக் கேட்டான். சூர்ப்ப நகை அவன் உள்ளத்தில் ஆசையெழும் வகையில் சீதையினுடைய அழகைச் சிறப்பித்துக் கூறினாள். இங்கே நிற்பவள் தானா சீதையென்று இராவணன் உரு வெளியிற் கண்டு கேட்கு மளவிற்கு அவனுடைய நெஞ்சிற்கு நஞ்சூட்டி முடித்தாள். இராவணனே அவளை நோக்கிச் செய்யத் தக்கது யாதென வினவ, விரைந்து சென்று அவளை வெளவுதி யென வழியும் கூறி யனுப்பினாள் சூர்ப்பநகை.

இராவணனுடைய உள்ளத்தை மாற்றிச் சீதையை யெடுத்து வருவதற்கு அவனை உற்ற துணை யாக்கிக் கொண்டாள். சீதையை இராவணன் எடுத்து வந்த பிறகு சூர்ப்பநகை இராம னிருக்கு மிடத்தை யடைந்து மீண்டும் தன் நோக்கத்தை யெடுத்துரைத்த தாக வரலாறு யாதுமில்லை. தன்னை அவன் விரும்பான் என்னும் முடிவிற்குச் சூர்ப்பநகை வந்து விட்டாள் என்றே தோன்றுகின்றது. இராவணனுடைய உள்ளத்தை மாற்றித் தனக்கேற்ற துணையாக்கிக் கொண்டாள். ஆனால் கொண்டதை நிறைவேற்ற அவளால் இயலாமல் போயிற்று. இராவணனுடைய

உள்ளத்தை மாற்றிய அளவில் வெற்றி பெற்ற அவள் நினைத்ததை நிறைவேற்ருத நிலையில் பெருந் தோல்வி பெற்றவளாகவே காணக் கிடக்கின்ருள்.

கைகேயியின் உள்ளத்தை மாற்றி நினைத்ததையும் நிறைவேற்றினுள் மந்தரை. மனத்தை மாற்ற வியலாது நினைத்ததை மட்டும் நிறைவேற்றிக் கொண்டாள் கைகேயி. இலங்கை வேந்தனின் உள்ளத்தை மட்டும் மாற்றி நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளாதொழிந்தாள் சூர்ப்பநகை.

6. மாறு வேடம்

காப்பியச் சுவை சிறக்கும் பொருட்டுத் துறைகளாக வழங்கி வந்தன பலவற்றைக் காப்பியத்தின் அங்கங்களாக அமைத்துக் கொண்டார்கள் பண்டைத் தமிழ்ப் புலவர்கள். நாடு நகரச் சிறப்புகள், நானில வருணனைகள், கதிரவன் தோற்றம் மறைவு முதலியவாகப் பிற் காலத்தார் காப்பிய விலக்கணங்கள் எனக் கூறுவனவும் காப்பியச் சுவையை மிகுவிக்கும் பொருட்டே சேர்க்கப்பட்டன எனலாம். மாறு வேடம், தூது போதல், கண்டோர் கூறுதல் போன்றன காப்பியத்துள் இடம் பெற்றுக் காப்பியச் சுவை சிறப்புற்றோங்கச் செய்கின்றன. இவை பற்றிய பகுதிகளே காப்பியத்துள் சுவையுடைய பகுதிகளாகவும் காட்சி யளிக்கின்றன. அவற்றைச் சிறப்புறப் பாடுதல் தங்கடனெனவும் புலவர்கள் கருதினார்கள். காப்பியங்களில் கதைத் தலைவர்கள் மாறு வேடம் பூண்டு

பேசியிருக்கும் பகுதியைக் கவித் திறம் பொருந்து மாறு இரு பொருள்படப் பாடாத புலவர் யார்? எனவே புலவர்களுடைய உள்ளங்களைப் பெரிதும் கொள்ளை கொண்டது இஃது எனலாம்.

காப்பியங்கள் தோன்றத் தொடங்கிய காலத்தி ருந்து மாறு வேடம் என்னும் பகுதியைக் காப்பியங் களிலமைத்து வந்திருக்கின்றார்கள் புலவர்கள். தொல் குடிப் பிறந்த குமரி யொருத்தியைக் கொற்றவையா கப் புனைந்து பரவுக்கடன் கொடுத்தார்கள் வேடர்கள் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. காய சண்டிகை யின் வடிவில் மணிமேகலை அம்பலத்துள் மறைந்து வாழ்ந்தாளென மணிமேகலை கூறுகின்றது. மாறு வேடம் பூண்டு சீவகன் சுரமஞ்சரியை மணந்த வர லாற்றைச் சிறப்பாகப் பாடியிருக்கின்றார் திருத்தக்க தேவரும். இவர்களைப் பின்பற்றியே கம்பரும் இலங்கை வேந்தன் மாறு வேடம் பூண்டு சீதையை வௌவிய வரலாற்றை யழகாகப் பாடி முடித்திருக் கின்றார். அறத்தினைக் கன்னனிடத்திருந்து பெறும் பொருட்டுக் கண்ணனும் மெய்த்தவப் படிவ வேதிய னாகி வெயிலவன் புதல்வனை யடைந்தானென வில்லி யாரும் தம் நூலுள் விளக்கி யிருக்கின்றார். வள்ளி யம்மையை மணந்து கொள்ளும் பொருட்டு முருகன் மாதவ வேடந் தாங்கி வந்ததைக் கச்சியப்பர் அழகா கக் காட்டியிருக்கின்றார். எனவே மாறுவேடம் காப் பியங்களுள் பயின்று வந்திருக்கும் ஒரு சிறந்த பகுதி யென்பது புலனாகின்றது.

சிறப்பாகத் தேவரும், கம்பரும், கச்சியப்பரும் இம் மாறுவேடப் பகுதியை மிகத் திறமையாகத் தம்

நூலுள் காட்டியிருக்கின்றார்கள். இம் மூவரும் முதுமை வேடத்தையே பொருத்தமான மாறு வேடமாகக் கொண்டார்கள். சுரமஞ்சரியைச் சீவகன் மணக்க முயன்றபொழுதும் சீதையிருக்கு மிடத்தை இராவணன் அடைந்தபொழுதும் வள்ளியம்மையை முருகன் மணம்புரிய முயன்ற பொழுதும் அவர்கள் மேற்கொண்ட வடிவம் முதுமை வடிவமேயாகும். பிறர் ஐயுறுதிருக்கும் பொருட்டும் தம்மிடத்து மகளிர்க்கு இரக்கமுண்டாகும் பொருட்டும் அம் மூவரும் முதுமை வேடத்தைத் தஞ்சம் புகுந்தார்கள். கம்பரைத் தவிர ஏனைய இருவரும், முதுமை வேடம் பூண்டு சீவகனும் முருகனும் சுரமஞ்சரி யிடத்திலும் வள்ளி யிடத்திலும் பேசும் உரையாடல்களை இரு பொருள்பட அழகாகப் பாடியிருக்கின்றார்கள். சீதையிடத்தில் இரு பொருள் பட இராவணன் பேசினனெனக் கூறக் கம்பர் விரும்பவில்லை யாதலால் வேறு வகையில் அவ்வுரை யாடலைச் சிறப்பாகக் காட்டியிருக்கின்றார்.

ஆடவர்கள் தானிருக்கு மிடத்தின் அருகே சென்றதாக அறிந்தாலும் அவர்கள் பெயரைத் தான் கேட்கும் வாய்ப்பைப் பெற்றாலும் உயிர் விடுவேன் எனக் கூறிக் கன்னிகை நோன்பு பூண்டிருந்தாள் சுரமஞ்சரி. இதனை யறிந்த சீவகன் எவ்வாறேனும் அவளை மணப்பேன் எனத் தோழனிடம் சூளுரை சொல்லி முதுமை வேடம் பூண்டு அவள் இருக்கு மிடத்தை யடைந்தான். சுரமஞ்சரியின் தோழியர் முதியவனைக் கண்ட அளவில் மிகவும் இரக்கமுற்று மாளிகையின் உள்ளே யழைத்துச் சென்று சுரமஞ்சரிக்குக் காட்டினர். பாம்புரி போன்ற மேனியையும், வில்லைப்போன்ற

யாக்கையையும், திரையுடைய உடம்பினையும் நொசிந்த நோக்கினையுங் கண்ட அளவில் சுரமஞ்சரியும் உள்ளம் இரங்கினள். அனைவரும் சேர்ந்து முதியவனுக்கு இனிய வுணவு முதலியன படைத்து வழிவந்த வருத்தத்தை மாற்றினர். முதியவனும் சிறிது தேறினன் போன்று காட்சி யளித்தான். பெண்கள் அனைவரும் அவனைச் சூழ்ந்து நின்று பல வினவினர்கள். அவையனைத்திற்கும் அவன் இரு பொருள்படப் பேசினனென்னத் திருத்தக்க தேவர் நயம் படப் பேசியிருக்கின்றார். அப் பாடல்களுள் ஒன்றைக் கேளுங்கள்.

வல்லதெனை யென்ன மறை வல்லன் மடவாய் யான்
எல்லை யெவன் என்னப் பொரு ளெய்தி முடிகாறும்
சொல்லுமினி நீவிர் கற்ற காலமெனத் தேன் சோர்
சில்லென் கிளிக் கிளவி யது சிந்தையில னென்றான்

இச் செய்யுளில் மறைவல்லன், பொருளெய்தி முடிகாறும், அது சிந்தையிலன் ஆகியவை இரு பொருள் தந்து இன்பத்தை யூட்டுவதைக் காணுங்கள்.

இவரைப் போன்றே கச்சியப்பரும் முதியோன் வேடம் பூண்டு முருகன் வள்ளியம்மையின் தந்தையை யடைந்து பேசிய பேச்சினையும் இரு பொருள் படப் பேசிக் காட்டியிருக்கின்றார். முருகன் தினைப் புனத்தே யிருந்த தையலிடத்துத் தன் குறையிரந்து நின்றான். அவ்வமயம் வள்ளி யம்மையின் தந்தை தொண்டகம், துடி ஆகியவை முழங்க வேடர் குழாத்தொடும் தினைப்புனம் நோக்கி வந்து கொண்டிருந்தான். தந்தையின் வருகையை யறிந்த வள்ளி நடுக்கமுற்றுத் தந்தையின் வருகையைத் தெரிவித்து இனி நில்லாதீர்; ஓடும் என்று கூறினள்; முன்னின்ற

வேடனை நோக்கி. ஓடும் என்று அவள் கூறியதைக் கேட்ட வளவில் தன்னிடத்து அன்புடையாளே இவள் என்பதை உய்த்துணர்ந்து வேடன் மகிழ்ந்தான். சைவநெறி வளர்க்கும் நற்றவ வேடங் கொண்டு, வந்துகொண்டிருந்த வேடர் தலைவன் முன் சென்று நின்றான். வேடர் தலைவன் முதியோனைக் கண்டு மிக விரங்கி வேண்டியவற்றைக் கேளுங்கள்; தருகின்றேன் என்று கூற, முதியோனும் தனக்கு வேண்டியவற்றைக் கேட்டான். இவ்விடத்தில் இருவர் உரையாடலும் இரு பொருள் பட அமைந்து கிடப்பது அறிந்து மகிழ்தற்குரிய தொன்றாம். இத்தகைய இடங்களை இரு பொருள் பட வமைத்துக் காட்டுதலே கவித் திறன் என்று புலவர்கள் கருதினார்கள். அதற்கு ஏற்றது முதுமை வேடமே யென்றுங் கண்டார்கள். முதுமைத் தோற்றத்திற் கேற்ப ஒரு பொருளும் மன நிலைக் கேற்ப மற்றொரு பொருளும் அமைய இத்தகைய இடங்களைச் சிறப்பாகப் பாடியிருக்கின்றார்கள் ஆசிரியர்கள்.

முதியோன் வேடம் பூண்ட முருகனும் வள்ளியிடத்தில் கேளாதன கேட்டான். அதனைக் கேட்ட வள்ளி சினந்து கூறும் பகுதி மிகவும் சுவையுடையதாய் அமைந்திருக்கின்றது.

மேலா கியதவத்தோர் வேடந்தனைப் பூண்டிங்கு
எலா தனவே யியம்பினீர் யார்விழிக்கும்
பாலாகித் தோன்றிப் பருகினா ராவிகொள்ளும்
ஆலால நீர்மைத்தோ வைய ரியற்கையதே

நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமிலீர்
எத்துக்கு மூத்தீ ரிழிகுலத்தோன் றனைவெஃகிப்

பித்துக் கொண்டார்போற் பிதற்றுவீ ரிவ் வேடர்
கொத்துக் கெலாமோர் கொடும்பழியைச் செய்தீரே:

என்பனவும் பிறவும் ஆசிரியரால் இலக்கியச் சுவை நலம் பொருந்தப் பாடப் பட்டிருப்பதை யறியலாம்.

பெண்களைக் கவர விரும்பிய அனைவரும் மாறு வேடங் கோடலையே நெறியாகக் கொண்டிருந்தனர். அவ்வாறு பாடுதலே ஆசிரியர்கள் அனைவர்க்கும் ஒத்த முறையாகவும் இருந்திருக்கின்றது. இம் முறையை யொட்டியே கம்பரும் இராவணன் மாறு வேடம் பூண்டு சீதையிருக்கு மிடத்தை யடைந்ததாகக் காட்டியிருக்கின்றார். மாறு வேடத்தில் சீவகன் சுரமஞ்சரியிடத்தில் பேசிய பொழுதும் முருகன் வள்ளியின் தந்தையிடத்தில் பேசிய பொழுதும் இருபொருள் படப் பேசியதாகவே ஆசிரியர்கள் காட்டியிருக்கின்றார்கள். கம்பர் அவ்வாறு செய்யுள் செய்தாரிலர். இரு பொருள் பட இராவணன் சீதையிடத்திற் பேசினனெனக் கூறக் கம்பர் மனம் ஒருப்படவில்லை. திருமகளின் அவதாரமே சீதை யாதலின் அவ்வாறு பாட அவர் நா வெழவில்லை. ஏனைய ஆசிரியர்கள் முதுமை வேட மெய்தினோர் மகளிர் இருக்குமிடத்தை யடைந்தார்க ளென்று கூறும் பகுதியையும் உடையாடற் பகுதியையும் மிகவும் உள்ளக் களிப்போடு பாடியிருக்கின்றார்கள். அதற்குமாறான நிலையுடையவரானார் கம்பர் இராவணன் மாறு வேடத்தைப் பற்றிப் பாடிய பொழுது. மாறு வேடம் பூண்ட இராவணன் சீதை தந்த ஆசனம் ஒன்றில் இருந்தானெனக் கூறிய வாசிரியர் தொடர்ந்து சராசரமும் அவன் இருப்பைக் கண்டு அஞ்சி நடுங்கின வென்று கூறு

கின்றார். ஆகவேதான் அவரால் இரு பொருள் படப் பாட வியலாது போயிற்று. எனினும் ஆசிரியர் வேறு வகையில் இப் பகுதியைச் சிறப்புறப் பாடி யிருக்கின்றார்.

இலங்கை வேந்தன் மேற்கொண்ட வேடத்தை ஏனைய வாசிரியர்களினும் கம்பர் அழகாக வருணித் திருக்கும் திறம் அறிந்து மகிழ்தற்குரிய தொன்றும். இராவணன் ஊண் நெடு நாளாகப் பெறாதவன் போன்று உலர்ந்த மேனியனானன்; சேணிலத்தி னின்றும் வந்தான் போன்று களைப்பை யுடையவனானன்; வீணையி னிசைபட வேதமும் பாடுவானானன்.

பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலம்
தீப்பொதிந் தாமென மிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறுங் காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினான்

ஆமையின் இருக்கையும் வளைந்த யாக்கையும் நூலணி மார்பு முடையவனாய்த் தூமனத் தருந்ததி யிருந்த சூழல்வாய் எய்தினன் எனக் கம்பர் இலங்கை வேந்தன் கொண்ட வேடத்தை வருணித்திருக்கின்றார்.

வந்த துறவியை விரும்பி யெதிர் கொண்டழைத்து ஆதனம் ஒன்று தந்து அமரச் செய்தாள் சீதை. தீயவனின் சிந்தனையைத் தெரிந்து கொண்டவை போன்று மரங்களும், மலைகளும், விலங்குகளும் வேறுள வனைத்தும் நடுக்க முற்றன. இருந்த துறவி நின்ற சீதையை நோக்கி இத் தவச்சாலைக்கு உரியவர் யார்? நீவிர் யார் எனக் கேட்டான். அதற்குச் சீதை,

தசரதன் தொல்குலத் தலைவன் தம்பியோடு
உயர்குலத் தன்னைசொல் உச்சி யேந்திஞன்
அயர்வில திவ்வழி யுறையு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமையீர்

என விடை யிறுத்தாள். தசரதனுடைய மக்கள் நால்வருள் முன் பிறந்தவன் தன் தம்பியோடு தாயுரையைத் தலைமேற் கொண்டு இவ்விடத்தில் வாழ்கின்ருன் ; அவனுடைய பெயரைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள் என்று கூறிய சீதையின் விடையுள் தமிழ் நாட்டாருடைய மன நிலையைப் படம் பிடித்துக் கம்பர் காட்டியிருக்கும் திறம் போற்றுதற் குரியதாம். தமிழ் நாட்டுப் பெண்டிர் தங் கணவருடையபெயரைக் கூறுதலிலர். பெயரைக் கூறுவது கணவரை அவமதிப்பதாகும் என்பது அவர்கள் கருத்து. இதனை மனதுட் கொண்டே கம்பரும் சீதை இராமனுடைய பெயரைக் கூறினளாகக் கூருது "பெயரினைத் தெரிகுதிர் பெருமையீர்" என்று கூறியதாக உரைத்தார்.

பெய்ரைக் கூறவேண்டிய இன்றியமையாமை தமிழ் நாட்டுப் பெண்கட்கு ஏற்பட்டாலும் நேராகத் தங் கணவர் பெயரைக் கூருது வேறுவகையில் கேட்போர் உய்த்துணருமாறு கூறுவர். இதனையும் கம்பர் சீதையின் விடையுள் அமைத்துக் காட்டியிருக்கின்ருர். துறவி சீதையை நோக்கி நீ யாருடைய பெண்; ஏன் காட்டில் காலத்தைக் கழிக்கின்ருய் என்று கேட்டான். அதற்கு விடையாகச் சீதை

சனகன் மாமகள் பெயர்சனகி காகுத்தன்
மனைவி யான்

என்று கூறினாள். யான் இராமனுடைய மனைவி யென்று நேராகக் கூறாது குல முன்னோன் ஒருவன் பெயரைக் கூறி அவன் குலத்து வந்தவன் மனைவி என உய்த்துணருமாறு கூறினாள். இங்ஙனம் வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் தமிழ் நாட்டாரின் மன நிலையை மறவாது கம்பர் புலப்படுத்தி யிருக்குந் திறம் பெரிதும் போற்றுதற் குரியதாம்.

சீதை மாயத் துறவியை நோக்கிப் பெரியீர்! முதுமையையும் பெரிதும் பொருட்படுத்தலின்றி நெடு வழி நடந்து வந்திருக்கின்றீர்; நீர் எங்கிருந்து வருகின்றீர் என்று கேட்டாள். இதனைக் கேட்ட மாயத் துறவி சிறிது சிந்தித்தான்; இராவணனுடைய பெருமைகளனைத்தையும் சொல்லி அவளுடைய உள்ளக் கிடக்கையை யறிந்துகொள்ள இதனை வாய்ப்பாக வெடுத்துக் கொள்ளலாமென்று கருதினான். ஆகவே இராவணனுடைய பெருமைகளனைத்தையும் ஒன்று விடாமற் கூறி முடிக்கத் தொடங்கினான்.

"இராவணனுடைய பெருமையை யான் என்னென்று கூறுவேன்! அவன் பிறந்தது நான்மறைகள் தந்த நான்முகன் மரபிலேயாகும். மரபிற்கேற்ற செய்கையுமுடையவனாய் நாள்தோறும் நான்மறைகளை யோதி யுணர்கின்றான். ஈசன் இருந்த கைலை மலையையும் நிலைகுலையச் செய்த அவனாற்றலை எவ்வாறு அளவிட்டுரைக்க வியலும்? திசை யானைகளனைத்தும் வசைபெற அவற்றோடு பொருது மருப்புக்களனைத்தையும் பொடி செய்தான் அவன். கற்பகம் முதலிய நிதியங்கள் அவனுடையனவே யாகும். அவன் வாயிலில் நிற்போரும், அவன் ஏவிய தொழிலை புரியக்

காத்து நிற்போரும் தேவர்களே யாவர். அவன் இருந்து வாழ்வதற்குப் பெருந்தவஞ் செய்த இலங்கை மாநகரில் இல்லாத பொருள் யாதொன்றும் இல்லை யால். சிவ பெருமானை நோக்கிப் பெருந்தவஞ் செய்து முக்கோடி வாணாளும் பிறவும் பெற்ற பெருமையுடை யோன் அவன். இவை மட்டுமல்ல; மதனும் திகைக் கும் அழகமைந்த மேனியான். அழகமைந்த நங்கை யர் அநேகர் அருகிலிருப்பினும் தன் மனக்கினிய மங்கை யொருத்தியை நாடிக்கொண் டிருக்கின்றான். அவன் பெயர் இராவணன் என்பதாம். அவனுடைய இலங்கை மாநகரில் பல நாட்கள் தங்கி விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்து போந்தேன்'' என இராவணன் பெருமையைக் கூறிமுடித்து மங்கையின் மனக் குறிப் பறிய முக நோக்கினான் மாயத் துறவி.

மனத்திற் கினிய மங்கை யொருத்தியை நாடிக் கொண்டிருக்கின்றான் என்பதைக் கேட்ட அளவில் யார் அம்மங்கை யெனச் சீதை கேட்பாள் என்று எதிர்பார்த்தான் மாயத் துறவி. யார் எனக் கேட்கும் வினாவே அவளின் உள்ளத்து இசைவை வெளிப் படுத்துவ தாகவு மிருக்கு மென்றெண்ணினான். ஆனால் சீதை அதனைச் செவியுற்றாளாகத் தோன்றவில்லை: அம்மங்கையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது துற வியை நோக்கி ஐயனே! துறவியாகிய நீர் பாதக வரக்கர்தம் பதியின் வைகியதற்கு ஏது வென்ன வென்று வினவினாள்.

மாயத் துறவி வேறுபாடற்ற உள்ளமுடையான் போன்று பேசத் தொடங்கினான். "அம்மையே! எம் போன்ற துறவிகட்கு எப்பொருள் மீதும் விருப்போ

வெறுப்போ எழுதலில்லை. தேவர்கள் மீது விருப்பும் அரக்கர்கள் மீது வெறுப்பும் நாங்கள் கொள்ளுதல் இல்லை. ஆகையால் அரக்கர்களுக்காக நாங்கள் அஞ்சுவதில்லை. தேவர்களுக்காக நாங்கள் மகிழ்வது மில்லை. உண்மையைக் கூறுவதானால் தேவர்களை விட அரக்கர்கள் தீயவர்க ளல்லரென்றே கூற வேண்டும் என்று மாயத் துறவி மறு மொழி பகர்ந்தான்.

ஐயனால் அரக்கர் குலம் அடியோ டழியப் போகின்றது விரைவில் என்று சீதை கூறிய அளவில் மாயத் துறவி மனிதர்களால் அரக்கர்களைக் கொல்ல வியலுமோ வென்று கேட்டான். விராதனும் கரனும் இராமன் அம்பால் வீழ்ந்த வரலாற்றை நீ யறியாயோ வென்று வினவினாள் சீதை. மாயத் துறவி சினமுற்றான். இராமனின் வில்லாற்றலையும் அரக்கர் குலம் அழிந்து படப் போவதையும் மேலும் மேலும் எடுத்துக் கூறினாள் சீதை. துறவியின் சினத்தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கிற்று. என்னை யாரென நினைத்தாய் எனக் கூறித் துறவி தனது உருவந் துறந்து முன்னைய உருவில் நின்று சீதையை அதட்டிப் பேசினான். காணாத, ஆனால் கேட்டிருந்த உருவத்தைக் கண்ணெதிரே கண்டு கலங்கினாள் சீதை. அரக்கனும் அவளை நிலத்தொடு எடுத்து நெடுந்தேரில் வைத்துக்கொண்டு தென்றிசை நோக்கி விரைந்தான்.

மாறு வேடம் பூண்ட இராவணன் இங்ஙனம் விரகு படப் பேசித் தன் வினை முடிக்கக் கருதினுனெனக் கம்பர் விளக்கிக் காட்டியிருக்கின்ருர்.

எனவே மாறுவேடம் காப்பியங்களில் ஆசிரியர்களால் சுவைபடப் பேசப்பட்டிருக்கும் பகுதிகளுள் ஒன்று என்பதும் கம்பர் அதனைக் கையாண்ட முறை இதுவென்பதும் இதுகாறுங் கூறியவற்ருல் அறியப்படும்.

---

7. தூது போதல்

பிரித்தல், பொருத்தல் ஆகியவை குறித்து வேற்று வேந்தரிடம் செல்வோரைத் தூதர் என்பர். அரசர் குலத்திற் பிறந்த ஒருவர் செய்தியை மற்றெருவரிடம் சென்று சொல்வோரையும் பிற்காலத்தார் தூதர் என்பர். இவ்விரு வகைத் தூதுக்களும் காப்பியங்களில் பயின்று வந்திருக்கின்றன. சிறப்பாக இராம காதையுள் இவ்விரு வகைத் தூதுக்களும் விரவி வந்திருத்தலை யறியலாம். இராமன் வில்லிறுத்த செய்தியைச் சீதைக் குரைத்த தோழியரையும் மாமன் வீடு போயிருந்த பரதனுக்கு ஓலை கொண்டு போய்க் கொடுத்தோரையும் இந்திரசித்தனல் அநுமன் கட்டுண்ட செய்தியை இராவணனிடம் சென்று உரைத்தோரையும் தூதர் என்றே சொல்லாலேயே கம்பர் குறிப்பர். சீதையிடம் தூது சென்ற அநுமனைத் தூதர்களுள் தலைசிறந்தவனுகக் கம்பர் காட்டி

யிருக்கின்றார். இராவணனிடம் இராமன் அனுப்பிய அங்கதன் தூது ஒன்றே பகைவரிடத்துச் சென்று தூதுரைத்தலுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. எனினும் சீதையிடம் தூது சென்ற அநுமன் தூதினையே கம்பர் தம் கதையுள் சிறப்பாகப் பேசி யிருக்கின்றார். இராமன் கூறி யனுப்பிய செய்தி சீதைக்கே யன்றி இராவணனுக்கு அல்லவாதலால் சீதையிடமே தூதாகச் சென்றான் அநுமன் என்று கொள்ளவேண்டும். தூதாகச் சென்ற அநுமன் கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு இராவணனையும் சென்று கண்டான். தானே வகுத்துரைப்போன், கூறியது கூறுவோன் எனத் தூதுவர்களை இருவகையினர் என்பர். இவ் விருவகைத் தூதுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கினன் அநுமன் எனக் கம்பர் காட்டியிருக்கும் திறம் அறிந்து மகிழ்தற் குரியதாம்.

தன்னரசன் மாட்டு அன்புடையனாதல், தன்னரசனுக்கு நன்மைபுரியும் அறிவுடையனாதல் ஆராய்ந்து சொல்லும் சொல்வல்லனாதல் ஆகிய மூன்றும் தூதுவர்க்கு இன்றியமையாத மூன்றென்பர் திருவள்ளுவர்.

> அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
> இன்றி யமையாத மூன்று.

பல காரியங்களை வேற்றரசர்களிடத்துச் சொல்லும்பொழுது தொகுத்துச் சொல்லுதல் வேண்டுமென்றும் இன்னாத காரியங்களைச் சொல்லும் பொழுது இனியவாகச் சொல்லுதல் வேண்டுமென்றும் இம் முறையில் தூது சொல்லி அரசர்க்கு நன்மை பயக்கச் செய்பவனே தூதனாவன் என்றும் வள்ளுவரே மீண்டும்,

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது

என்பர். இவ் விலக்கணங்கள் அனைத்தும் பொருந்த அநுமனைத் தூதுவனாகக் கம்பர் காட்டி யிருக்கின்றார்.

தென்றிசையை நோக்கிப் புறப்பட்ட அநுமனைத் தனியே யழைத்தான் இராமன். சீதையிடத்துச் சொல்லவேண்டிய செய்திகளாக—அடையாளத்திற் குரிய செய்திகளாகப் பலவற்றை இராமன் சொல்லி யனுப்பினான். அதே போன்று சீதையும் இராமனுக்குப் பல சொல்லி யனுப்பினாள். ஒருவர் ஒருவரைப்பற்றி நினைத்த பொழுது தோன்றிய நினைவுகள்—அவர்களது வாழ்க்கைப் பாதையின் நினைவுக் கற்கள் அனைத்தும் இவ்விரு விடங்களிலும் விளக்கமாக ஆசிரியரால் சொல்லப் பட்டிருக்கின்றன.

சீதைக்குச் செய்தி சொல்லி யனுப்ப வேண்டுமென இராமன் நினைத்த அளவிலே சீதையை முதல் முதலில் தான் கண்டது முதற்கொண்டு நடைபெற்ற நிகழ்ச்சிகள்—நினைவிற்குரிய நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக அவன் நினைவில் ஓடிவந்தன. அநுமனை நோக்கிக் கூறுகின்றான் பின்வருமாறு.

நானும் முனிவனும் மிதிலையை யடைந்தபொழுது அவளை யான் கன்னி மாடத்திடை முதல் முதலாகக் கண்டேன்; அக் காட்சியை அவளுக்கு நினைவுப் படுத்துவாயாக;

வில்லிறுத்தான் வீரன் ஒருவன் எனத் தோழியர் வில்லொடிந்த செய்தியை அவளிடம் சென்று கூறினர்; அதனைக் கேட்ட அவள் என் நெஞ்சுள்

நிற்பவனே யன்றி வில்லிறுத்தவன் வேறொருவனு யின் உயிர் விடுவேன் என்று கூறினுள்; அதனையும் அவளிடம் அடையாளமாகக் கூறுவாயாக;

மணக்கோலம் பூண்டு, என்னை மணக்கச் சனக னுடைய அவைக் களம் அவள் புகுந்த காட்சி அரிய காட்சியாக அன்றிருந்தது அனைவர்க்கும். அக்காட்சி யையும் அவளுக்கு நினைவுப் படுத்துவாயாக;

உன்னல் வெம்மை மிக்க காடுகளில் நடந்து வர வியலாது; நீ இங்கேயே இரு; யான் மிக விரைவில் வந்து விடுகின்றேன் என்று கூறினேன்; அதனை அவள் காதில் போட்டுக் கொள்ளாதவளாய் உள்ளே விரைந்து சென்று மரவுரி தரித்துவந்து என்னருகில் நின்றுள்; இந் நிலையைக் கண்ட யான் எல்லையற்ற இடர் தருவா யெனக்கு என்றேன்; இதனைக் கேட்ட அளவில் அவள் சிறிது பிணக்கத்துடன் நான் தங்க ளுடன் இருந்தால் தங்களுக்குத் துன்பமே வரும்; நான் இல்லாதிருந்தால் காட்டில் வருவது உங்களுக்கு இன்பமே யாகும் என்று கூறினுள்; இதனையும் அவ ளிடத்தில் அடையாள மொழியாகக் கூறுவாயாக;

யானும் இளவலும் அவளும் அயோத்தியின் நெடுந் தெருக்களைக் கடந்து நகரின் வாயிலை யடைந் தோம். அரண்மனையைத் தவிர வேறு இடத்தை அவள் அறியாதவ ளாதலால் செல்ல வேண்டிய யிடத் தின் அருகில் வந்துவிட்டதாகக் கருதிக் கானகம் யாண்டுளது என்று வினவினுள். அவளின் நிலை குறித்து யான் வேறொன்றும் சொல்ல வறியேனுய் உள்ளத் துவகை கொண்டேன். அறியாது அவள்

கேட்ட இவ் வினவையும் அவளுக்கு நினைவுப் படுத்து வாயாக.

இவை யனைத்தையும் கேட்டுக்கொண்டு தென் றிசை நோக்கிப் புறப்பட்டான் அநுமன். இலங் கையை யடைந்து எல்லா விடங்களிலும் சீதையைத் தேடினன். யாண்டும் அவளைக் காணப் பெருமையால் உள்ளம் வருந்திச் சோலை யொன்றினைச் சார்ந்தான். இச் சோலையுள் சீதையைக் காணப் பெறுவேனே யாயின் எனது உள்ளக்கவலை நீங்கும்; இல்லையாயின் இவ் விலங்கையை யழித்து யானும் அழிந்து படுவேன் எனத் தன்னுள் முடிவு செய்துகொண்டு அச் சோலை யுள் தேடத் தொடங்கினன். அரக்கியர்கள் காவலாகச் சூழ்ந்து நிற்கக் கண்ணீர்க் கடலினிடை யிருந்த் தையலை அநுமன் கண்ணுற்றான். தையலின் கற்பும் காவலும் ஏசுண்டதில்லை யென்பதை அவளின் நிலை கண்டு தெளிந்தான். அந்நிலையில் இராவணனும் அங்கு வந்து சீதையிடத்தில் தன் குறையிரந்து நின்றான். இராவணன் மொழிந்ததனையும் அதற்குச் சீதை தந்த விடையையும் மரத்திலிருந்து அநுமன் கேட்டுக் கொண்டிருந்தான். தன்னை வெறுத்த சீதையை அச்சுறுத்தி இராவணன் அவ்விடத்தை விட்டகன்ற பின்னர் அநுமன் சீதையைக் காணும் பொருட்டுத் தனது மந்திர வலிமையால் அரக்கியரனைவரையும் உறக்கத்துள் ஆழ்த்தினன்.

இருத்தலினும் இறத்தலே சிறந்ததெனக் கருதிச் சீதை போதுலாம் மாதவிப் பொதும்பர் ஒன்றினை யெய்தினள். எய்திய சீதையின் கருத்தை யுணர்ந்த அநுமன் இனித் தாழ்த்தல் தவறென வுணர்ந்து

சீதையின் முன் தோன்றினன் இராமனுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டு. அவனைக் கண்ட அளவில் முதலில் ஐயுற்ற சீதை பின்னர் அவனுரையால் தெளிவெய்தினள். இராமனுடைய நிலையைக் கேட்டறிந்து துன்பத்திற்கோர் கொள்கலமானள். அவளின் நிலையாலும் அடையாளங்களாலும் அநுமன் அவளே சீதையெனத் துணிந்தான். இராமன் கூறிய அடையாள மொழிகளைக் கூற நினைத்தான். ஐயத்திற்கு இடமில்லாத நிலையில் அவள் இருந்தமையால் இராமன் கூறிய அனைத்தையும் சீதையிடத்திற் கூறவேண்டிய தேவையில்லையென வுணர்ந்தான். பலவற்றைச் சொல்ல வேண்டிய விடத்துத் தொகுத்துச் சொல்ல வேண்டுமென்பது தூதர்களுக்குரிய இலக்கணமல்லவா! இராமன் கூறியவற்றுள் சிறந்த இரண்டினை மட்டும் சீதைக்கு அடையாள மொழிகளாகக் கூறினன் அநுமன்.

> எத்தனைக்குள வாண்டுகள் ஈண்டவை
> பத்தும் நாலும் பகலலவோ

என்றும் விரைவில் வருவேன்; வருந்தாதே யென்றும் இராமன் கூறிய அளவில் சீரை சுற்றித் திருமகள் புறப்பட்ட செய்தியும் இராமன் முதலிய மூவரும் நகரை விட்டுவந்த பொழுது வாயி லகலாமுன் யாண்டையது கானமெனச் சீதை வினவிய செய்தியுமேயாகும். இவை யிரண்டுமே சிறந்தனவென இராமன் கூறியவற்றுள் தேர்ந்தெடுத்துச் சொல்லப்பட்டன. தொகுத்துச் சொல்லவேண்டிய விடத்துத் தொகுத்துக் கூறுதலும் விளக்கிச் சொல்லவேண்டியவிடத்து விளக்கிச் சொல்லுதலும் தூதர்களுக் கழகல்லவா!

அநுமன் கூற வேண்டியவற்றுள் சிறந்தன இரண்டினை மட்டும் சுருங்கச் சொல்லல் என்ற முறையில் எடுத்துக் கூறினன். தனது மந்திர வலிமையால் அரக்கியர்களைத் தூக்கத்துட் படுத்திச் சீதையைக் கண்டு பேசும் அநுமன் இராமன் கூறிய அனைத்தையும் கூறப் போதிய நேரமும் பெற்றிரான். அதற்கும் ஏற்கவே ஏற்றன விரண்டினை மட்டும் எடுத்துக் கூறினன் அநுமன்.

சீதையும் இராமனுக்குப் பல சொல்லி யனுப்பினள். அவளுடைய மன நிலையையும் உள்ளத் துறுதியையும் அவை காட்டுவனவாய் விளங்குகின்றன.

இன்னும் ஒரு திங்களே உயிர் வாழ்வேன்; பின்னை ஆவி பிடிக்கின்றிலேன்; இராமன் மீது ஆணையிட்டே இதனைச் சொல்கின்றேன்; இந்த எனது உறுதியை இராமனுக்குத் தெரிவிப்பாயாக என்று சீதை தொடங்கினள்.

எனக்குக் காவல் புரிவதனையே சிறந்த பணியெனக் கருதிய இளையவற்குக் காத்திருந்தவனுடைய கடமையே யாகும் மீட்டலும் என்பதனைக் கூறுவாயாக;

இன்னும் ஈண்டு ஒரு திங்களே வாழ்வேன்; அதற்குள் ஐயன் வரவில்லை யானல் கங்கை யாற்றங்கரை அடியேற்குச் செய்யவேண்டிய கடமைகளை ஐயனைச் செய்யச் சொல்வாயாக;

சிறந்த எனது மாமியார்கள் மூவர்க்கும் இலங்கையில் இறந்துபடும் நேரத்தில் சீதை தங்களைத் தொழுதாள் என்று கூறுவாயாக;

இங்கே நான் இறந்து பட்டாலும் மீண்டும் பிறந்து வந்து தங்களுக்கு மனைவியாக ஆகவேண்டு மென்ற வரத்தை யான் கேட்டதாக இராமனைக் கேட்பாயாக;

எனது தாய், தந்தை, உறவினர் ஆகியோர்க்கு எனது வணக்கத்தைத் தெரிவிப்பாயாக; இராமனைத் தொடர்ந்து காத்துப் போய்க் கோசலை நாட்டிற்கு அரசனுக்குக வென யான் வேண்டிக் கொண்டதாகச் சுக்கிரீவனிடத்தில் சொல்லுக;

என்னுடைய மென் கிளிக்கு யாருடைய பெயரை யிடுவேன் என்று கேட்டேன்; எனது அன்னையின் பெயராகிய கைகேயியின் பெயரையே யிடுகவென இராமன் உரைத்தான். அதனையும் அவற்கு அடையாள மொழியாகக் கூறுவாயாக;

என்ற இந்தச் செய்திகளை அநுமனிடம் சீதை சொல்லி யனுப்பினள். இவற்றைக் கேட்டுக்கொண்ட அநுமன் இராவணனையுங் கண்டு பின்னர்த் தன்னூர் நோக்கினன்.

சென்ற தூதுவர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து சீதையைக் காண வியலாத தங்கள் வருத்தத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அநுமனைத் தவிர அனைவரும் வந்து விட்டமையால் அநுமன் வரவினை அனைவரும் எதிர்நோக்கி யிருந்தார்கள். எங்ஙனமேனும் சீதையைக் கண்டே வருவான் அநுமன் எனச் சுக்கிரீவன் ஆறுதல் கூறச் சிறிது தேறி யிருந்தான் இராமன்.

இராம னிருக்கு மிடத்தை விரைந்து வந்தடைந்தான் அநுமன். தான் கண்டவற்றையும் கேட்டவற்

றையும் முதலிற் சுருக்கமாகச் சொல்ல வெண்ணி னன். எந்த அளவு சுருக்கிக் கூறினாலும் தன் உள்ளத்திற் கொண்ட கருத்தின் சுருக்கமாக அது அமையுமா வென்பதில் ஐயமுடையவனானன். ஆகவே சொல்லினும் செயலே சிறந்ததெனக் கருதிச் செயலால் தனது கருத்தை விளக்கத் தொடங்கினன்.

இராமனது திருமுன்பை யடைந்த அநுமன் அவனுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினனில்லை. சீதையிருந்த தென்றிசை நோக்கியவனாய்க் கரங்களைக் குவித்து வணங்கி யெழுந்தான். இச் செயலைக் கண்ட இராமன் இவன் சீதையைக் கண்டு வந்திருக்கின்றான் என்றும் அவளின் கற்பும் காவலும் நன்று என்றும் உணர்ந்து கொண்டான். பின்னர் அநுமன் தான் சீதையைக் கண்டு வந்த வரலாற்றை உரைக்கத் தொடங்கினன்.

ஐயனே! இலங்கைமா நகரில் கற்பினுக் கணியை என் கண்களாற் கண்டேன்; ஆகையால் அவளைப் பற்றி நீ கொண்டிருந்த ஐயத்தையும் அவளின் பிரிவால் நீ பெற்ற துன்பத்தையும் நீக்குவாயாக. நினது மனைவி யென்னுந் தகுதிக்கும் நின்னைப் பெற்ற மன்னவனது மருமகள் என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னனின் மகள் என்னும் தன்மைக்கும் ஏற்பவே அவள் குணங்களாற் சிறந்து விளங்குகின்றாள்; வேறு கூறுவானேன்; நான் வணங்குவதற்குரிய தெய்வமாகவே அவள் விளங்குகின்றாள். தான் பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் பெருமையுண்டாகும் வகையில் கலங்காத மனத் திண்மையுடையவளாய் அவள் காட்சி யளிக்கின்றாள்; அரக்கர்

குல மழிய்வும் எங்குலம் நிலைக்கவும் அருள் புரியும் செல்வியாகவும் அவள் விளங்குகின்றாள்.

வீர! உன்னாற் கூறப்பட்ட சீதையை யான் இலங்கையில் கண்டு வந்தேனில்லை; அசோக வனத்தில் இற்பிறப்பும், பொறையும், கற்பும் கைப்பிடித்துக்கொண்டு களிநடம் புரிந்து கொண்டிருந்தன; அதனையே யான் கண்டு வந்தேன். காலையும் மாலையும் அறியப்படாத சோலைகள் நிறைந்த அசோக வனத்தின் ஒருபுடை நினது தம்பி தொடுத்த சாலையின் கீழ், தவம் செய்த தவமாந்தையல் இருக்கின்றாள் என்று அநுமன் கூறினான்.

இவ்வாறு சீதையின் நிலையைத் தெளிவாகக் கூறிய பிறகு சீதை கூறிய செய்திகளனைத்தையும் இராமனிடத்தில் கூற வேண்டுவதின்று என்று அநுமன் கருதினான். சீதையை அநுமன் கண்டு வந்ததில் இராமன் ஐயங்கொண்டிருந்தா லன்றோ சீதை கூறிய வனைத்தையுங் கூறி இராமனை ஐயத்தினின்றும் அநுமன் நீக்கவேண்டும்! ஆகவே சுருங்கச் சொல்லுதல் என்னும் முறையில் இன்றியமையாத வொன்றை மட்டுங் கூறுகின்றான். உடனடியாகச் செய்யவேண்டிய செயல்கள் நிரம்ப விருத்தலால் சீதை கூறியவற்றைக் கூறிப் பொழுதுபோக்க வேண்டாமெனவும் அநுமன் நினைத்திருக்கக் கூடும். ஆகவே விரைந்து தெரிவிக்க வேண்டிய வொன்றினைக் கூறுகின்றான்.

திங்களொன் றிருப்பேன் இன்னுந் திருவுளந் தீர்ந்த பின்னை
மங்குவென் உயிரோ டென்றுன் குரைகழல் தலைக் கண் வைத்தாள்.

என்று அநுமன் கூறிய வளவில் இராமன் சுக்கிரீவன் முதலியோர் ஒருங்கிருந்து மேல் செய்ய வேண்டுவனவற்றை யாராயத் தொடங்கினார்கள்.

இராமன் கூறியவற்றைச் சீதைக்குக் கூற நேர்ந்த விடத்தும் சீதை கூறியவற்றை இராமனுக்குக் கூறிய அமையத்தும் கூறவேண்டியவற்றை யாராய்ந்து கூறுதல், சுருங்கச் சொல்லுதல் ஆகிய தூதுவர்க்குரிய பண்புகள் அமையப் பெற்றவனாக அநுமனைக் கம்பர் காட்டியிருக்குந் திறம் அறிந்து மகிழ்தற் குரியதாம். தூதுவர்கள் கூறியது கூறுவோர், தானே வகுத்துக் கூறுவோர் என இருவகையராவர் என முன்னே கண்டோம். இராமன் கூறியவற்றைச் சீதையிடத்துக் கூறியும் சீதை கூறியவற்றை இராமனிடத்துக் கூறியும் கூறியது கூறுந் தூதுவர் இனத்தனாய் அநுமன் விளங்கியதை இதுகாறுங் கூறியவற்றால் அறியலாம்.

தானே வகுத்துக் கூறுவோனாய் அநுமன் விளங்கிய திறத்தையும் அடுத்துக் காண்போம்.

சீதையைக் கண்டு பேசிச் சூளாமணி பெற்ற அநுமன் இராவணனையும் எவ்வாறேனும் கண்டு செல்வதே நலமெனக் கருதினான். இவ் வசோக வனத்தை அடியோடு அழிக்கத் தொடங்கினால் இதனை யறிந்து இராவணன் ஒருவர் பின் ஒருவராகத் தனது சேனைத் தலைவர்களைப் படையுடன் அனுப்புவான்; அவர்களனைவரையும் கொன்று குவித்தால் இறுதியாக இராவணனே புறப்பட்டு வருவான் என்று அநுமன் தன்னுள் ளெண்ணி அசோக வனம் பொடிபட அழிக்கத் தொடங்கினான்.

இச் செயலைக் கேள்வியுற்ற இலங்கை மன்னன் சம்புமாலியைத் தக்க படையுடன் அனுப்பினன். சம்புமாலி அநுமனுடன் பொருது இறந்துபடவே பஞ்சசேனுபதிகள், அட்சகுமரன் ஆகியோரும் பெரும் படையுடன் வந்து பொருது இறுதியில் விண்ணுலகம் புகுந்தனர். இதனை யறிந்த இலங்கை மன்னன் கலங்கினன். அருகில் இருந்த அவன் மகன் இந்திரசித்தன் தான் போய்க் குரங்கினைக் கொண்டு வருவதாகக் கூறிப் புறப்பட்டான் பெரும் படையுடன். அநுமனும் இந்திரசித்தனும் நெடுநேரம் போர் புரிந்தனர். இந்திரசித்தன் அநுமன்மீது பிரமன் ஈந்த அம்பு ஒன்றை யேவினன். அவ்வம்பு நாக வடிவில் சென்று அநுமனுடைய கைகளையும் கால்களையும் அசைக்க முடியாதவாறு கட்டிற்று. அரக்கர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். அநுமன் இதனையே துணையாகக் கொண்டு சென்று இலங்கை மன்னனைக்காண வெண்ணினன். இந்திரசித்தன் பிணிப்போடு அநுமனை இராவணன் முன் கொண்டுபோய் நிறுத்தினன்.

நின்ற அநுமனைக் கண்களினின்றும் நெருப்புப் புறப்பட நோக்கி, நீ யார்; இங்கு ஏன் வந்தாய்; திருமால், சிவன், இந்திரன், பிரமன், ஆதிசேடன் ஆகியவர்களில் நீ யார்? போர் செய்து இறந்துபட இங்கு வந்தனையோ வெனவும் இயமன், முருகன், அகத்தியன், திசைக் காவலர் ஆகியவருள் நீ யார் எனவும் முனிவர்கள் யாகத்தினின்றுந் தோற்றுவித் தனுப்பிய பூதமோ; பிரமனுல் இலங்கை யழிபடும் பொருட்டு ஏவப்பட்ட தேவனோ வெனவும் வினவினன்.

இதனைச் செவியுற்ற அநுமன் நீ கூறியவருள் யான் ஒருவருமல்லன்; இராமன் அனுப்பிய தூதுவனாய்ச் சீதையிடம் வந்தேன் என்று கூறினான்.

தானேவகுத்துக்கூறும் தூதுவன் என்னும் முறையில் சுக்கிரீவன் அனுப்பிய தூதுவனாய் அறிவுரை சில கூறலாமென்று அநுமன் நினைத்தான். எல்லோர்க்கும் உரியதாய சில அறங்களைக் கூறினால் இராவணன் உள்ளம் செம்மை பெறச் சீதையை விடினும் விடுவான் எனக் கருதி அறிவுரை கூறத் தொடங்கினான். தூதுவர்கள் வேற்றரசர் மாட்டு இன்னாதவற்றைக் கூறும்பொழுது இனியவாகப் பேசவேண்டுமென்னுங் கருத்தில் வள்ளுவர்

> தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
> நன்றி பயப்பதாந் தூது.

என்பர். அம்முறையிலே இனிய சொற்களால் இராவணன் உள்ளத்தைக் கனிவிக்க வேண்டுமெனக் கருதினான் அநுமன்.

நினது வாணாளை வீணாளாக்கினாய்; அறம் இது மறம் இதுவென வறியாது வாழ்ந்தாய்; ஆகையால் உனக்கு இறுதிக் காலம் உறுதியாக வந்துகொண்டிருக்கின்றது; எனினும் நான் கூறு மிதனைக் கேட்பாயானால் உயிர் பிழைப்பாய்;

ஐம்புலன்களையும் வென்று நீ செய்த தவத்தின் அளவு என்ன? அவை யனைத்தும் இத் தூயவளுக்கு நீ துயர் சூழ்ந்ததால் அழிந்து பட்டனவே;

இன்று பல பொருள்கள் அழிந்தன; நாளை அழியப் பல பொருள்கள் காத்திருக்கின்றன; எனவே

எப்பொருளும் உலகில் நிலைத்து நிற்றல் இல்லை; இவ்வுண்மையை நீ யறியாது விண்ணவரை வேதனைக்குட் படுத்தினாய்; ஆகவேதான் பெருமையை யிழந்து நிற்கின்றாய்;

அறத்தை மறத்தால் வெல்ல வியலாதென்பதனை யறியாது நிற்கின்றாய்; நீ மாதவத்தால் பெற்றிருந்த தூய்மையைத் தூயவள் பாற் கொண்ட தீமையாற் போக்கிக் கொண்டாய்; பெண்கள்பாற் கொண்ட காமத்தால் இறந்துபட்டவர்கள் எண்ணத் தொலையாதவர்களன்றோ;

சிறியோர் அன்பும் அருளும் உடையவராய் வாழ்தலை யறியாது, பொருளும் காமமுமே பொருளெனக் கருதிப் பிறர்க்குப் பொல்லாங்கு சூழ்வர்; மனம் சென்ற வழியே சென்று பிறர் மனைவியை விரும்பி வாழும் வீரரும் வீரர் எனப்படுவரோ;

இவ்வுலகை யாண்ட வரசர்களுள் நின்னைப் போன்று நீதியறியுந் திறமுடையவர் யாவர் இருந்தனர்; ஆகவே நீ அறத்தின் எல்லையைக் கடத்தல் கூடாது; நீயும், நினது உறவினரும், நின் செல்வமும் நீடூழி வாழவேண்டும்; அதன் பொருட்டு நீ சீதையை விடவேண்டும்; இவையே சுக்கிரீவன் நினக்குக் கூறி யனுப்பிய செய்திகளாம்;

என்றின் னோரன்ன அறிவுரைகளை அநுமன் கூறினன். இதனைச் செவியுற்ற இராவணன் எனக்கு இந்த அறிவுரைகளைக் கூறியது குன்றில் வாழுங் குரங்குகொல் எனக் கூறி நகைத்தான்.

அநுமனைப் பிடித்துக் கொல்லுமாறும் அரக்கர்களுக்கு ஆணையிட்டான். அருகில் இருந்த வீடணன் தூதர்களைக் கொல்லுதல் தூயதன்று என இராவணனுக்கு அறிவுரை கூறினன்.

எனவே தானே வகுத்துக் கூறுவோன் தூதன் என்னும் முறையில் அநுமன் சுக்கிரீவனின் தூதனாகி அவன் அறிவுரை கூறியது போன்றே இராவணனுக்கு அறிவுரை தந்த திறம் பெரிதும் போற்றுதற்குரியதாம். இவ்விரு வகைத் தூதுவர்க்குரிய இலக்கணங்களும் ஒருங்கமையப் பெற்றிருந்தமையாலன்றோ கம்பர் அநுமனைத் தூதுவர்களுள் சிறந்தவனாகக் காட்டியிருக்கின்றார்?

8. அறம் வளர்க்குந் திறம்

கம்பர் பல நிலைப்பட்ட அறங்களையும் தம் நூலில் போற்றி வளர்த்திருக்கின்றார். பொதுவாகிய அறங்கள் சிலவற்றைத் தவிர ஏனையவை சூழ்நிலைக் கேற்றவாறு வளர்ச்சி பெறும் இயல்பின. இடங்கட் கேற்றவாறும் காலத்திற் கேற்றவாறும் அவை திரிதலும் அழிதலு முடையன. எல்லா விடங்கட்கும் எல்லாக் காலங்கட்கும் திரிபு பெறுதலின்றி ஏற்புடைத்தாய் நிற்பன சில அறங்களே. அவை மன நிலையை யடிப்படையாகக் கொண்டெழுந்தன வாதலின் அனைவர்க்கும் அவை யேற்புடைத் தாயின. இவ் வுண்மையையும் யுளங் கொண்டே கம்பர் அறங்களைப் போற்றி வளர்த்திருக்கின்றா ரென்பதை அவர் நூலால் அறியலாம்.

கம்பர் போற்றிய நெறிகள் பல. தாயுரை போற்றல், தந்தை சொற் பேணல், முன்னோனைப் போற்

றல், உடன் பிறந்தார் ஆக்கல் ஆகியவை சிறப்பாகக் கம்பரால் போற்றப்பட் டிருக்கின்றன. அடைந்தோரை யாதரித்தல், தீயன செய்வோர் உடன் பிறந்தோராயினும் அவரை விட்டு நீங்குதல் ஆகிய இரு வறங்களும் ஏனைய வறங்களினுஞ் சிறந்தன வென ஆசிரியரால் விளக்கப்பட் டிருக்கின்றன.

எந்தையே யேவநீரே யுரைசெய யியைவ துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தவ.ருளரோவாழி

எனக் கதைத் தலைவனாகிய இராமன் கைகேயிக்குக் கூறி விடை பெற்ற தன்மை தாயுரை போற்றலுக்குத் தக்க வெடுத்துக்காட்டாம். இராமன் கானகம் புக விருந்த தன்மையைக் கேட்ட கோசலை 'கன்று பிரிந்துழிக் கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள்'. இதனைக் கண்ட இராமன் தன் மன வுறுதியைக் கோசலைக்கு எடுத்துக் கூறினான்.

விண்ணு மண்ணு மவ்வேலையு மற்றும்வே
றெண்ணும் பூத மெலாமழிந் தேகினும்
அண்ண லேவல் மறுக்க வடியனேற்கு
ஒண்ணு மோவிதற் குள்ளழி யேலென்றான்

என்று இராமன் மன வுறுதியைக் கம்பர் காட்டுவர். இப்பகுதி தந்தை சொல் பேணலுக்குத் தக்க எடுத்துக் காட்டாம். அயோத்திக்கு வந்து ஆட்சியை யேற்றுக் கொள்க வெனப் பரதன் இராமனை வேண்டிய பொழுதும் இராமன் தாயுரை போற்றலும் தந்தை சொற் பேணலும் தம் குலத்திற்குரிய அறங்கள் என்னுங் கருத்தில்

தாய்வ ரங்கொளத் தந்தை யேவலான்
மேய நங்குலத் தரும மேவினேன்

என்று கூறியமையும் ஈண்டு நினைவு கூர்தற்குரிய தொன்றும்.

உடன் பிறந்த முன்னேனைப் போற்றல் என்ற பண்பினையும் பரதன் மூலமாகக் கம்பர் காட்டியிருக்கின்றார். 'அறந்தனை நீத்தனை; அருளைக் கொன்றனை' யென்னும் சொல்லோடு இராமன் அடியில் வீழ்ந்த பரதன் அயோத்திக்கு வந்து ஆட்சியை யேற்றுக் கொள்ள வேண்டினன். இராமன் தாய், தந்தை ஆகியோர் உரையைக் காப்பாற்ற வேண்டிய தன் கடமையை யெடுத்துக் கூறியும் பரதன் செவி சாய்த்தானில்லை. அருகிலிருந்த வசிட்டன் அறிவுரை கூறி இராமன் நாடு திரும்பும் வரை நாடாள்வது நின் கடனே யெனப் பரதனை வற்புறுத்தியும் அதனாலும் பயன் விளையவில்லை. இவற்றைக் கண்ட தேவர்கள் தந்தை சொல்லைக் காத்தல் இராமன் கடமை யென்றும் பதினான்கு ஆண்டுகள் அரசு புரிதல் பரதன் கடமை யென்றும் அனைவருங் கேட்க விண்ணில் நின்று விளம்பினர்.

> வானவ ருரைத்தலும் மறுக்கற் பாலதன்
> றியானுனை யிரந்தனன்

என இராமன் மீண்டும் பரதனைக் கேட்டுக் கொள்ள ஒருவாறு இசைந்த பரதன்

> ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
> நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங்
> கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
> சாமிது சரதநின் னாணை சாற்றினேன்

எனத் தன் முடிவையும் கூறி "எம்மையுந் தருவன இரண்டையும்" பெற்றுத் திரும்பினன். அயோத்தி

புகாது அருகிலிருந்த நந்தியங் கிராமத்தில் வரதன் வருமளவும் ஆட்சி புரிந்துகொண்டு காத்திருந்தான் பரதன். உடன் பிறந்த முன்னேனைப் போற்றல் என்னும் பண்பிற்கு இப் பகுதியைக் காட்டாகக் கொள்ளலாம்.

இராமன் காடு புகுந்ததிலிருந்து நாடு திரும்பியது வரை பலருக்குத் தன்னேடு உடன் பிறந்தார் உரிமையை நல்கி யிருக்கின்ருன். அனைவரையும் உடன் பிறந்தாராகக் கொள்ளவேண்டு மென்னு முண்மையைத் தனது வாழ்க்கையின் மூலம் காட்டி யிருக்கின்ருன். கங்கைக் கரையிலிருந்து கன்னியா குமரிக்கரை வரையிலுள்ள அனைவரும் உடன் பிறந் தார்களே யென்பதை உய்த்துணரும் வகையில் இராம காதை அமைந்து கிடத்தலை யறியலாம். வேறுபாடு களை நீக்கி உள்ளத் துணர்வு ஒன்றையே கருதிப் பலரை உடன் பிறந்தார்களாகக் கொண்டான் இராமன். வேடர் குலத்தில் பிறந்த குகன், குரக்கினத்தைச் சேர்ந்தவனுகிய சுக்கிரீவன், அரக்கர் குலத்தைச் சேர்ந்தவனுகிய வீடணன் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்க ளாவர்.

> நைவீர லீர்மைந்தீ ரினித்துயரா னுடிறந்து காடுநோக்கி
> மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் ருமன்றே

எனக் கோசலை குகனை நோக்கிக் கூறியது இவ் வகையில் உண்மை யுரையா யமைந்து கிடக்கின்றது.

கங்கையைக் கடந்த இராமன் குகனை நோக்கிச் சித்திரகூடஞ் செல்லு நெறியாது என்று வினவினுன். அதனைக் கேட்ட குகன் தானும் உடன்வர இராம

னது இசைவை வேண்டினன். இராமன் அவனுடைய அன்பைப் பாராட்டித் தனது உடன் பிறந்தாருள் ஒருவனுக அவனை யேற்றுப் போற்றினன். தனது உறவினரை அவனுடைய உறவினராகவும் அவனுடைய உறவினரைத் தனது உறவினராகவும் கொண்டு இராமன் குகனது அன்பைப் பாராட்டினன். அதனைக் கம்பர்

> அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
> என்னுயி ரனையாய்நீ இளவலு னிளையானிந்
> நன்னுத லவள்நின்கேள்

எனவும்

> உன்கிளை யெனதன்றே வுறுதுய ருறலாமோ
> என்கிளை யிதுகாவென் னேவலி னினிதென்றான்

எனவும் கூறுவர். பிறப்பினைப் பொருட் படுத்தாது உள்ளத் தன்மையே கருதி இராமன் வேடர் தலைவனுகிய குகனை உடன் பிறந்தோனுக வேற்றுக் கொண்டமையை ஈண்டு அறிகின்றோம்.

குரக்கினத் தலைவனுகிய சுக்கிரீவனை உடன் பிறந்தவனுக இராமன் ஏற்றுக் கொண்டமையையும் அடுத்துக் காண்போம். தானே சென்று அழைத்து வருவதாகக் கூறிப் புறப்பட்ட அநுமன் சுக்கிரீவனையடைந்து இராமனுடைய வரலாற்றினையும் பெருமையினையும் எடுத்துச் சொல்லி அழைத்து வந்தான். இராமன் இருக்கைகாட்ட இருந்த சுக்கிரீவன் எழுந்து நின்று ஐயனே! எனது முன்னவன் என்னை அல்லற் படுத்துகின்றான்; அவனுக்கு ஆற்றாது இம் மலையிலிருந்து வாழ்கின்றேன்; அஞ்சலென்று என்னை யேற்றருள வேண்டுமென வேண்டினன். இதனைச் செவி

TAMIL SANGAM

யுற்ற இராமன் உள்ளம் இரங்கினன். நீ இதுவரை பெற்ற இன்ப துன்பங்கள் போக, இனி வருகின்ற இன்ப துன்பத்தில் யானும் பங்கு கொள்கின்றேன். வேறு கூறுவானேன்; நினது பகைவர் எனது பகைவரே யாவார்; நினது உற்றார் எனது உற்றாரே யாவர்; என்னுயிர்த் துணைவனும் நீயே யன்றோ வென்று கூறி அடைக்கலமாக வேற்றுக்கொண்டான்.

மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினும் உன்னோ
டுற்றவ ரெனக்கு முற்றார் உன்கிளை யெனது என்காதற்
சுற்றமுன் சுற்றம் நீயே யின்னுயிர்த் துணைவ னென்றான்

என்றிங்ஙனம் இராமன் சுக்கிரீவனோடு மனங் கலந்து உறவு பூண்டமையை விளக்கி யிருக்கின்றார் கம்பர்.

வந்தடைந்த வீடணனை யேற்றுக் கொள்வது பற்றி ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைக் கூறினார்கள். சுக்கிரீவன் முதலியோர் வீடணனை யேற்றுக் கொள்ளலாகாது என்று கூறினார்கள். அநுமன் மட்டும் வீடணனின் உள்ளத்தையும் அவன் குடும்பத்தார் நிலையையும் முன்னரே உணர்ந்தவனாதலின் அவனை யேற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினான். அநுமன் கூறியதே தக்கது எனப் பல காரணங்களால் விளக்கிக் கூறிய இராமன் வீடணனை யழைத்துவர வேண்டினன். வீடணனும் மிக மகிழ்ந்து சென்று இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன். இராமன் அருளோடு அவனை நோக்

கித் "தாழ்கட லிலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று கூறி இளையவனை அவனுக்கு முடி சூட்டவும் வேண்டினன். இதனைக் கேள்வியுற்ற வீடணன் "இளையவற் கவித்தமோலி யென்னையுங் கவித்தி" யென வேண்டினன். வீடணனின் உள்ளன்பை வியந்த இராமன்

குகனொடு மைவரானோம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவரானோம் எம்முழை யன்பின்வந்த
அகனமர் காதலைய நின்னொடு மெழுவ ரானோம்
புகலருங் கானந்தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை

யெனக் கூறி உடன் பிறந்தாருள் ஒருவனாய் அவனையும் ஏற்றுக் கொண்டான். நால்வராயிருந்தோர் இங்ஙனம் ஐவராய், அறுவராய், எழுவராகவும் ஆன வரலாற்றைக கம்பர் விரித்துரைக்கு முகத்தால் அனைவரையும் உடன் பிறந்தாராய்ப் பேண வேண்டுதலின் இன்றியமை யாமையையும் விளக்கியிருக்கின்றார். இப் பகுதிகளுள் சகோதரத்துவம் எனப்படும் உடன் பிறப்புரிமை வளர்க்கப் பட்டிருத்தலை யறியலாம்.

அடைந்தோரை யாதரித்தல், தீமை புரிவோர் உடன் பிறந்தோரே யாயினும் அவரினின்றும் நீங்குதல் ஆகிய இறவறங்களும் வளர்க்கப்பட்டிருக்கும் முறையை யடுத்துக் காண்போம். அடைந்தோரை யாதரித்தல் வீரத்தினுஞ் சிறந்ததெனவும், உடன் பிறந்தாரேனும் தீயோராயின் அவரைவிட்டு நீங்குதல் செய்ந்நன்றி யறிதலினும் சிறந்ததெனவும் கம்பர் தம் நூலுள் விளக்கிக் காட்டியிருக்கின்றார். இராமனுடைய சொல்லும் செயலும் அடைந்தோரை யாதரித்தலே சிறந்த வறமென்பதை விளக்கி நிற்கின்றன. வீடணன் சொல்லும் செயலும் தீயோரைத் தீயினும்

அஞ்சவேண்டும் என்பதை யெடுத்துக் காட்டுவதாக விருக்கின்றன.

அஞ்சலெனச் சுக்கிரீவனுக்கு அடைக்கலந் தந்த இராமன் வாலியோடு வலியச்சென்று பொருமாறு அவனை ஏவினன். வாலியும் இளவலும் பெரும் போர் புரிந்தனர். வாலியுடன் நேர் நின்று பொருவோர் வலிமையில் பாதியை யிழப்பர் என்பதை யறிந்த இராமன் மறைந்து நின்று வாலி மீது அம்பை யெய்தான். உரத்தில் அம்பேறிய அளவில் அயர்ந்து விழும் வாலியின் முன் சென்று நின்றான் இராமன். "அறத்தை யழிக்கப் பிறந்தனையே" யென்பது போல்வன பல கூறி வாலி இராமனை யிகழ்ந்தான். இராமன் தான் செய்தது தவறன்று என்பதை யெடுத்துக் காட்டினன். அறம் இது மறம் இதுவென வறியாது நினது உடன் பிறந்தோன் மனைவியை நீ வெளவி வாழ்கின்றாய்; அதுமட்டு மன்று; சுக்கிரீவனை யான் ஆருயிர்த் துணைவனாக வேற்றுக் கொண்டேன்;

எதிலாரு மெளியரென் றுரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ

என இராமன் மறுமொழி பகர்ந்தான். மீண்டும் வாலி மறைந்து நின்றெய்ததற்குக் காரணம் வினவிய போதும் நினது உடன் பிறந்தானுக்கு எனது தமையன் அடைக்கல மீந்தான்; ஆகவேதான் நின்னைக் கொன்றான் என்று இலக்குவன் விடை தந்தான். எனவே நேர் நின்று பொரும் வீரத்திலும் அடைந்தோரை யாதரித்தலே சிறந்தவற மெனக் கொண்

டான் இராமன் எனக் கருத வேண்டி யிருக்கின்றது. முதனாட் போரிலேயே மணிமுடியை யிழந்ததோடு மட்டுமன்றிப் படைக்கலங்களையும் இலங்கை மன்னன் இழந்து நின்றானாக அது கண்ட இராமன் இன்று போய்ப் போர்க்கு நாளை வாவென வியம்பி விட்டா னென அறிகின்றோம். படைக்கல மிழந்தானோடு போர் புரிதல் அறமன்றெனக் கருதிய இராமன் மறைந்து நின்று அம்பை யேவ இசைவான் கொல் என்னும் வினா வெழத்தான் செய்கின்றது. வீரத்தையும் அடைந்தோரை யாதரித்தலையும் ஒப்ப நோக்கிய பொழுது அடைந்தோரை யாதரித்தலே சிறந்த வற மென இராமன் கொண்டான். ஒன்றாக வுயர்ந்த வறம் அடைந்தோரை யாதரித்தலென்பதும் அடுத்து வைத் தெண்ணத் தக்கது வீர மென்பதும் இராமன் கருத் தாத லறியப்படும். வீரத்தைக் குறைந்ததாக வெண் ணினன் இராமன் என்பது கருத்தன்று; இருவறங் களினும் அடைந்தோரை யாதரித்தலே சிறந்த வற மெனக் கொண்டா னென்பதே கருத்தாகும். திரு வள்ளுவர் அறங்களை முறைப் படுத்திக் கூறும் பொழுது

> ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று

எனக் கொல்லாமையை முன்னும் பொய்யாமை யடுத்து வைத்தும் போற்றி யிருக்கின்றார். இம் முறையிலேயே இதனையும் கொள்ளுதல் வேண்டும். ஏதிலார், எளியார் ஆகியோருடைய துன்பங்களைப்

போக்குவதே தனது கருத்தென்றும் இராமன் கூறி யிருக்கின்றான். அடைக்கலம் புகுந்தோரை ஏற்றுக் கொள்வதற்கு முதலிடம் தந்த காதை இராம கதை யாகும். எனவேதான் இதனை அடைக்கலக் காதை யெனக் கூறுவர்.

அடைக்கலம் புகுந்தோரை யேற்றுக் கொள்ளுத லின் இன்றியமையாமையை இராமன் விளக்கிக் கூறிய பகுதியும் ஈண்டு நினைவு கூர்தற்குரிய தொன்றாகும்.

தென்கரை மருங்கு வந்தடைந்த வீடணனை அடைக்கலமாக வேற்றுக்கொள்வது பற்றித் தத்தங் கருத்துக்களைக் கூறினார்கள் தலைவர்க ளனைவரும்.

> வஞ்சனை யியற்றிட வந்த வாறலால்
> தஞ்சென நம்வயிற் சார்ந்து ளானலன்

எனச் சுக்கிரீவன் வீடணனைப்பற்றித் தான் கொண்ட கருத்தை விளக்கினான். அடுத்துச் சாம்பனும் அதனையே யாதரித்து அரக்கர்கள் மாயச் செயல்புரிதலில் வல்லவர்கள்;

> கானகத் திறைவியோ டுறையுங் காலையின்
> மானென வந்தவன் வரவை மானுமிவ்
> வேனையான் வரவும்

என்று கூறி ஏற்றுக்கொள்ள லாகாதென்று கூறி னான். நீலனும் அஃதே உண்மையுரை யென்றான். அடுத்து, அநுமன் தீயன் என்று இவனை யான் ஐயு றவில்லை; இவன் கள்ளமற்ற உள்ள முடையவனென் பதை அவனுடைய முகமே விளக்குகின்றது; கொல்லு மின் இவனை யென்று அரக்கன் கூறிய வெல்லையில் தூதரைக் கொல்லுதல் தூயதன்றெனக் கூறி யென் னைத் தப்புவித்தான்; இவனது இல்லம் அந்தணர்

இல்லமெனப் பொலிந்ததை நான் கண்களாற் கண்டேன்; இவனுடைய மகளாகிய திரிசடையே நமது தேவிக்கு ஆருயிர்த் துணையாக விருந்து ஆறுதல் கூறி வருகின்றாள்; ஆகையால் இவனை நாம் ஏற்றுக் கொள்ளுதலே தக்கதாகு மெனக் கூறினன்.

இதனைக் கேட்ட இராமன் மிக மகிழ்ந்தான்; அநுமனையும் பாராட்டினன். அநுமன் கூறியதே செய்யத் தக்கதென்பதைப் பல காரணங்கள் கொண்டு இராமன் விளக்கினன்.

இவன் வந்தடைந்த காலத்தை நாம் முதலிற் சிந்திக்க வேண்டும்; இவனுடைய ஆசை அரசின்மேலதேயன்றி மற்றின்று என்பதை இவன் நம்மை வந்தடைந்த செயலே விளக்குகின்றது; இவனை யேற்றுக் கொள்வதனால் நம்மை வந்தடைவது வெற்றியே யாயினும் ஆகுக, அன்றித் தோல்வியே வரினும் வருக; அடைக்கலம் புகுந்தோனை யேற்றுக் கொள்வதைத் தவிர ஆராயவேண்டிய தென்ன விருக்கின்றது; இவன் வந்த நேரத்தையும் இவன் முன்பு செய்த செயல்களையுங்கூட நாம் கருதத் தேவையில்லை; அடைக்கலமாக வந்த இவனை ஆருயிர்த் துணைவனாக வேற்றுக் கொள்வதே நாம் செய்யவேண்டிய செயலாகும்; இவன் பிறகு நமக்கே தீமை செய்யினும் வரும் பழி அவனுக்கே யன்றி நமக்கன்று; தன்னை வந்தடைந்த புறா வொன்றின் பொருட்டுத் தன்னுயிரை யீந்த மன்னன் சிபியின் வரலாறு மாநிலம் அறிந்த தொன்றன்றோ; இவனால் நாம் இறந்துபடும் நாளொன்று கிடைக்குமானால் அதுவே நாம் என்றென்றும் இருக்கும் நாளிற்கு விதையிடு நாளா

கும்; ஆலமுண்ட நீலகண்டன் செயலை யறியாதார் யார்!

> உடைந்தவர்க் குதவா னாயின் உள்ளதொன் றீயா னாயின்
> அடைந்தவர்க் கருளா னாயின் அறமென்னும் ஆண்மை யென்னும்;

பேடையைப் பிடித்த வேடனுக்கு உதவி செய்த புள்ளின் வரலாறு அனைவரும் அறிந்த தொன்றல்லவா! ஆதிமூலமே யென்றழைத்த யானைக்கு அஞ்சேல் என்று கூறி ஆதிமூர்த்தி அருளிய வரலாற்றை அறியார் யார்? தஞ்செனத் தன்னை யடைந்த மைந்தனைச் சிவனும் கூற்றிடத்தி னின்றும் தப்புவித்தா னல்லனோ! சனகியின் பொருட்டு இலங்கை மன்னனுடன் பொருது எந்தையும் இறந்துபட்டா னல்லவா; இவை மட்டுமல்ல; அடைக்கலம் புகுந்தோரை யாதரியாதவன் அரு நரகிடை வீழ்வான் என வேதங்களும் கூறுகின்றன; ஆகவே வந்தடைந்த வீடணனை யேற்றுக் கொள்ளுதலே அறச் செயலாகுமென இராமன் கூறி வீடணனையும் அழைத்து வருமாறு ஆணையிட்டான்.

இங்ஙனம் அடைந்தோரை யாதரித்தல் அறங்களனைத்துள்ளும் தலை சிறந்த வறமாக இராம காதையுள் போற்றப் பட்டிருக்கின்றது. இதனைப்போன்றே தீயோரை விட்டு நீங்குதல் செய்ந் நன்றி யறிதலினுஞ் சிறந்ததாக ஆசிரியரால் காட்டப் பட்டிருக்கின்றது.

போர்க்களம் புகுந்த கும்பகருணனை அவன் திறமறிந்த இராமன் நம்பக்கல் கூடுமேல் கூட்டி வருக வென வீடணனை யனுப்பினன். வீடணனுஞ் சென்று கும்பகருணன் அடிபணிந்து நின்றான். அடிபணிந்த வீடணனைக் கும்பகருணன் தழுவி யெடுத்து நீ இரா

மனே யடைக்கலம் அடைந்தாயென்பது கேட்டுப் புலத்தியன் மரபு மாயாப் புண்ணியம் பொருந்திற்றென்று மகிழ்ந்தேன்; அமிழ்துண்பான் நஞ்சுண்ண விழைவது போன்று நீ ஈண்டெய்திஞய்; வந்த தென்கருதியென்று வினவிஞன்.

அதனைக் கேட்ட வீடணன் எனக்கு இன்னருள் சுரந்த வீரன் நினக்கும் அருள்புரிய விரும்பி நிற்கின்ருன்; ஆதலால் அவனே வந்தடைவாயாக; அவனருள நீ பிறவி யொழியப் பெற்றுப்பேரின் வீட்டையடைவாய்; தாய், தந்தை, உற்ருர், உறவினர் ஆகியவர்களுள் எவர் தீமை புரியினும் தருமம் பார்ப்பார் அவரிடந் தாங் கொண்டுள்ள உறவு கருதி அவர் செய்த தீமையைப் பொருர்; அவரிடந் தாம் கொண்டுள்ள உறவால் வருவது துன்பமே யென்று கருதி அவர் உறவைத் துறப்பர். ஒருவன் தீமை செய்தாஞகை, அவன் பொருட்டு அவனுடைய குலத்தோர் ஏன் இறந்துபட வேண்டும்? அவனேத் திருத்த முடியுமாஞல் திருத்துவது நல்லது; திருத்த முடியாதாயின் அவனே விட்டு நீங்குதலே சாலச் சிறந்த செயல்; உடம்பில் தோன்றிய கட்டியை அறுத்து உதிரம் மாற்றித் துயரந் தீராதார் யார்? கடலிடைக் கோட்டந் தேய்த்து வாஞளை வீஞளாக்குதல் அறிவுடையார் செயலன்று.

எனக்கு அவன் தந்த செல்வத்து இலங்கையும் அரசும் நினக்கு யான் தருகின்றேன்; வேதநாயகனே நின்னை யழைத்து வருமாறு வேண்டினன்; ஆகையால் நீயும் என் போன்று வந்து இராமனேச் சரணடைய வேண்டும் என்று வேண்டி நின்ருன்.

யாவராயினும் தீமை செய்பவராயின் அவரை விட்டு நீங்குதல் வேண்டுமென்பதற்குரிய காரணங்களை—தான் இலங்கை வேந்தனை விட்டு இராமனை யடைந்ததற்குரிய காரணங்களை வீடணன் விளக்கி முடித்தான்.

இவற்றைக் கேட்ட கும்பகருணன் சிறிதும் சிந்தித்தலின்றித் தனது முடிவை வீடணனுக்கு எடுத்து விளம்பினான்.

நீர்க்குமிழி போன்ற நிலையுடைய தென்பர் வாழ்க்கையை; அவ் வாழ்க்கையைப் பெரிதாகப் பேணி, இன்று வரை உணவிட்டு வளர்த்துப் போருக்குப் போய் வா வென்று கூறியனுப்பியவன் பொருட்டு உயிரைக் கொடுத்தலினின்றுந் தவிரேன்; எனது துன்பத்தைக் குறைக்க நீ விரும்புவையாயின் விரைந்து சென்று இராமனை யடைவாயாக; அதுவே நீ எனக்குச் செய்யும் பேருதவியாகும்;

தலைவன் அறியாமையால் தீமை புரிவானாயின் அவனைத் திருத்த முடியுமானால் திருத்துதல் நன்று; திருத்த வியலாதாயின் செய்தற்குரிய செயல் வேறு என்ன விருக்கின்றது? உண்டவர்க்குரிய செயல் அவன் இறந்து படுவதற்கு முன்னரே இறந்து படுதலாமென முன்னோர் கூறுவர்;

இந்த விலங்கையின் செல்வத்தைப் பெரிதாகப் பேணி எனது தமையனது உயிர் கொண்ட பகைவனைக் கும்பிட்டு வாழ யான் ஒருப்படேன்;

அநுமனையும் மற்று முள்ள குரங்கினங்களையும் இதோ கணப் பொழுதில் அழித் தொழிக்கின்றேன்; என தாற்றலைக் காண்பாயாக;

ஆகுவ தாகுங் காலத் தழிவது மழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்;

ஆகையால் நீ என் பொருட்டு இரங்குதல் வேண்டா; விரைந்து சென்றடைவாயாக எனக் கும்ப கருணன் கூறி அனுப்பினன்.

உடன் பிறந்தோர்களில் ஒருவன் எண்ணம் செய்ந்நன்றி யறிதலின் மேலதாயிற்று; மற்றொருவன் எண்ணம் யாவராயினும் தீமை செய்வாராயின் அவரை விட்டு நீங்குதல் வேண்டும் என்பதன் மேலதாற்று. பின்னதே வெற்றி பெற்றது; முன்னது அழிந்து பட்டது.

பாரதத்துள் செய்ந்நன்றி யறியும் செம்மலாகிய கர்ணனைத் துரியனிடமிருந்து பிரிக்க முயற்சி செய்யப் பட்டது. ஆனால் முயற்சி வெற்றி பெறவில்லை. இராமாயணத்துள் ஒருவருடைய முயற்சியுமில்லாமலே ஒருவன் இராவணனை விட்டுப் பிரிந்தான். மற்றொருவனைப் பிரிக்க முயற்சி செய்தார்கள்; ஆனால் முடியவில்லை. பிரிக்க முயற்சி செய்தும் பிரிக்க முடியாத காலம்—செய்ந் நன்றி யறிதல் சிறந்திருந்த காலம் பாரத காலம். முயன்றும், முயற்சியின்றியும் ஒருவரைப் பிரிக்க வியன்றும் மற்றொருவரைப் பிரிக்க வியலாமையும் இருந்த காலம்—செய்ந் நன்றி யறிதலின் ஆணிவேர் ஆட்டங் கொடுத்து மற்றொன்றிற்கு இடங் கொடுத்த காலம் இராமாயண காலம். காலத்திற் கேற்றவாறு அறம் வளர்ச்சியுறு மல்லவா! இரு நூல்களுள்ளும் செய்ந்நன்றி யறிதலுடையோர் அழிந்து பட்டாராக ஆசிரியர்களால் காட்டப் பட்டிருக்கின்றது. செய்ந்நன்றி யறிதல் மிகப் பழைய அறம் போலும்!

MADURA TAMIL SANGAM